# தமிழரசு

1.8.1996 ரூ.3



உள்ளே: 1996-97-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை - மாண்புமிகு முதல்வர் பதில் உரை



# இந்த இதழில்....


**தமிழ்நாட்டில் புதிய கார் தொழிற்சாலை** 2
பாவாணர் படைப்புகள் அரசுடைமை 4
**மெழுகுவத்தி** 5
படமும் செய்தியும் 8
**இரு பெருந்தலைவர்கள்** 10
எப்படிக் கைகூடும் 12
**சிறுவர்களைப் பாதிக்கும் சர்க்கரை நோய்** 13
நிதி நிலை அறிக்கை 17
**நிதி நிலை அறிக்கை – முதல்வர் பதில் உரை** 41
கடல் காகம் 57
**செய்திச் சரம்** 64
முதல் மார்க் மந்திரம் 66
**ஒலிம்பிக்** 69
ஆசிரியர் மடல் 72



# தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
**ஆடித் திங்கள் :17**
**மலர் : 27 இதழ் : 3**
**1.8.1996**
**விலை ரூ. 3**

# தமிழ்நாட்டில் புதிய கார் தொழிற்சாலை

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 17.7.96 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்ததற்கிணங்க, சென்னையை அடுத்த ஸ்ரீபெரும்புதூர் வட்டத்தில் மோட்டார் கார்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்குத் தென் கொரிய நாட்டைச் சேர்ந்த ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தக் குறிப்பு முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் 18.7.96 அன்று கையொப்பமிடப் பட்டது. இந்த ஒப்பந்தக் குறிப்பாணையில் அரசு சார்பாகத் தொழில்துறைச் செயலாளர் பி.சி. சிரியாக் இந்நிறுவனத்தின் சார்பாக அதன் தலைவர் பி.ஜே. பார்க் ஆகியோர் கையொப்பமிட்டனர்.


**தமிழரசு**

*ஆசிரியர் / வெளியிடுபவர்:*

**என்.எஸ். பழனியப்பன்** இ.ஆ.ப.
இயக்குநர்,
செய்தி - மக்கள் தொடர்புத்துறை

*ஆசிரியர் குழு:*

எம். அசோகன்
பி.எல். இராசேந்திரன்
ஜி. பாஸ்கரன்
அ. மதிமாறன்
ச. ஜெயலலிதா

*ஓவியர்கள்:*

என். குமாரசாமி
சி. ஜெயச்சந்திரன்
பா. குமார்
தி. சம்பத்குமார்
டி. மகேஸ்வரி

*அச்சகம்:*

தமிழரசு அச்சகம்
அரசினர் தோட்டம்
அண்ணா சாலை
சென்னை - 600 002.
அலுவலகத் தொலைபேசி எண்:
568926 / 568927


ஹூண்டாய் நிறுவனக் குழு தென் கொரியாவில் மிகப் பெரிய பெருமை வாய்ந்த ஒரு தொழில் நிறுவனம் ஆகும். இதன் விற்பனை அளவு ரூ. 2,27,500/- கோடியாகும். இந்நிறுவனக் குழுவானது தானியங்கிப் பொருட்களைத் தயாரித்தல், கப்பல் கட்டுதல், கட்டுமானப்பணிகள், மின்னணுவியல் போன்றவற்றில் ஆர்வம் கொண்ட 45 நிறுவனங்களை உள்ளடக்கியதாகும். ஹூண்டாய் நிறுவனமும், மற்றும் ஹூண்டாய் கட்டுமான நிறுவனமும் ஏற்கெனவே இந்தியாவில் செயல்பட்டு வருகின்றன.

ஹூண்டாய் மோட்டார் நிறுவனம் கொரியா நாட்டில் மட்டும் ஆண்டிற்கு 1.75 மில்லியன் கார்கள் தயாரித்து, அந்நாட்டின் மொத்த கார் விற்பனையில் 55 விழுக்காடு பூர்த்தி செய்கிறது. இந்நிறுவனத்தின் விற்பனை அளவு ரூ. 45,500 கோடியாகும்.


உலகளவில் இந்நிறுவனக் கார் உற்பத்தி 13வது இடத்தை வகிக்கின்றது; இது 170 நாடுகளுக்குக் கார்களை ஏற்றுமதி செய்கிறது. தாய்லாந்து, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் மற்றும் போட்ஸ்வானா போன்ற நாடுகளில் 'அசெம்பளிங்' பிரிவுகள் உள்ளன. இந்நிறுவனம் இதே போன்ற ஒரு தொழிற்சாலையைத் துருக்கி நாட்டில் நிறுவி வருகிறது.

தமிழ்நாட்டில் நிறுவப்படவுள்ள ஹூண்டாய் மோட்டார் திட்டமானது கொரியாவில் உள்ளது போன்ற ஒரு மாபெரும் உற்பத்தித்திட்டமாகும். இந்நிறுவனம் ஆரம்பத்தில் 1,00,000 கார்களைத் தயாரிக்க உத்தேசித்துள்ளது. இதன் அளவு இரண்டாம் பகுதியில் 2,00,000 கார்கள் வரை ஆகும்.

இந்நிறுவனம் முதல் ஐந்தாண்டுகளில் ரூ. 2,450/- கோடி முதலீட்டிலும், பின்னர் அடுத்த ஐந்து ஆண்டுகளில் விரிவாக்கத் திட்டமாக ரூ. 14,000/ கோடி முதலீடு செய்வதற்கும் மத்திய அரசின் வெளிநாட்டு முதலீட்டு

வளர்ச்சிக் குழுமத்திடம் ஒப்புதல் பெற்றுள்ளது. அடுத்த பத்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 1.1 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு முதலீடு இருக்கும். ஹூண்டாய் மோட்டார் நிறுவனத்தில் 100 சதவீதம் துணை நிறுவனமாக இந்த நிறுவனம் நிறுவப்படவுள்ளது.

இந்தத் துணை நிறுவனம் ''ஹூண்டாய் மோட்டார் நிறுவனம்'' என்ற பெயரில் இந்தியாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 2000 முதல் 3000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 20,000 முதல் 30,000 நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கும். இதன் உற்பத்தி வியாபார ரீதியில் 1998-ஆம் ஆண்டு மத்தியில் தொடங்கும்.



இந்நிறுவனம் 1.3 மற்றும் 1.5 லிட்டர் திறன் கொண்ட புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய கார்களைத் தயாரிக்கும். அடுத்த 4 ஆண்டுகளில் 350 மில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு 100 விழுக்காடு வெளிநாட்டுப்பங்கு முதலீடு இருக்கும்.

எவ்விதமான 'சிகேடி' 'எஸ்கேடி' இறக்கு மதி இல்லாமல் இந்தக் கார்கள் தயாரிக்கப்படும்.

### உதிரி பாகங்கள் தயாரிப்பு

முதல் ஆண்டில் 70 சதவீதம் உள்நாட்டுப் பொருட்களைக் கொண்டும் 2001 ஆம் ஆண்டு வாக்கில் 100 விழுக்காடு உள்நாட்டுப் பொருள்களைக் கொண்டும் தயாரிக்கப்படும்.

ஆரம்ப கால வெளிநாட்டு முதலீட்டின் மூலம் மூலதனப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படும். 1999-ஆம் ஆண்டில் இந்த ஏற்றுமதியின் அளவு 54.1 மில்லியன் அமெரிக்க டாலர் அளவிலும் இத்தொகை 2003-ஆம் ஆண்டில் 267 மில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கும் அதிகரிக்கும்.

இந்தத் திட்டத்திற்கு ஹூண்டாய் மோட்டார் கம்பெனிக்கு உதிரி பாகங்கள் வழங்கும் 10 பெரிய நிறுவனங்கள் தங்களது நிறுவனங்களைச் சென்னையில் நிறுவ வாய்ப்பு உள்ளது. இதன் மூலம் ரூ. 307 கோடி முதலீடு இருக்கும்.

இத்திட்டத்தை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் வழங்க இவ்வரசு இசைந்துள்ளது.

சென்னையிலிருந்து 35 கி.மீ தொலைவில் தேசிய நெடுஞ்சாலை எண் 4-ல் இருங்காட்டுக்கோட்டை கிராமத்தில் சுமார் 550 ஏக்கர் நிலத்தை இந்நிறுவனம் தேர்வு செய்து உள்ளது. இவை அனைத்தும் பட்டா நிலங்களாகும். அரசு இந்நிலங்களைக் கையகப்படுத்தி நிறுவனத்திற்கு விற்பனை செய்யும்.

இந்நிறுவனத்திற்குத் தேவையான 0.8 எம்.ஜி.டி. அளவிற்கான தண்ணீர் வழங்குவதற்கு அரசு ஒத்துக்கொண்டுள்ளது.

இந்நிறுவனத்திற்கு 30 எம்.வி.எ. சக்தி கொண்ட மின்சாரம் தேவைப் படும். இதனையும் அரசு வழங்க இசைந்துள்ளது.

இந்நிறுவனத்திற்குத் தேவையான தொலைபேசி வசதி, ஏற்றுமதி செய்யத் துறைமுக வசதி, சாலை வசதி, மருத்துவ மற்றும் பயிற்சி வசதிகளைக் கேட்டுள்ளது. இதனைச் செய்து தருவதற்குத் தேவையான உதவிகள் அளிப்பதற்கு அரசு ஒத்துக்கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் துவக்கப்படும் புதிய தொழில் நிறுவனங்களுக்குத் தற்போது வழங்கப்படும் விற்பனை வரி தள்ளிவைத்தல்/விலக்கு அளித்தல், மின் கட்டணச் சலுகைகள், மூலதன ஊக்க உதவிகள், இந்நிறுவனத்திற்கும் நீட்டிக்கப்படும்.

ரூ. 1500 கோடி மற்றும் அதற்கு அதிகமான மூலதனத்தோடு தமிழ்நாட்டில் துவக்கப்படும் மிகப்பெரிய திட்டங்களுக்கு இவ்வரசு சமீபத்தில் சில சலுகைகளை அறிவித்துள்ளது. இந்நிறுவனம் முதலீட்டு நிபந்தனைகளைத் திருப்திகரமாக நிறைவு செய்தால் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகளைப் பெற இந்நிறுவனம் தகுதி பெறும். இதன் அடிப்படையில் இந்நிறுவனம் 14 ஆண்டுகளுக்கு விற்பனை வரி தள்ளிவைத்தல், விலக்கு அளித்தல் போன்ற சலுகைகள் பெறும்.

# பாவாணர் படைப்புகள் அரசுடைமை

மொழி ஞாயிறு எனத் தமிழ் நெஞ்சங்களால் புகழப் பட்டவரும், தனித் தமிழ் இயக்கத் தளநாயகரும், அரசின் ''அகர முதலி'' தயாரிப்பைத் தொடங்கிடத் துணை நின்ற வருமான பழுத்த பைந்தமிழ்ப் பெருமகனார், மறைந்த தேவ நேயப் பாவாணர் அவர்களின் அரிய நூல்களை அரசுடைமை யாக்கவும், அவரது குடும்பத் துக்குக் காப்பு நிதியாகவும் ரூபாய் இருபது இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

பளபளப்பான கருத்த முகம்; ஒளிநிரம்பி வழியும் கூரிய விழிகள்; அகன்று ஏறிய நெற்றி; அடர்த்துச் சிலிர்க்கும் அரிமா மீசை; ஏக் கழுத்து, பீடுநடை; பெருமிதமான உடை; அறிவு தெறிக்கும் கணீரென்ற பேச்சு; குழந்தை உள்ளம் - இவற்றின் மொத்த உருவம்தான் பாவாணர் அவர்கள்.

நெல்லை மாவட்டத்தில் சங்கரநயினார்கோவில் என்னும் ஊரில் திருவாளர் ஞான முத்து, பரிபூரணம் ஆகியோருக் குக் கி.பி. 1933 சுறவம் 26 (7.2.1902) ஆம் நாள் மொழிப் பேரறிஞர் ஞா. தேவநேயப் பாவாணர் பிறந்தார். பண்டிதர், புலவர், வித்வான், கலை முதுவர் ஆகியவற்றைத் தேறி முப்பத்து நான்காண்டுகள் பல்வேறு கல்வி நிலையங்களில் பணியாற்றிய பாவாணர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ஆராய்ச்சித்துறை யில் ஐந்தாண்டுக் காலம் பணி புரிந்தார்.

பிறமொழித் தாக்கத்தி லிருந்து தமிழைப் பாதுகாக்கத் தமிழ்க்கடல் மறைமலைய டிகளார் வழியைப் பின்பற்றி 'உலகத் தமிழ்க் கழகம்' கண்ட பெருமைக்குரியவர் பாவாணர்.

அவர்தம் கடுமையான உழைப்பாலும், உண்மை காணும் அவாவாலும் கடந்த அறுபதாண்டுக் காலத்தில் மறைந்து கிடந்த . பல தமிழுண்மைகள் வெளிப் பட்டன.

செந்தமிழ்ச் சொற்பிறப் பியல் அகர முதலித் திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றிய பாவாணர் அவர்கள் 16.1.81-ல், அதிகாலையில் காலமானார்.



**பாவாணர் எழுதியுள்ள நூல்கள்:**

- ★ ஒப்பியன் மொழி நூல்
- ★ முதல் தாய் மொழி
- ★ சுட்டு விளக்கம்
- ★ திராவிடத் தாய்
- ★ இயற்றமிழ் இலக்கணம்
- ★ செந்தமிழ்க் காஞ்சி
- ★ தமிழர் திருமணம்
- ★ பழந்தமிழாட்சி
- ★ கட்டுரை வரைவியல்
- ★ தமிழ்நாட்டு விளையாட்டுகள்
- ★ உயர்தரக் கட்டுரை இலக்கணம்
- ★ சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதியின் சீர்கேடு
- ★ தமிழ் வரலாறு
- ★ தமிழர்வரலாற்றுச்சுருக்கம்
- ★ கட்டுரை கசடற
- ★ மண்ணில் விண் அல்லது வள்ளுவர்கூட்டுடைமை
- ★ பண்டைத்தமிழர் நாகரிகமும் பண்பாடும்
- ★ இசைத் தமிழ்க் கலம்பகம்
- ★ சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்
- ★ வடமொழி வரலாறு
- ★ தமிழர் வரலாறு
- ★ தமிழர் மதம்
- ★ திருக்குறள் - தமிழ் மரபுரை
- ★ தமிழிலக்கிய வரலாறு
- ★ வண்ணனை மொழி நூலின் வழுவியல்.
- ★ The Primary Classical Language of the world.



# மெழுகுவத்தி

– கவிஞர் வைரமுத்து

தனக்காக அல்ல;
தன் திரிக்கரு
சிதைவதை எண்ணியே
அந்தத் தாய்
அழுகிறாள்.


மேனியில் தீ விழுந்து
நரம்புதான் எரியும்...
இங்கோ
நரம்பிலே தீ விழுந்து
மேனி எரிகிறது!

மரணத்தை
வரங்கேட்டா
அந்த உச்சித்தவம் நடக்கிறது?

அந்த ஒற்றைப் பூக்கொண்டை
செடியையே தின்னுகிறதே!

விரலை அழிக்கவா
அந்த
நெருப்புநகம் முளைத்தது?
நெருப்புப் பாசனம்
அங்கு

நீர்ப்பயிர் வளர்க்கிறது!
மௌனத்தை,
திரவ வார்த்தைகளால்
அந்தத் தீ நாக்கு
எத்தனை அழகாய்
உச்சரிக்கின்றது?
எந்தத் துயரத்தை
எழுதியெழுதி
இப்படி மசிகசிகிறது இந்தப் பேனா?
கண்டு சொல்லுங்கள்!
கண்ணெதிரே நடப்பதென்ன
கொலையா? தற்கொலையா?
எப்பொழுதுமே இதற்குத்
தேய்பிறையென்றால்
இது என்ன
சபிக்கப்பட்ட நிலவா?
இந்தத்
தீக்குளிப்பின் முடிவில்
மரணத்தின் கற்பு
ருசுவாகிறது!
இந்தச் சிதையை –
கலங்கரை விளக்காய்க் கருதி
வீட்டில் கப்பல்கள்
முட்டி மூழ்கும்!
அங்கே வடிவது
கண்ணீரென்றால் –
கண்கள் எங்கே?





ஓ! கண்களைத் தேடியே
அந்த அழுகையோ?

இந்தப் பிணத்திற்கு...
கொள்ளி வைத்த பிறகு தான்
உயிர் வருகிறது.

மனிதனைப் போலவே
இந்த
அஃறிணையையும் நான்
அதிகம் நேசிப்பேன்.

எனக்குள்
இது
சாவைச் சாகடிக்கும்!

என்
இரத்த நெய்யில்
இது
நம்பிக்கைச் சுடரேற்றும்

வாருங்கள் மனிதர்களே!
மரணத்திற்கும் சேர்த்து
நாம்
மௌன
அஞ்சலி செலுத்துவோம்!

அதோ!
உயிரின் இறுதி ஊர்வலம்
உடல்மேலேயே நடக்கிறது.

**— கவிஞர் வைரமுத்து எழுதிய**
**'இருத்தி எழுதிய தீர்ப்புகள்' என்ற நூலிலிருந்து.**

பத்மவாசன்



கண்ணாடி தயாரிக்கும் இங்கிலாந்து நாட்டின் பில்கிங்டன் நிறுவனத்தின் ரூ.550 கோடி முதலீட்டில் செங்கல் பட்டுக்கு அருகில் செங்குன்றம் கிராமத் தில் அமையவிருக்கும் கண்ணாடி தொழிற்சாலைக்கான ஒப்பந்தம் தலை மைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னி லையில் கையெழுத்தானது (16.7.96).



# படமும்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை மத்தியப் பணி யாளர் நலன் மற்றும் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள் சந்தித்தார் (21.7.96).




சென்னையில் நடைபெற்ற இராமநாதன் தங்க கோப்பை கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு கு. பிச்சாண்டி அவர்கள் பரிசுக் கோப்பை வழங்கினார். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு சுரேஷ் ராஜன், ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு மு.க. ஸ்டாலின், திரைப் பட நடிகர் திரு சரத்குமார் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர் (15.7.96).




மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைத் தமிழ்நாடு பிளாஸ்டிக் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் பட்ஜெட்டில் அளிக்கப்பட்ட சலுகைகளுக்குத் தங்கள் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்தார்கள். புரசைவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு ரெங்கநாதன் உடன் உள்ளார் (20.7.96).

# செய்தியும்



மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்களைப் பின்லாந்து நாட்டுத் தூதர் திரு பெங்ஜமின் பாசின் அவர்கள் சந்தித்து உரையாடினார் (17.7.96).

தென் மண்டல வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலை ஊழியர்கள் சங்க மாநாட்டை மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு வ. முல்லைவேந்தன் அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார் (20.7.96).



# இரு பெரும் தலைவர்கள்

''ஒருநாள் அந்தக் குடிசையின் முன்புறம் ஒரு கார் வந்து நின்றது. அந்தக் காரில் இருந்து உயரமான ஒருவர் இறங்கினார்.

''காரில் இருந்து இறங்கி வருபவரைப் பார்த்ததும்... குடிசையின் உள்ளே இருந்தவர், வெளியே வேகமாக ஓடி வந்தார். அவருக்கு இன்ப அதிர்ச்சி.

காரணம் காரில் இருந்து வந்தவர், சாதாரண மனிதர் அல்ல, முதலமைச்சர். தாம்பரம் குடிசையில் இருந்த அந்தப் பெரியவரோ சட்டமன்ற உறுப்பினர்.

மாநில முதலமைச்சர் தன் குடிசைக்கு வந்ததால்.. குடிசைவாசியான சட்டமன்ற உறுப்பினருக்கு இன்ப அதிர்ச்சி. மிகவும் மகிழ்ச்சியுடன், ''வாங்கய்யா... வாங்க வாங்க...'' என்று அன்புடன் வரவேற்றார் சட்டமன்ற உறுப்பினர்.

''இன்னும் ... நீங்க புறப்படலையா? சீக்கிரம் கிளம்புங்க.. என்றார் முதலமைச்சர்.

''எங்கே போகணும்..'' என்று கேட்டார் சட்டமன்ற உறுப்பினர்.

''என்னைய்யா இது? உன் தொகுதிப் பள்ளியைப் பற்றி அடிக்கடி சட்டமன்றத்தில் பேசுவாயே... இன்று அந்தப் பள்ளியின் ஆண்டு விழா. அழைப்பிதழ் தரவில்லையா?'' என்று கேட்டார் முதலமைச்சர்.''

''இல்லை அய்யா'' என்றார் சட்டமன்ற உறுப்பினர்.

முதலமைச்சர் தன்னுடன் வந்த அரசு அதிகாரிகளையும், தன் கட்சிக்காரர்களையும் ஒரு பார்வை பார்க்கிறார். அவர்கள்... என்ன செய்வது? என்ன சொல்வது என்று புரியாமல் தலைகுனிகிறார்கள்.''

'' 'சரி... சரி... சீக்கிரம் புறப்படு... ரெண்டு பேரும்... சேர்ந்தே விழாவுக்குப் போகலாம் என்கிறார் முதலமைச்சர்...''

" இதோ... ஒரு நிமிடம்... சீக்கிரம் போய் குளித்துவிட்டு வந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு சட்டமன்ற உறுப்பினர் குடிசையின் உள்ளே போனார்.

ஒரு நிமிடம் இரண்டு நிமிடம்... பத்து நிமிடம் ஆயிற்று. குளிக்கப்போன சட்டமன்ற உறுப்பினர் வெளியே வரவில்லை. முதலமைச்சர் தவித்தார்.



நேரம் ஆகிக் கொண்டே இருந்தது.

''காத்திருந்து, காத்திருந்து பொறுமை இழந்த முதலமைச்சர், ''உள்ளே என்னய்யா.. பண்றே – இன்னுமா குளிக்கிற?'' என்று கூறிக் கொண்டே எட்டிப் பார்த்தார். ஆனால் அங்கே அவர் கண்ட காட்சி அவர் நெஞ்சை நெகிழ வைத்தது.

சட்டமன்ற உறுப்பினர் குளித்துவிட்டு, இடுப்பில் ஒரு சின்ன துண்டைக் கட்டிக்கொண்டு, தனது ஒரே வேட்டியைத் துவைத்து, ஒரு நுனியைக் கம்பத்தில் கட்டி மறு நுனியைக் கையில் பிடித்து... ஈரம் உலர வேட்டியை வேக வேகமாக அசைத்துக் கொண்டிருந்தார். இந்தக் காட்சியைப் பார்த்துக் கண்கலங்கிய முதலமைச்சர், கனிவுடன் உறுப்பினரைக் கேட்டார்.

''ஏனய்யா.. நான்னா நாலு வேட்டி வாங்கி உடனே அனுப்பட்டுமா?''

''வேணாங்க! இது கிழிஞ்சுப் போச்சுன்னா அப்புறமா கேட்கிறேன்'' என்கிறார் சட்டமன்ற உறுப்பினர்.

சட்டமன்ற உறுப்பினரின் பதிலையும் அவர்தம் எளிமையையும் பார்த்து மிகவும் மகிழ்ந்தார் முதலமைச்சர்.

அவர்கள் வேறுயாருமல்ல, நம் தமிழ் நாட்டில் பிறந்தவர்கள்தான். இருவரும் தலைவர்கள். ஒருவர் – அதாவது சட்டமன்ற உறுப்பினர் தமிழ்நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்த அமரர் ப.ஜீவானந்தம், மற்றொருவர் முன்னாள் தமிழக முதலமைச்சர் காமராஜர் அவர்கள்.

**– என். சி. ஞானப்பிரகாசம் எழுதிய ''சின்னஞ்சிறு கதைகள்'' என்ற நூலிலிருந்து.**

**நன்றி : கற்பக வித்யா பதிப்பகம்**
**ஜே. 6, லாயிட்ஸ் காலனி, சென்னை – 14.**

**அட்டைப்பட விளக்கம்**

முதலாம் அட்டை :

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1996-97 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சட்டமன்றப் பேரவை முன் வைத்து உரையாற்றுதல்.

இரண்டாம் அட்டை:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னிலையில் 18.7.96 அன்று புதிய கார் தொழிற்சாலை நிறுவுவதற்குத் தென்கொரிய நாட்டைச் சேர்ந்த ஹூண்டாய் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.

நான்காம் அட்டை :

திரு. ப. ஜீவானந்தம் அவர்களது வரைப்படம் அவரது பிறந்த நாளை (21.8.1907) யொட்டி வெளியிடப்படுகிறது.

**தமிழரசு**
படிக்க ... பயன்பெற ... பாதுகாக்க

**'தமிழரசு' தமிழ்**
(மாதம் இருமுறை)
சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா .... ரூ. 72
அரையாண்டுச் சந்தா ... ரூ. 36
**'தமிழரசு' ஆங்கிலம்**
(மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ. 36
சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:
**உதவி இயக்குநர்**
**'தமிழரசு'**
**அரசினர் தோட்டம்,**
**அண்ணா சாலை**
**சென்னை – 600 002.**

**காலுக்குச் செருப்புமில்லை, கால் வயிற்றுக் கூழுமில்லை, பாழுக் குழைத்ததோமடா - என் தோழனே பசையற்றுப் போனோமடா.**

**– தோழர் ஜீவா**

# எப்படிக் கைகூடும்

தண்ணீரில் இருக்கும் மீனுக்குத்
தாகம் எடுத்ததாய் ஒரு தகவல் கேட்டு
வாய் விட்டுச் சிரித்தேன்!

உயிருக்கும் உயிரான உத்தமக் கூறு
உன் வீட்டுக்குள்ளேயே இருக்கின்ற
உண்மையை உணராமல்
குழம்பிய பார்வையுடன்
புனிதநகரம் ஒவ்வொன்றாகப்
புறப்பட்டுப் போய்க் கொண்டிருக்கிறாய்.

கபீர் உனக்கு ஒரு உண்மையைச் சொல்லுவான்:
கல்கத்தா - திபெத் என்று
கால்கடுக்க நடந்தாலும்
கடும்பயணம் சென்றாலும்
உனது ஆன்மா ஒளிந்திருக்கும் இடத்தை நீ
உணர முடியாவிட்டால், இந்த
உலகமே உனக்குப் பொய்யாகத்தான் ஆகும்.

கடவுள் கடவுள் என்று
கதைக்கிறோமே நாமெல்லாம்
உண்மையில் அது என்ன வென்று
இன்னமும் பிடிபடவில்லை எனக்கு.

அந்தி மயங்கும் நேரத்தில்
ஆரவாரக் குரல் எழுப்பி
ஆண்டவனை அழைக்கிறார்கள்!
ஏன்?
ஆண்டவன் செவிடு இல்லை என்பது நிச்சயம்;
அதனினும் நிச்சயம்,
சின்னப் பூச்சியொன்று நடக்கையிலே
சிறு சிறு கால்களால் அது எழுப்புகின்ற
குறுகுறு சத்தத்தைக் கூட
குழப்பமின்றிக் கேட்கின்ற
வல்லமை படைத்தவன் அவன் - என்பது!

ஜபமாலையைக் கையில் ஏந்தி
உருத்திராட்சக் கொட்டையை உருட்டியுருட்டித்
தள்ளுங்கள்...

விதவிதமான வினோத வடிவங்களைக்
குழைத்துக் குழைத்து நெற்றி மீது
தீட்டுங்கள்...

முடியைச் சடையாக்கி முடிந்த அளவு நீட்டி
சாகசத்தை அதில் சேர்த்தே
காட்டுங்கள்...



ஆனால்,
விசையைத் தட்டியதும் விரைந்து சுடும்
வகையில்
குண்டுகள் நிரம்பிய துப்பாக்கி
உள்ளத்தின் பள்ளத்தில்
உறைந்திருக்கும்போது
கடவுளை அடைவது
எப்படி உங்களுக்குக் கைகூடும்?

– கபீர்.

மருத்துவக் கட்டுரை:




# சிறுவர்களைப் பாதிக்கும் சர்க்கரை நோய்

**டாக்டர் அ. பன்னீர் செல்வம்**
செயலாளர், இந்திய நீரிழிவுக் கழகம்-தென் பிரிவு

சில நோய்கள் பெரியவர்களுக்கு மட்டுமே வரும்; சில நோய்கள் சிறுவர்களுக்கு மட்டுமே வரும். பேதம் பாராமல் சில நோய்கள் இரு தரப்பினருக்கும் வரும்.

அப்படி வருகின்ற நோய்களைப் பெரியவர்களால் தாங்கிக் கொள்ள முடியும். சிறியவர்களால் அது முடியாது. இது மட்டுமல்ல; அவ்வாறு பாதிக்கப்பட்ட சிறியவர்களைப் பார்க்கிற போது பரிதாபமாக இருக்கும். இந்தப் பரிதாபமே பல பெரியவர்களையும் – அதாவது பெற்றோர் களையும் மனபாதிப்பிற்கு ஆளாகச் செய்து விடும்.

'சர்க்கரை' என்கிற பெயர், கேட்பதற்கு இனிப்பாக இருந்தாலும், ''சர்க்கரை நோய்'' மிகக் கசப்பான உடல் நலக்கேட்டை உண்டாக்கும் ஒரு நோயாகும். இந்த நோயானது பெரியவர் - சிறியவர் வேறுபாடின்றி எல்லோருக்கும் ஏற்படும். சின்னஞ்சிறிசுகளை அந்நோய் எவ்வாறெல்லாம் தாக்கும் - அந்த நோய்க்கு ஆளான பாலகர்களைப் பாதுகாப்பது எப்படி என்றெல்லாம் எல்லோரும் முக்கியம் தெரிந்து கொள்ள வேண்டும் (ஒரு சிலர் இதை உடலில் உள்ள குறையே என்று கூறினாலும் இது பல தொந்தரவுகளைக் கொடுக்கும் ஒரு நோயே).


இளம் வயதினரையும் சர்க்கரை நோய் பரவலாகத் தாக்குகிறது. நூறு சர்க்கரை நோயாளர்களுள் ஒருவர் முதல் நான்கு பேர் வரை இருபது வயதுக்குட்பட்டவர்கள் இந்நோயால் பாதிப்புக்குள்ளாகி இருக் கின்றனர்.

### நோய்க்குண்டான காரணம்:

இந்த நோய் சிறுவர்களிடையே வரு வதற்குப் பலகாரணங்கள் கூறப்படுகின்றன; ஆனால் பெற்றோர்கள் அதில் குழப்பம் அடையவேண்டாம். ஏனெனில் 'போலியோ' அந்த நோய்க் கிருமியால் வருவது போலவோ, அல்லது தட்டம்மை அந்தநோய்க் கிருமியால் வருவது போலவோ இந்நோய்க்கு இதுதான் காரணம் எனத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. இன்னும் மருத்துவ ஆய்வுகள் நடந்தவண்ணம் இருக்கின்றன.

### நோயின் அறிகுறிகள்

இந்நோயால் பாதிக்கப்பட்ட குழந்தை திடீரென அடிக்கடி அதிகமாகச் சிறுநீர் கழிக்கும்.




அதிகத் தண்ணீர் குடிக்கும். அதாவது எப்போதுமே தாகம் அதிகமிருக்கும். அதுமட்டுமல்ல; பசியும் அதிகம் இருக்கும். அதிகம் சாப்பிட்டும் கூட, உடல் எடை வேகமாகக் குறையும். குழந்தை மிகச் சோர்வுடன் காணப்படும்.

இவைகளை அலட்சியப்படுத்தினால் 48 மணி நேரத்திற்குள்ளாகவே, அதாவது இரண்டு நாட்களுக்குள் குழந்தை நினைவிழந்த நிலைக்குச் சென்றுவிடும். அவ்வாறு சென்றால்கூட, இரு நாட்களுக்கு முன்பு இதுபோன்ற தொந்தரவுகள் அக்குழந்தைக்கு இருந்திருந்தால், சிகிச்சை அளிக்கின்ற மருத்துவரிடம் அதைக் கூறவேண்டும்.

நினைவிழந்த நிலையில் உள்ள குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிக்கும்போது, குறைந்தது ஒரு முறையாவது சர்க்கரையின் அளவை இரத்தத்திலும், சிறு நீரிலும் பரிசோதனை செய்து பார்க்கவேண்டும்.

இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகம் இருந்தால் இன்சுலின் ஊசியைப் போட்டுக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவந்து நினைவிழந்த நிலையில் உள்ள குழந்தையைக் குணமாக்கி விடமுடியும். தக்க சமயத்தில் சென்றால்தான் இதுவும் சாத்தியமாகும்; இல்லையேல் சிரமம்தான்.

அதன் பின்பு, பெற்றோர்கள் மிகக் கவனமாகச் செயல்பட வேண்டும், மீண்டும் குழந்தை நினைவிழந்த நிலைக்குப் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### நோயைக் கட்டுப்படுத்த...

மருத்துவர் பரிந்துரை செய்யும் இன்சுலின் ஊசியைத் தொடர்ந்து குழந்தைக்குப் போட்டுவர வேண்டும். சற்று வளர்ந்தவராக இருந்தால், அவர்களே ஊசி போடப் பழகிக் கொள்ளுவது நல்லது; சிறு குழந்தைகளுக்குப் பெற்றோர்களே கூட ஊசி போடக் கற்றுக் கொள்ளுவதும் நல்லது.


குறைந்தது ஒருமுறை அல்லது இருமுறையாவது ஊசி போட்டால்தான் சர்க்கரை நோயானது ஒரு கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்.

சிறுவர்களுக்கு ஏன் தொடர்ந்து ஊசி போட வேண்டுமென்றால் அவர்களுக்கு இன்சுலின் சுரக்கும் பீட்டாசெல்கள் முற்றிலும் அல்லது பெருமளவு, செயலிழந்துவிடுகின்றன. இதன் காரணமாக உடலில் இவர்களுக்கு இன்சுலின் உற்பத்தியே இருக்காது; அல்லது போதுமானதாக இருக்காது. எனவே இவர்கள் இன்சுலின் ஊசியைத்தான் நம்பி வாழவேண்டியிருக்கும். ஊசியை மருத்துவர் அறிவுரைப்படி தொடர்ந்து போட்டு வந்தோமானால், மற்ற குழந்தைகளைப் போலவே இவர்களும் இச்சமுதாயத்தில் நன்கு வாழலாம்.

## உணவு முறைகள்:

சர்க்கரை வியாதிக்கு ஆளான சிறுவர்களுக்கு, உணவில் சில கட்டுப்பாடுகள் அவசியம் தேவைப்படுகிறது. இதைப் பெற்றோர்கள் மருத்துவரின் அல்லது உணவுப் பரிந்துரையாளரின் அறிவுரைப்படி பக்குவமாகக் குழந்தைக்கு எடுத்துச் சொல்லி, அனைத்து இனிப்பு வகைகளையும் விருப்பம்போல் சாப்பிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இது கொஞ்சம் சிரமமான காரியம் தான். ஏனெனில் வீட்டிலேயும், பள்ளிக்கூடங்களிலும் மற்ற குழந்தைகளுடன் உள்ள போது இவர்களை மட்டும் தனிமைப் படுத்துவது அவ்வளவு எளிதில்லை. ஆனால், வேறு வழியில்லை. மற்ற உணவுவகைகளை மருத்துவரின் அறிவுரைப்படி கொடுத்து வரலாம்.



வேறு சில நோய்கள் இந்நோய் உள்ள சிறுவர் சிறுமியருக்கு ஏற்பட்டால் - உதாரணத்திற்கு வாந்தி, பேதி, சளி, ஜுரம், மலேரியா, டைபாய்டு போன்ற நோய்கள் வருகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்; அப்போது, இரத்தத்தில் சர்க்கரையின் அளவைப் பார்த்து அதற்குத் தகுந்தாற்போல, மருத்துவர் சொல்லுவது போல் இன்சுலின் ஊசி போடவேண்டும்; மற்ற நோய்க்கும் மருந்துகள் சாப்பிடவேண்டும்.

இவ்வாறு மற்ற நோய்க்கான சிகிச்சைக்குச் செல்லுகிற போது சர்க்கரை நோய்ச் சிகிச்சை பற்றிய தகவல்களை மருத்துவரிடம் காண்பிக்க வேண்டும்.

## சர்க்கரை அளவு குறைந்தால்...

மாதம் ஒருமுறை சாப்பாட்டிற்கு முன்பு ஒரு இரத்தப்பரிசோதனை, எழுதிக் கொடுத்த அளவு ஊசி போட்டுக்கொண்டு, அரை மணி நேரம் கழித்தவுடன் சாப்பிட்டுவிட்டு இரண்டு மணி நேரம் பொறுத்து மீண்டும் இரத்தப் பரிசோதனை செய்து பார்த்துக்கொள்ள வேண்டும்.

சாப்பாட்டிற்கு முன் – 80 -120 மி.கி
சாப்பிட்டு இரண்டு மணி
நேரம் கழித்து- 120 160- மி.கிவரை இருத்தல் நல்லது.

அதே நேரத்தில் குழந்தை தாழ் சர்க்கரைநிலைக்குச் சென்று விடக் கூடாது. சர்க்கரையின் அளவு 60 மி.கி. குறைவானால் அதிகமான பசி, 'சில்' என்று வேர்த்துப்போதல், படபடப்பு, கை கால்களில் நடுக்கம், தெளிவின்மை, உளறல் மயக்கம் நினைவிழத்தல் ஆகியவை ஏற்படும்.

நினைவு இழப்பதற்கு முன், ஏதாவது ஓர் இனிப்பான திரவத்தை உடனே கொடுத்து விட வேண்டும்.

நினைவிழந்து இருந்தால் உடனே மருத்துவரிடமோ அல்லது அருகில் உள்ள மருத்துவமனைக்கோ அழைத்துச்செல்ல வேண்டும். இதற்காகத்தான் அனைத்து நீரிழிவு நோயாளிகளும் தங்களிடத்தில் ஓர் அடையாள அட்டையை வைத்துக்கொள்ள வேண்டும். அதில் சர்க்கரை நோயாளியினுடைய முகவரி, சிகிச்சைஎடுத்துக்கொள்ளும் மருத்துவர் அல்லது மருத்துவமனையின் முகவரி இன்சுலின் ஊசி அளவு விபரம் முதலியன குறிக்கப்பட்டிருக்க வேண்டும். இது முதல்முறையாக சிகிச்சை அளிக்கும் மருத்துவருக்குப் பெரிதும் உபயோகமாக இருக்கும்.



## மாற்றுச் சிகிச்சை

இந்த நோய் நம் நாட்டில் மட்டும்தான் என்பதில்லை; இந்நாள்வரை, உலகம் முழுவதும் இன்சுலின் ஊசி தான் போடப்பட்டு வருகிறது. மற்ற சிகிச்சைமுறைகளால் இது கட்டுப்பாடு அடைவது மில்லை; குணமாவதும் இல்லை. ஆனால் பெற்றோர்கள் ஊசிக்குப் பயந்து கொண்டு மாற்றுச் சிகிச்சை முறைக்கு - அதாவது மருந்து சாப்பிட்டாலே போதும் என்ற அளவில் குழந்தைகளைக் கொண்டுசெல்கின்றனர்; அதுதவறு.

சில நாட்களுக்குள் இக்குழந்தைகள் இச்சிகிச்சை பலனின்றி மயக்க நிலையை அடைந்து, உயிருக்கு ஆபத்தான கட்டத்தில் மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறார்கள். மாற்றுச்சிகிச்சைக்குத்தங்கள் மனம் செல்வதாய் இருந்தால்கூட, அடிக்கடி இரத்தப் பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். சில மாற்றுச்சிகிச்சை மருத்துவர்கள், பரிசோதனை தேவையில்லை எனத்தவறான அறிவுரைகூறவும் கூடும். ஆனால் ஒன்று, பரிசோதனையில் சர்க்கரையின் அளவு அதிகம் இருந்தால், அச்சிகிச்சையை நிறுத்தி விட்டு இன்சுலின் ஊசியைப் போட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

சர்க்கரைநோய்க்கட்டுப்பாடு மற்றும் அதன் பின்விளைவுகள் கட்டுப்பாடு' (Diabetes Control and Complications Trial - DCCT) என்ற ஒரு பெரிய பத்தாண்டுக்கால ஆராய்ச்சி அண்மையில் நடந்து முடிந்தது; அதன் முடிவு என்னவென்றால் சரக்கரை நோயை நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் அதனால் வரும் தொந்தரவுகள் தவிர்க்கப்படுவதோடு, பின்விளைவுகளான கண்கள் பாதிப்பு, சிறுநீரகம் பாதிப்பு, கால் நரம்புகள் பாதிப்பு முதலியன பெருமளவு தடுக்கப்படுகின்றன. தவிர்க்கப்பட்டுகிறன. குழந்தைகள் இந்தநோய் இருந்தாலும் மகிழ்வோடு வாழமுடிகிறது.

ஆகவே, பெற்றோர்கள்தங்கள்குழந்தைக்கு இந்நோய் வந்துவிட்டதே என அஞ்சத் தேவையில்லை. சற்று எச்சரிக்கையுடன் சமயோசிதமாக மேற்கூறியபடி செயல்பட்டால் போதும்; இந்நோய் இருந்தும் நோயற்ற மற்ற குழந்தைகள் போல் அக்குழந்தையும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நோய்ச் சிகிச்சைக்குத் தொடர்ந்து பணச் செலவு இருப்பதால் அதாவது இரத்தப் பரிசோதனைகள், இன்சுலின் ஊசி மருந்து, ஊசிக்குழல்கள், மருத்துவர் செலவு எனத்தொடர்ந்து மாதந்தோறும் செலவு செய்யப்பட வேண்டியுள்ளது. பெரும்பாலான பெற்றோர்களால் இது இயலாமல் போகிறது.

இவ்வாறான நோய் பாதிப்பிற்குள்ளான குழந்தைகளின், அக்குழந்தையின் ஆயுட்காலம் முழுவதும் தேவைப்படும் மாதாந்திர மருத்துவ செலவுக்காகப் பெற்றோர்களுக்குப் பணச்சிரமம் கொடுக்காமல் இக்குழந்தைகள் இச்சமுதாயத்தில் வாழ முடியும். இதற்காக - 72, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை 600 014 என்ற முகவரியில் ''இன்சுலின் வங்கி'' என்ற அமைப்பை இந்திய நீரிழிவுக் கழகம், தென்பிரிவும் அரிமாசங்கங்கள் 324/ம் இணைந்து ஆரம்பித்துள்ளன. இதன் மூலம் ஏழைக் குழந்தைகளுக்கு இம் மருந்தை இலவசமாக இவ்வமைப்பு வழங்கிவருகிறது. கொடையுள்ளம் கொண்டோரின் நன்கொடை மூலம் இது இயங்குகிறது. நன்கொடைக்கு வருமான வரி விலக்கு உள்ளது. அதில் உறுப்பினராக விரும்புவோர் அம்முகவரிக்குத் தொடர்பு கொண்டு விவரம் அறியலாம்.

---


*இந்த இதழின் நடுப்பக்கத்தில்*
*மத்தியில் உள்ள 'பின்'னை*
*மட்டும் கழற்றுங்கள்;*
*நிதிநிலை அறிக்கையும் முதல்வர்*
*பதில் உரையும் உங்களுக்குத்*
*தனிப்புத்தகமாகக் கிடைக்கும்!*

# நிதி நிலை அறிக்கை
# 1996 - 97

மாண்புமிகு முதலமைச்சர்

**கலைஞர். மு. கருணாநிதி**

அவர்கள் ஆற்றிய உரை



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எங்கள் உயிராக, மூச்சாக, இதயத் துடிப்பாக இருக்கின்ற அண்ணாவின் திருப்பெயரை அனுப் பொழுதும் மறவாமல் - அவர் உருவாக்கிய அரசை, அவர் வழி நின்று மீண்டும் தொடரத் துணை நின்ற தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும் தோழமை உணர்வுடன் ஒத்துழைத்த நல்லியக்கங்களுக்கும், நன்னெஞ்சம் கொண்ட நண்பர்களுக்கும், அமைந்துள்ள அரசுக்கு இன்மொழியும் இடித்துரையும் நல்கி வழி நடத்தும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கும், ஏற்றமிகு ஏடுகளுக்கும் என் நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன்.

''என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞா னத்தால்,
பராக்கிர மத்தால், அன்பால்
உன்னத இம மலை போல்
ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ?

கைத்திறச் சித்தி ரங்கள்
கணிதங்கள் வான நூற்கள்,
மெய்த்திற நூற்கள், சிற்பம்,
விஞ்ஞானம் காவி யங்கள்
வைத்துள தமிழர் நூற்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தக சாலை எங்கும்
புதுக்கு நாள் எந்த நாளோ?

கண்களும் ஒளியும் போலக்
கவின்மலர் வாசம் போலப்
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடு தன்னில்,
தண்கடல் நிகர்த்த அன்பால்
சமானத்தர் ஆனார் என்ற
பண்வந்து காதிற் பாயப்
பருகுநாள் எந்த நாளோ?''

– எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் ஏக்கங் கொண்டு கனவு கண்ட அந்த நாளை உருவாக்க நாங்கள் எடுக்கும் நடவடிக்கைகள், தீட்டும் திட்டங்கள், ஓர் அணிற் குஞ்சின் முயற்சியாகவாவது இருக்கும் என்ற நம்பிக்கையுடன் - மிக்க அடக்கத்துடன், 1996-97 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைத் தமிழக மக்களுக்காகத் தக்கார் நிறைந்துள்ள இந்த அவை முன் வைக்கின்றேன்.

தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு. கருணாநிதி அவர்கள்,
1996-97 ஆம் ஆண்டிற்கான
வரவு-செலவுத் திட்டத்தைச்
சட்டமன்றப் பேரவை முன்வைத்து
17.7.96 அன்று ஆற்றிய உரை:

**கூட்டாட்சித் தத்துவம்**

2. இந்த அறிக்கையை உங்கள் முன் வைக்கும் இந்நாளில் இந்தியத் திருநாட்டின் அரசியல் அரங்கில் எத்தனையோ வகைவகையான திருப்பங்கள்! உலகத்திலேயே இப்போது ஒரு கூட்டாட்சிப் புரட்சி (Federal Revolution) நடந்து வருகின்றது. உலக மக்கள் தொகையில் 40 சதவிகிதம் பேர் கூட்டாட்சி அமைப்பிலே, அதாவது உண்மையான கூட்டாட்சி (Formally Federal) அமைப்பிலே வாழ்கிறார்கள். அடுத்து, மூன்றில் ஒரு பகுதியினர் ஏதாவது ஒருவிதமான கூட்டாட்சி அமைப்பில் (Federal Arrangement) வாழ்கின்றார்கள். **இப்படியொரு திருப்பம் ஏற்பட்டுள்ள நிலையை மனத்திற்கொண்டு, திரு.தேவ கவுடா அவர்கள் தலைமையில் மத்தியில் உள்ள ஐக்கிய முன்னணி அரசு, குறைந்த பட்சத் திட்டங்கள் வெளியிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.**

3. நாம் விரும்பும் எல்லா அம்சங்களும் இத்திட்டத்தில் இடம் பெற்றதாக முழுமையான மன நிறைவு கொள்ள முடியாவிட்டாலும், ஏழை எளியோர்க்கு விரோதமான, நாட்டு நலன்களுக்கு எதிரான அம்சங்கள் மாற்றப்பட்டுள்ளன என்பதிலும், தூய்மையான - பொறுப்புள்ள - மதச்சார்பற்ற ஆட்சியை வழங்குவதுதான் குறிக்கோள் என்பதிலும், இந்தக் குறைந்த பட்சத் திட்டம் நமது ஆதரவையும் அன்பான வரவேற்பையும் பெறுகிறது என்பதில் அய்யமில்லை.

4. மத்திய - மாநில உறவுகள் பற்றி இதுவரை ஐந்து ஆவணங்கள் வந்திருக்கின்றன.

1. 1969 இல் நிர்வாகச் சீர்திருத்தக் குழு அறிக்கை

2. மேலும் அதே ஆண்டு என் தலைமையிலே அமைந்த தி.மு.க அரசு இந்தியாவிலேயே முதல் முறையாக ராஜமன்னார் குழு அமைத்து அறிக்கை கேட்டது.

3. 1974 இல் வெள்ளை அறிக்கை தயாரித்து, மாநில சுயாட்சித் தீர்மானம் தமிழகச் சட்டமன்றத்திலே கொண்டுவந்து நிறைவேற்றியது.

4. 1977இல் மேற்கு வங்கத்தில் திரு. ஜோதிபாசு அவர்களின் அரசு Memorandum on Centre-State Relations என்று தயாரித்தது. அதில் கூட்டாட்சிக் கொள்கை வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது with a view to enshrine in full, the majesty of the federal principles;

5. 1983இல் மைய அரசு முதல் முறையாக மத்திய-மாநில உறவுகளைப் பற்றி ஆராய சர்க்காரியா கமிஷன் அமைத்தது.

ஆனால், இது மைய அரசு-தானாக முன்வந்து இந்தியாவில் உண்மையான ஒரு கூட்டாட்சி முறை வேண்டுமென்று முழு மனதோடு அமைத்த கமிஷன் அல்ல.

5. அந்தக் கமிஷனின் அறிக்கை பற்றி தி.மு.கழகத்தைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய ஏமாற்றமே! இந்தியாவைக் கூட்டாட்சி அமைப்புக்கு அழைத்துச்

செல்ல எந்தவிதமான உருப்படியான யோசனைகளும் அதில் சொல்லப்படவில்லை. சில கருத்துக்கள் வேண்டுமானால் சொல்லப்பட்டிருக்கலாமே தவிர, இந்தியாவை முழு கூட்டாட்சியாக மாற்றுவதற்கான யோசனைகள் எதுவும் அதில் தெரிவிக்கப்படவில்லை. I would call it an advocacy of status quoism with small changes.

6. சர்க்காரியா கமிஷன் அறிக்கை அலமாரியில் தூசு படிந்து கிடந்தது. அது மீளாத் துயில் கொண்டுவிட்டது என்று நினைத்துக் கொண்டிருந்தோம். அதில், 356வது விதியில் சில மாற்றங்களை மட்டுமே சொல்லியிருந்தார்கள். மேலும், நிறுவன வரியினை (Corporation Tax) மாநிலங்களோடு மைய அரசு பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று பெரிய மனது வைத்துக் கூறியிருக்கிறார்கள். இதைத் தவிர, உண்மையான கூட்டாட்சி பற்றி எதுவும் குறிப்பிடவில்லை.

7. உதாரணமாக, 1985இல், கனடா அரசு ''மக்டனால்டு கமிஷன்'' அமைத்தது. அதன் கொள்கை anadian Federalism Past, Present and Future. இது பெரிய மாற்றங்களை எல்லாம் தந்தது. ஆனால், சர்க்காரியா கமிஷன், மாற்றங்கள் எதையும் சுட்டிக் காட்டவில்லை. இருந்தாலும், அந்தச் சர்க்காரியா கமிஷன் அறிவித்த குறைந்தபட்ச மாற்றங்களைக் கூட அன்றைய மைய அரசு கொண்டு வரவில்லை.

8. ஆனால், இப்போது குறைந்தபட்சத் திட்டங்களில் Two Track Policyக்கு வழிகோலியிருக்கின்றது. ஒன்று மாநில சுயாட்சி வழங்க - அதிகமான அதிகாரங்களை மாநிலங்களுக்குத் தருவது, இன்னொன்று, உயர்நிலைக் குழு அமைத்து சர்க்காரியா கமிஷன் அறிக்கையைப் பற்றி மேலும் காலத்திற்கேற்றவாறு அதிகமாக மாற்றங்களைச் செய்வது - அது சம்பந்தமாக மூன்று மாதங்களில் அறிக்கை கேட்போம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. மூன்று மாதங்களில் அறிக்கை பெற்றுப் பொது மக்கள் மத்தியில் அதனை வைப்போம் என்றும் கூறப்பட்டுள்ளது. இது கூட்டாட்சி வரலாற்றில் ஓர் எல்லைக்கல்.

9. அண்மையில் சென்னைக்கு வந்த உள்துறை அமைச்சர் திரு. இந்திரஜித் குப்தா அவர்களிடமும் மத்திய மாநில உறவுகள், அதிகாரப் பங்கீடுகள் குறித்து விவாதித்திருக்கிறேன்.

10. மத்திய மாநில உறவுகள் குறித்து விவாதிக்க முதலமைச்சர்களின் கூட்டத்தை விரைவில் கூட்டப் போவதாக இந்தியப் பிரதமர் கூறியிருப்பது ஓர் இனிப்பான செய்தியாகும்.

11. இந்தியா பல கலாச்சாரங்கள் மலர்ந்த சோலை என்பதை யாரும் மறந்து விட முடியாது. இதனைச்சுற்றுலா வாரத்தின் (Tourism Week) போது தான் எல்லா மாநிலங்களும் நினைத்துப் பார்க்கின்றன. அதைவிட இப்படி ஒரு திருப்பம், இந்தத் திட்டத்தின் வாயிலாக வந்திருப்பது வரவேற்கத் தக்கது. இந்த அறிக்கையில் தொடர்ச்சி (Continuity); மாற்றம் (Change) காலத்திற் கேற்ற முடிவு (Pragmatism) என்ற மூன்றும் இடம் பெற்றுள்ளன.

12. பொருளாதாரக் கொள்கையினைப் பொறுத்த வரையில், வெளிநாட்டு மூலதனத்தை வரவேற்கின்ற அதே நேரத்தில் தேவைப்படாத இடங்களில் அவைகளைக் கட்டுப்படுத்தலாம். அது கழுத்தில் அணிவிக்கும் மாலையாக இருக்கலாமே தவிர, கழுத்தை இறுக்கும் கயிறாக இருத்தலாகாது. நாட்டுடைமையாக்கப்பட்ட பொது நிறுவனங்களைக் கண்ணை மூடிக் கொண்டு தனியார் மயமாக்கவில்லை. இதுவும் வரவேற்கத் தக்கது. அரசுத் துறை நிறுவனங்களின் பங்குகளை விற்கும்போது எந்தவிதமான ரகசியமும் இருக்காது. Disinvestment Commission ஒன்று அமைத்து, அந்தக் குழுவின் மூலமாக இந்தப் பங்குகள் விற்பனை பற்றி முடிவெடுக்கப்படும். அதன் மூலம் வருகின்ற பணத்தைக் கொண்டு, துண்டு விழுகின்ற பட்ஜெட் பற்றாக்குறையைப் போக்கப் போவதில்லை. வறுமையைப் போக்கும் திட்டங்களுக்கும் மக்களின் அடிப்படை வசதிகளுக்கும் தான் அவை பயன்படும்.

13. சமூக நீதியில் மைய அரசு அலுவலகங்களில் மட்டுமே வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீடு இப்போது உத்திரவாதமளிக்கப்படுகிறது. மைய அரசு நடத்தும் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு செய்யப்படுவது இந்தக் குறைந்தபட்சத் திட்டங்களிலே குறிப்பிடப்படவில்லை. அது ஒரு குறை என்ற போதிலும், அதுவும் விரைவில் நீக்கப்படும் என்று நம்புகிறேன்.

14. இதில் அங்கம் வகிக்கும் எந்தக் கட்சியும் தன்னுடைய கொள்கையை இந்தத் திட்டத்தின் மூலம் தியாகம் செய்யவில்லை. அதனால்தான், இதனுடைய பெயரே ''பொதுவான குறைந்த பட்சத் திட்டம்'' (Common Minimum Programme) என்பதாகும்.

15. பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நமது நாட்டில் ஒருமைப்பாடு வலுப்பெற்று நிலைப் பெற்றிருக்க மாநில உரிமைகள் உண்மையான சுயாட்சித் தத்துவத்துடன் வழங்கப்பட்டாக வேண்டும் என்பதிலும், இந்தி ஆதிக்கத்திற்கு இடம் தராமல் - மாநிலங்களின் ஆட்சி மொழிகள் அனைத்துமே மைய ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும் என்பதிலும், முதற்கட்டமாகத் தமிழையும் மைய ஆட்சி மொழியாக்க வேண்டுமென்பதிலும், இந்த அரசு உறுதியுடன் இருக்குமெனச் சூளுரைக்கிறேன்.

16. இத்தகைய கொள்கை - கோட்பாடு - குறிக்கோள் அமைந்த பின்னணியுடன் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

17. அரசின் பல்வேறு துறைகள் பற்றித் தனித்தனியாக இந்த அவையில் மானியங்கள் முன்மொழியப் பெற்று விவாதிக்கப்பட இருப்பதால், இந்த அறிக்கையின் மூலம், பல்வேறு துறைகளில் கோடிட்டுக் காட்டக் கூடிய அளவுக்குச் செயல்படுத்தப்பட இருக்கின்ற திட்டங்கள் குறித்து மட்டுமே சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதையும் அவை உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவது எனது கடமையாகும்.

### தேர்தல் வாக்குறுதிகள்

18. எங்கள் தேர்தல் அறிக்கையில் பல்வேறு வாக்குறுதிகளை நாங்கள் அறிவித்திருந்தோம். பின்வரும் வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்த இந்த இரண்டு மாதங்களுக்குள் செயல்படுத்தத் தேவையான அனைத்து

நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம் என்பதை அறிவீர்கள்.

★ ஆட்சிப் பொறுப்பேற்றதும் முதல் ஆணையாக தரை வரி நீக்கம்;

★ மருத்துவமனைப் பார்வையாளர் கட்டணம் ரத்து;

★ உள்ளாட்சி மன்றங்கள் அனைத்திற்கும் வருகின்ற செப்டம்பர் மாதத்திற்குள் தேர்தல்;

★ தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 30.9.96-க்குள் தேர்தல்;




★ வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 112.33 கோடி பயிர்க் கடனை மத்திய காலக் கடனாக மாற்றம்;

★ பட்டா பாஸ் புத்தகம் வழங்கிட ரூ. 24 கோடி நிதி ஒதுக்கீடு;

★ விவசாயிகளுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் சீரான முறையில் மின்சாரம் வழங்க ஆணை;

★ குடிநீர் வசதியற்ற குடியிருப்பே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டிய அளவிற்கு நிதி ஒதுக்கீடு;

★ நடப்பாண்டிற்குள் கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குக் கொண்டுவரத் தீவிர ஏற்பாடு;

★ ஏற்கெனவே உள்ள 169 தொழிற் பயிற்சிப் பள்ளிகள் போக, எஞ்சியுள்ள 218 ஊராட்சி ஒன்றியங்களில் படிப்படியாக வரும் மூன்றாண்டுகளில் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் தொடங்க ஆணை;

★ மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத் தொகை ரூ. 5,000-லிருந்து ரூ. 10 000 ஆக உயர்வு;

★ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறுத் திட்டத்தின் கீழ் உதவித் தொகை ரூ. 300-லிருந்து ரூ. 500 ஆக உயர்வு;

★ குடும்பத் தலைவர் இறந்து போனால், அவர் குடும்பத்தினருக்குக் குடும்பத் துயர் துடைப்புத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியுதவி ரூ. 5,000-லிருந்து ரூ. 7,500 ஆக உயர்வு;

★ விபத்தில் உயிரிழப்போரின் குடும்பத்திற்கு விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் நிதியுதவி ரூ. 10,000-லிருந்து ரூ. 15,000 ஆக உயர்வு;

★ கடந்த ஆட்சி அளித்த முறைகேடான சலுகைகளினால் கிராமப்புறங்களுக்குத் தனியார் பேருந்துகள் செல்ல முடியாத நிலையை மாற்றிடச் சட்டம் நிறைவேற்றம்;

★ ஒப்பந்தப்புள்ளி (Tender) பெறுவதில் பெருகியிருந்த ஊழல்கள் ஒழிப்பு;

★ அரசுக் கருவூலத்திற்கு வரவேண்டிய நிதி திசைமாறி எங்கோ சென்று கொண்டிருந்ததைத் திருப்பி, சில்லறை விற்பனை விலையை உயர்த்தாமலேயே, ஆண்டொன்றுக்கு ரூ. 75 கோடி அரசுக்கு வருவாய் கிட்டும் வண்ணம் Vend Fee யை உயர்த்தி விதிப்பு;


★ ஆண்டொன்றுக்கு அரசுக்கு 6 கோடி ரூபாய் மொலாசஸ் ஏற்றுமதியில் வரவேண்டியதில் ஊழல் நடைபெற்றதைத் தடுத்து நிறுத்த சேவைக் கட்டணம் விதிப்பு;

★ குடிசை மாற்று வாரிய வீடுகளின் பழுதடைந்த அளவை ஆய்வு செய்து முன்னுரிமை அடிப்படையில் அவற்றைச் செப்பனிட ரூ. 5 கோடி நிதி ஒதுக்கீடு;

**ஊழல் ஒழிப்பு**

19. இந்த அரசை உருவாக்க - மக்கள் அளித்துள்ள தீர்ப்பு - ஊழலை ஒழிப்பதற்காகவும், ஊழல் செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு உரிய தண்டனையை வழங்க வேண்டும் என்பதற்காகவும் தான். அதே நேரத்தில் இனி ஊழல் நடைபெறாமல் தடுக்கவும் ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை



நாம் மறந்துவிடவில்லை. இது சம்பந்தமாக அரசின் நடைமுறைகளில் - நிர்வாக அமைப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அதற்கான வழிமுறைகள் காணப்படும் என்று தேர்தலுக்கு முன்பே நான் அறிவித்திருந்தேன். எனவே, இந்தப் பிரச்சினை குறித்து ஒருங்கிணைந்த முறையிலே ஆய்வு செய்து தேவையான சீர்திருத்தங்களை அரசுக்குப் பரிந்துரைக்க ஓர் உயர்நிலைக் குழு உடனடியாக உருவாக்கப்படும்.

### மைய - மாநிலப் பொருளாதார உறவுகள்

20. மைய வரி வருவாய் இனங்களில் குறிப்பிட்ட சிலவற்றை மட்டுமே மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நடைமுறையை மாற்றி மைய அரசின் முக்கியமான வரிகள் அனைத்தும் அடங்கிய ஒட்டு மொத்த வரி வருவாயில் குறிப்பிட்ட ஒரு பங்கினை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்ற பத்தாவது நிதிக் குழுவின் பரிந்துரையை வரவேற்கும் அதே நேரத்தில், மாநிலங்களின் பங்கு ஒட்டுமொத்த மைய வரி வருவாயில் 29 விழுக்காடாக இருக்க வேண்டுமென்ற அந்த நிதிக் குழுவின் பரிந்துரை எங்களுக்கு மனநிறைவு அளிக்கவில்லை. ஒட்டுமொத்த மைய வரி வருவாயில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பகுதி மாநிலங்களின் பங்காக அமைய வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

21. 1970 ஆம் ஆண்டில் மைய அரசின் மொத்த முதலீடான ரூ. 3885 கோடியில், தமிழ்நாட்டின் பங்கு ரூ. 312 கோடி. அதாவது 8.03 விழுக்காடாக இருந்தது. 1980 ஆம் ஆண்டிற்குப் பிறகு மைய அரசின் மொத்த முதலீடு கணிசமாக உயர்ந்து 1993ஆம் ஆண்டில் ரூபாய் 1 இலட்சத்து 73 ஆயிரத்து 501 கோடி அளவை எட்டிய போதிலும், தமிழ்நாட்டிற்கான பங்கு, சம அளவில் உயரவில்லை. அகில இந்திய முதலீட்டில் தமிழ்நாட்டின் பங்கு 5 விழுக்காட்டிற்கும் குறைவாகவே அமைந்தது. இந்த நிலையை முற்றிலும் மாற்றியமைத்து ஆக்கபூர்வ முதலீடுகளைச் செய்ய வேண்டும் என்ற மைய அரசை வலியுறுத்தி வருகிறோம். இதில் முதற் கட்டமாகத் தூத்துக்குடித் துறைமுக விரிவாக்கத் திட்டத்தைத் துரிதப்படுத்துமாறு கோரியுள்ளோம். கோரிக்கை நிறைவேறும் என்று நம்புகிறோம். மேலும், இத்திட்டத்துடன் நெருங்கிய தொடர்புள்ள சேது சமுத்திரத் திட்டத்தையும் விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்றும் மைய அரசிடம் கேட்டுள்ளோம்.

22. இரயில்வே அமைச்சகத்தால் சென்னைப் பெருநகரில் செயல்படுத்தப்பட்டு வரும் துரிதப் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாம் கட்டப்பணி, லஸ்ஸிலிருந்து வேளச்சேரி வரை நீட்டிக்கப்பட வேண்டும். இதற்கான நிதி ஒதுக்கீட்டில் மூன்றில் இரண்டு பங்கை மாநில அரசு ஏற்கும் என இதற்கு முந்தைய அரசு மைய அரசுக்குக் கொடுத்த உறுதிமொழியின் அடிப்படையில், அந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். இரயில்வே அமைச்சர் திரு. ராம்விலாஸ் பஸ்வான் 1996-97 ஆம் ஆண்டிற்கான இரயில்வே வரவு-செலவுத் திட்டத்தை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து தனது உரையில் இத்திட்டம் நிதிப் பற்றாக்குறையால் தடைபடாது என்று உறுதி கூறியுள்ளார். அந்த உறுதியைச் செயலாக்கும் பொறுப்பு மைய அரசுக்கு உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

### ஆண்டுத் திட்டம்

23. நடப்பு நிதியாண்டு, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டாகும். 1995-96 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீட்டில் திட்ட ஒதுக்கீட்டை ரூ. 3316 கோடியாக முந்தைய அரசு நிர்ணயித்திருந்தது. ஆனால், 1995-96 ஆம் ஆண்டு திட்டச் செலவு ரூ. 3281 கோடி மட்டுமே ஆகும். இருப்பினும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டின் ஒதுக்கீட்டு இலக்கான (Approved outlay) ரூ. 10,200 கோடி அளவை எய்துவதில் இடர்ப்பாடு எதுவும் இருக்காது என்று நம்புகிறேன்.

24. நடப்பு நிதியாண்டின் திட்ட அளவு இன்னும் மையத் திட்டக் குழுவுடன் கலந்துரையாடி இறுதி செய்யப்படவில்லை. இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் ஆண்டுத் திட்டத்திற்காக, ரூ. 3550 கோடி அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 1989-91 ஆம் ஆண்டுகளில் கழக ஆட்சியில் தொடங்கி அதற்குப்பின்னால் கைவிடப்பட்ட திட்டங்களுக்கெல்லாம் புத்துயிர் அளிப்பதன் வாயிலாகவும், இந்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படும் புதிய திட்டங்களுக்குச் செய்யப் பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளாலும், 1996-97 ஆண்டுத்திட்டம் ரூ. 3700 கோடி அளவுக்கு உயரும். நடப்பு நிதியாண்டில் மார்ச்சு வரை எட்டு மாதங்கள் மட்டுமே இருப்பதனால், இந்தத் திட்ட ஒதுக்கீட்டை ரூ. 3700 கோடி அளவிலேயே அறுதியிட்டுள்ளோம். நிதி ஆண்டின் அளவு முழுமையாக இருந்திருந்தால், ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 4000 கோடியையும் தாண்டி இருக்கும். எனினும், இந்தத் திட்ட ஒதுக்கீடு 1995-96 ஆம் ஆண்டில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் 15.63 விழுக்காடு கூடுதலாகும்.

### உணவு நிலைமை

25. கடந்த ஆண்டு காவிரிப் பாசனப் பகுதியில் குறுவை மற்றும் சம்பாப் பருவங்களில் விளைச்சல் கணிசமாகக் குறைந்திருந்தது. இவ்வாண்டும் குறுவைப் பயிர்ப் பரப்பளவு பெருமளவு குறைந்துள்ளது. 1994-95 ஆம் ஆண்டில் 76.86 இலட்சம் டன்னாக இருந்த அரிசி உற்பத்தி 1995-96ல், 52.06 இலட்சம் டன்னாகக் குறைந்துவிட்டதிலிருந்து, இது நன்கு புலனாகும். காவிரிப்பாசனத் திட்டத்தில் கிடைக்கவேண்டிய உரிய நீர்வரவு கிட்டாமை. மாநிலத்தில் பருவமழை பொய்த்தமை ஆகியவையே, இந்தச் சூழ்நிலை உருவாவதற்குத் தலையாய காரணங்கள் ஆகும்.

26. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மக்களின் முழுத் தேவையையும் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதால், மைய அரசின் மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசி ஒதுக்கீட்டை மாதம் ஒன்றுக்கு 2.25 இலட்சம் மெட்ரிக் டன் அளவுக்கு உயர்த்துமாறு கேட்டுள்ளோம். இது தவிர, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தாங்கிருப்பைக் கூடுதலாக்கும் பொருட்டு, இந்திய உணவுக் கழகம் மற்றும் அண்டை மாநிலங்களிடமிருந்து

அரிசியை முறைப்படி வாங்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குடும்ப அட்டை ஒன்றுக்கு 20 கிலோ அரிசி வழங்கும் திட்டத்திற்கு மானியத் தொகையாக ரூ. 1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

27. பொது விநியோக முறையை மேலும் சீராக்கிச் செயல்படுத்த அண்டை மாநிலங்களுக்கு அரசு அலுவலர்கள், நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டு, அங்கு நடைபெறும் முறைகள் பற்றி ஆய்வு செய்து அக்குழு தரும் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### வறட்சி மற்றும் வெள்ள நிவாரணங்கள்

28. வறட்சியால் பாதிக்கப்பட்ட பல பகுதிகளில், இந்த அரசு பதவியேற்ற பின்னர், நிவாரணப் பணிகளை விரைந்து செயல்படுத்தும் பொருட்டு, ரூ. 36 கோடி நிதி ஒதுக்கம் செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளிக்கப்பட்டது. 1405 பசலி ஆண்டில் ரூ. 22.30 கோடி நிலவரி தள்ளுபடி செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

29. மேலும், புயல் மழையால் வடக்குக் கடலோர மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதையொட்டி, முற்றிலுமாகச் சேதமடைந்த வீடுகளுக்கு அரசு நிவாரண உதவி ரூ. 500 ஆக இருந்ததை ரூ. 1000 ஆகவும், ஓரளவு சேதமடைந்த வீடுகளுக்கு அரசு நிவாரண உதவி ரூ. 250 ஆக இருந்ததை ரூ. 500 ஆகவும், மாநிலம் முழுவதற்கும் பாகுபாடின்றி ஒரே சீராக நிவாரணத் தொகை அதிகரிக்கப் பட்டுள்ளது. கால்நடைகள் இழப்பிற்கும் நிவாரண நிதி உதவி முதன்முறையாக வழங்கப்பட்டுள்ளது. வளர்ந்த கால்நடை ஒன்றுக்கு ரூ. 5000, கன்று ஒன்றுக்கு ரூ. 3000, செம்மறியாடு அல்லது வெள்ளாடு ஒன்றுக்கு ரூ. 1000 என்ற வீதத்தில் இந்நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. இதுபோன்ற நேர்வுகளில், இந்த உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படும். புயல், வெள்ளம் மட்டுமின்றி தீ விபத்துக்களுக்கும் இது பொருந்தும்.


### வேளாண்மை

30. மொத்த உணவுத் தானிய உற்பத்தி, 1994-95 ஆம் ஆண்டில் 97.52 இலட்சம் டன்களாகயிருக்க, 1995-96 ஆம் ஆண்டில் உற்பத்தி 72.60 இலட்சம் டன்களாகக் குறைந்துள்ளது.

31. இரண்டாம் பசுமைப் புரட்சியை உருவாக்கும் நோக்கத்துடனும், பொருத்தமான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தித் தரிசு நிலங்கள் மற்றும் பாசன வசதி ஆகியவற்றை மேம்படுத்தவும், வறுமையை ஒழிக்கவும், விவசாயிகள் வாழ்வில் வளத்தைப் பெருக்கவும், திட்டங்கள் தீட்டவும், பரிந்துரைகள் வழங்கவும் டாக்டர் வி.சி. குழந்தைசாமி அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த வல்லுநர் குழுவில் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன், திரு. எஸ். குகன், டாக்டர் ஏ. வைத்தியநாதன், டாக்டர் சம்பந்தமூர்த்தி, டாக்டர் ராணி பெருமாள், திரு. மோகன கிருஷ்ணன், டாக்டர் டி. நடராஜன் மற்றும் டாக்டர் சி.ஏ. புண்டரிகாந்தன் ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெறுவர். வேளாண்மைத் துறைச் செயலர் இந்தக் குழுவின் உறுப்பினர் செயலராக இருப்பார்.

32. இஸ்ரேல் நாட்டில் குறைந்த அளவே மழை பெய்தாலும், சிறந்த தொழில் நுட்பங்களைக் கொண்டு விவசாயத்தை இலாபகரமாக நல்ல விளைச்சலுடன் நடத்தி வருகிறார்கள். எனவே, அந்த நாட்டுடன் தொடர்பு கொண்டு, அவர்களது தொழில் நுட்ப உதவியுடன் தமிழ்நாட்டிலும் குறைந்த மழை பொழியும் பகுதிகளில் விவசாயத்தை மேம்படுத்தி, விளைச்சலைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

33. நடப்பாண்டில் ரூ. 96.87 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் வேளாண்மை மேம்பாட்டுத் திட்டமும், ரூ. 23.80 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் வேளாண்மை மனிதவள மேம்பாட்டுத் திட்டமும் செயல்படுத்தப்படும்.




34. பூச் செடிகள் வளர்ப்பதற்குத் தேவையான முன்னுரிமை அளிக்கும் வண்ணம், வணிக ரீதியான பூச்செடிகள் வளர்ப்புக் கொள்கை ஒன்றை இந்த அரசு வகுக்கும். உள்ளூர் விற்பனைக்கும், ஏற்றுமதிக்கும் வேண்டிய தேவையை நிறைவுசெய்வதற்காகப் பூக்கள் ஏல விற்பனைமையம் ஒன்றை சென்னை விமான நிலையத்திற்கு அருகில் மொத்தம் ரூ. 20 கோடி செலவில் ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் தொழில் நிறுவனம், ரூ 1 கோடி மூலதனப் பங்குடன் கூட்டுத்துறையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காயிலிருந்து பலபொருள்கள் தயாரிக்கும் ஒருங்கிணைந்த தொழிற்சாலை ஒன்றை அமைக்கும்.

### பாசனம்

35. தமிழகத்தில் ஏறக்குறைய 40,000 கண்மாய்கள் உள்ளன. இவற்றில் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான 100 ஏக்கருக்கும் குறைந்த ஆயக்கட்டுடைய சுமார் 20,000 கண்மாய்களும், சுமார் 10,000 முன்னாள் ஜமீன் ஏரிகளும் பாரம்பரியமாக குடிமராமத்து வாயிலாகப் பழுதுபார்க்கப்பட வேண்டுமென்ற மரபிற்குட்பட்டு எவ்விதத் திட்டத்தின் கீழும் இணைக்கப்படாமல் பல்லாண்டு காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன. இந்த 30,000 ஏரிகள் குறித்து விரிவான ஆய்வு

மேற்கொள்ளவும், அவற்றைச் செப்பனிட்டு மேம்படுத்தும் சாத்தியக் கூறுகளைக் கண்டறியவும், உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதி உதவியுடன், மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றவும் இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

36. நீர் வளஆதார மேம்பாட்டுத் திட்டம் (Water Resources Consolidation Project), மொத்தம் ரூ. 1140 கோடி செலவில் உலக வங்கியின் கடனுதவியுடன் ஐந்தாண்டுகளில் நிறைவேற்றப்படும். இதற்காக, நடப்பு நிதியாண்டில் திட்ட ஒதுக்கீடு ரூ. 164.22 கோடியாகும். காவிரிப் பாசனத் திட்டத்தை தவிர, இம்மாநிலத்திலுள்ள பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்கள் அனைத்துக்கும் புத்துயிர் அளிக்க இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டம் 17.30 இலட்சம் ஏக்கரில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும். இது மாநிலத்தின் மொத்த மேல் நீர்பரப்பு பாசனப் பகுதியில் 50 சதவீதமாகும். இதனால், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் 40 இலட்சம் பேர் பயனடைவர். இதற்கான திட்ட விவரங்கள் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் இடம் பெறும்.

37. பெரியாறு அணை சுமார் ரூ. 18.5 கோடி செலவில் வலுப்படுத்தப்பட்டு, கூடுதலாக 16 அடி உயரம் தண்ணீர் தேக்கிவைக்கும் அளவுக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கிடைக்கக்கூடிய கூடுதல் தண்ணீரை மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களின் நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம், அப் பகுதிக்கு வைகை அணையிலிருந்து ஒரு கால்வாயை வெட்டி, அதன் மூலம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் மொத்தம் ரூ. 33.81 கோடி செலவில் நான்கு ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.

38. வட ஆர்க்காடு - அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்திலுள்ள ஆண்டியப்பனூர் ஓடைக்குக் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் ஒன்று ரூ. 18.28 கோடி செலவில் வரும் மூன்று ஆண்டுகளில் கட்டி முடிக்கப்படும்.

39. திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டத்தில், தென்காசி, வி.கே. புதூர் ஆகிய வட்டங்களில், வரட்டாறு மற்றும் குப்பத்து ஓடை ஆகியவற்றின் குறுக்கே நீர்த்தேக்கம், மூன்றாண்டுகளில் ரூ. 8.78 கோடி செலவில் கட்டி முடிக்கப்படும்.

40. திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்டத்திலுள்ள செண்பகத்தோப்பு நீர்த்தேக்கத் திட்டம் ரூ. 21.33 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு நான்கு ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.

### காவிரிப் பிரச்சினை

41. காவிரிப் பிரச்சினை சுமார் முப்பது ஆண்டுக் காலமாகத் தீராமல் இருந்து வரும் ஒன்றாகும். தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் கர்நாடக விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் இடையே இந்தப் பிரச்சினையை அரசியல் ஆக்கி ஆதாயம் தேடிட யாரும் முனையாமல் நடுநிலைத் தீர்ப்பு ஒன்றைப் பெற வேண்டுமென்ற நோக்குடன், தஞ்சை விவசாயிகள் தொடர்ந்த வழக்கில்




தமிழக அரசு தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டு மத்தியில் தேசிய முன்னணி ஆட்சி இருந்த போது, 1990ல் நடுவர் மன்றம் அமைந்திட வழிவகை கண்டது. நடுவர் மன்ற அமைப்புக்கு உள்ளிட்ட நிலையில் அதன் தீர்ப்புக்கு ஏற்ப, காவிரி நீரில் தமிழகத்து உரிமையைப் பெற சட்டரீதியாகவும் - அரசியல் மாச்சர்யங்களுக்கு அப்பாற்பட்ட அணுகுமுறையிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நாம் உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற நிலையில் உறுதியாக இருக்கிறோம். இதை இரு வேறு நாடுகளுக்கிடையேயுள்ள பிரச்சினையாகக் கருதாமல், இந்திய நாட்டின் இரு மாநிலங்களுக் கிடையேயான பிரச்சினை என்பதை ஒருமைப்பாட்டு உணர்வோடும், மனித நேய உணர்வோடும் நோக்குவதே சிறப்புடையதாகும்.


### கல்வி

42. நடப்பாண்டில், தொடக்கப் பள்ளிகள் இல்லாத ஒரு சில பகுதிகளில் 85 புதிய பள்ளிகள் அமைக்கப்படும். ஆசிரியர் நியமனத்தில் ஒழுங்கீனங்களும் முறைகேடுகளும் நடைபெறுவதைத் தடுக்க, வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்த முன்னுரிமையின் அடிப்படையிலேயே ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்படுவர். ''குறைந்த பட்ச கல்வித் திறன் அடைதல்'' என்கிற அடிப்படையில், தொடக்க வகுப்புகளுக்கான பாடத்திட்டம் மாற்றி அமைக்கப்படும். நடப்பாண்டில் ரூ. 50 இலட்சம் செலவில் ஆசிரியர் பயிற்சித் திட்டம் ஒன்று பெரிய அளவில் தொடங்கப்படும்.

43. தென் ஆர்க்காடு -.வள்ளலார், விழுப்புரம் - இராமசாமி படையாட்சியார், திருவண்ணாமலை - சம்புவரயர், தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் ரூ. 125.80 கோடி செலவில் மாவட்டத் தொடக்கக் கல்வித்

திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. மேலும், ரூ. 120 கோடி செலவில் மூன்று மாவட்டங்களுக்கு இத்திட்டத்தை நீட்டிக்க வகை செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில், இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு, ரூ. 25.51 கோடி ஆகும். மாநில அரசின் பங்காக ரூ. 4 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

*44.* நடப்பாண்டில் 21 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 99 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 80 உயர்நிலைப்பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும். உயர்நிலைப்பள்ளி களில் கூடுதலாக வகுப்பறைகள் கட்டுதல் உள்ளிட்ட அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூ. 6 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்த மூன்றாண்டுகளில் இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மேனிலைப் பள்ளிகளுக்கும், ஆய்வுக் கூடக் கட்டிடங்கள் கட்டித் தரப்படும்.





*45.* படிப்பில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், பள்ளியிறுதி வகுப்பில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு ப்ளஸ் 2 வரை படிப்பதற்கான செலவையும், ப்ளஸ் 2 வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு அவர்கள் தொடர்ந்து மருத்துவக் கல்லூரியிலோ, பொறியியல் கல்லூரியிலோ அல்லது வேறு பட்டப் படிப்போ படிப்பதற்காகும் செலவையும் அரசே ஏற்றுக் கொள்ளும் என்று கழக அரசு அறிவித்து இந்த ஆண்டு முதலே இது செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. அடுத்த ஆண்டு முதல், மாநில அளவில் மட்டுமின்றி மாவட்ட அளவிலும் இந்த முறையில் மாணவர்கள் ஊக்குவிக்கப் படுவார்கள்.

*46. 1989-90*ல் கழக அரசு, தொழிற்கல்வி படிக்க முன்வரும் மாணவர்களில் - அவர்கள் குடும்பத்தில் அதுவரை யாரும் பட்டதாரிகள் இல்லாமல் இருப்பார்களே யானால், அவர்கள் பெற்ற மதிப்பெண்ணில் 5 மதிப் பெண்களை அதிகமாக்கி ஆணை பிறப்பித்ததால், அனைத்து சமூகங்களையும் சேர்ந்த பல மாணவர்கள் பயன்பெற்றார்கள். ஆனாலும், இத்திட்டம் நீதி மன்ற ஆணையினால் தொடர்ந்து நடைபெற முடியாமல் போயிற்று. எனினும், இப்போது இந்த அரசு, ஒரு குடும்பத்தில் இதுவரை யாருமே பட்டதாரிகள் இல்லாமல் இருந்து, முதல் முதலாக தொழிற்கல்விப் படிக்க விரும்புவோரை ஊக்குவிப்பதற்காக ஒரு திட்டத்தை அறிவிக்கிறது. இதன்படி, பட்டதாரிகளாக இதுவரை யாருமே இல்லாத குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களில் மொத்தம் 300 மதிப்பெண்களில் முதல் பத்து இடங்களைப் பெறுவோர்களின் கல்விக்கான முழுச் செலவையும் பொறியியல் கல்லூரிகளிலும், மருத்துவக் கல்லூரிகளிலும், பல் மருத்துவக் கல்லூரிகளிலும், வேளாண்மைக் கல்லூரி களிலும், கால்நடை மருத்துவக் கல்லூரிகளிலும் அரசே ஏற்றுக்கொள்ளும்.

*47.* இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு உயர் கல்வி கற்பதில் முந்தைய அரசு விதித்திருந்த தடையை நீக்கி, தொழிற்கல்வி உள்ளிட்ட அனைத்துக் கல்வி யும் அவர்கள் கற்கும் வாய்ப்பை இந்த அரசு உருவாக்கியுள்ளது.

### சட்டப் பல்கலைக் கழகம்

*48.* சென்னை உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை மதுரையில் அமைப்பதற்காக இடம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. தற்காலிகமாக, மதுரை மாவட்ட நீதி மன்றத்தின் வளாகத்திலேயே இந்தக் கிளையைத் துவக்கி வைக்க உயர்நீதி மன்றத்தின் ஒப்புதல் கோரப்படும்.




*49.* இந்தச் சட்டமன்றத் தொடரில், சென்னையில் டாக்டர் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக் கழகம் அமைப்பதற்காக, சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பட்டு, அப்பல்கலைக் கழகம் நடப்பாண்டிலேயே செயல் படத் தொடங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

50. திருநெல்வேலியில் சட்டக் கல்லூரி ஒன்றைத் தொடங்க வேண்டுமென்ற நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் இந்தக் கல்லூரி நடப்பு நிதியாண்டிலேயே தொடங்கப்படும்.

### தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு

51. தமிழைப் பல்வேறு முனையிலும் வளர்த்திட இவ்வரசு முன்வந்துள்ளது. அதற்காகவே தனிக்கவனம் செலுத்தித் தமிழை வளர்க்கத் தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டுள்ளது. வெகு விரைவில் தமிழ் முழு ஆட்சிமொழியாக விளங்க ஆவன செய்யப்படும். 1956-ல் இயற்றப்பட்ட ஆட்சிமொழிச்சட்டம் பல அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டும் முழுமையாக நிறைவேறவில்லை எனும் ஆதங்கத்தைப் போக்கும் வகையிலும், தலைமைச் செயலகத்திலிருந்து இப்பணி தொடங்கும் வகையிலும், முதல்கட்டமாகத் தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் 500 வழங்கிட இந்த அரசு முன்வந்துள்ளது.

52. 1974ஆம் ஆண்டில் கழக அரசினால் நிறுவப்பட்டு, இடைக்காலத்தில் மிகவும் நலிந்து போயுள்ள செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டம் வேகமாகச் செயற்படவும், எஞ்சியுள்ள தொகுதிகள் யாவும் ஐந்தாண்டுகட்குள் முடிக்கப்படவுமான வகையில், இந்த ஆண்டு சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

53. மொழி ஞாயிறு எனத் தமிழ் நெஞ்சங்களால் புகழப்பட்டவரும், தனித்தமிழ் இயக்கத் தளநாயகரும், கழக அரசின் ''அகர முதலி'' தயாரிப்பைத் தொடங்கிடத் துணை நின்றவருமான பழுத்த பைந்தமிழ்ப் பெருமகனார், மறைந்த தேவநேயப் பாவாணர் அவர்களின் அரிய நூல்களை அரசுடைமையாக்கவும், அவரது குடும்பத்துக்குக் காப்பு நிதி வழங்கவும் ரூபாய் இருபது இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

54. பிற இயக்கத்தினர் நமதியக்கத்தின் மறைந்த தலைவர்களை மதித்துப் போற்றுகிறார்களோ இல்லையோ, நம்மைப் பொறுத்த வரையில் ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு'' என்ற அண்ணாவின் பண்பார்ந்த மொழியை மனத்திற் கொண்டு அனைத்து இயக்கங்களின் மறைந்த தலைவர்களுக்கு மரியாதை செலுத்துவதை என்றுமே மறந்ததில்லை. அந்தத் தமிழ்ப் பண்பாடு ஒளிவிடும் முத்தார வரிசையில் ஒன்றாகத் தான் தமிழ்நாட்டுப் படேல் எனப்படும் சர்தார் வேதரத்தினம் (பிள்ளை) அவர்களின் நூற்றாண்டு விழா 25.2.97 இல் கொண்டாடப்படும்பொழுது அவரின் நினைவாக அஞ்சல் தலை வெளியிடுமாறு மைய அரசுக்கு மடல் எழுதியுள்ளது இந்த அரசு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

55. தமிழ் மொழிக் காவலர்கள் 1935 பேரும், அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்கள் 441 பேரும், நலிந்த கலைஞர்கள் 4267 பேரும் பயனடையும் வகையில் வழங்கப்படும் உதவித் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 400 என்பது ரூ. 500 ஆக உயர்த்தப்படும். 1,778 உலமாக்கள் தற்போது பெற்றுவரும் மாத ஓய்வூதியத் தொகையான ரூ. 400 என்பது ரூ. 500 ஆக உயர்த்தப்படும். அதேபோல், ஓதுவார்கள் 100 பேரும், மறை மற்றும் திவ்வியப்பிரபந்தத்தை ஓதியவர்கள், அரையர் சேவை செய்தவர்கள் 100 பேரும், அர்ச்சகர்கள் 500 பேரும் பயனடையும் வகையில், தற்போது அவர்கள் பெறும் ஓய்வூதியத் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 300-லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்படும். இந்த உதவித் திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு, 1500 கிராமப் பூசாரிகளுக்கும் மாதந்தோறும் உதவித் தொகை ரூ. 500 வழங்கப்படும்.

56. ஆந்திர மாநிலம் குப்பம் பகுதியில் அமைந்துள்ள திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு நமது பங்காக முதல் தவணையாக ரூ. 50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

57. பிறமொழிகளில் உள்ள பழைய சிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் திட்டத்திற்கு, நடப்பாண்டில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.







58. மெட்ராஸ் என்றும் மதறாஸ் என்றும் பிற மொழிகளில் வழங்கப்படும் சென்னை மாநகரின் பெயரை

இனிமேல் ''சென்னை'' என்ற ஒரு பெயரில் மட்டுமே எல்லா மொழிகளிலும் அழைக்க வேண்டுமென்று இந்த அரசு முடிவு செய்து, அதனை நடைமுறைப்படுத்த ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மக்கள் நல்வாழ்வு - குடும்ப நலன்

59. 1989 முதல் 1991 வரையிலான இந்த இரண்டே ஆண்டுகளில் மொத்தம் 136 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. அதன் பிறகு, 1991 முதல் 1996 வரையிலான ஐந்தாண்டுகளில் 93 கட்டிடங்கள் மட்டுமே கட்டப்பட்டன. தற்போது, தமிழ்நாட்டில் 600 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் இல்லை. 1995-96-ல் 70 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்க நடப்பாண்டிலோ மொத்தம் ரூ. 18 கோடி செலவில் 300 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு 600 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கும் இரண்டு ஆண்டுக் கால அளவில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்படும்.

60. சென்னையில் ரூ. 10 கோடி செலவில் தேசிய சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு, நாங்கள் மைய அரசை அணுகியுள்ளோம்.


61. தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் - காயிதே மில்லத் ஆகிய மாவட்டங்களில், ரூ. 57.51 கோடி செலவில், டானிடா சுகாதாரப் பாதுகாப்புத் திட்டம் (மூன்றாம் நிலை), 1996 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து செயல்படுத்தப்படும்.

### தொழில் வளர்ச்சியில் மறுமலர்ச்சி

62. இம்மாநிலத்தில் கணிசமான அளவில் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை அளிக்கும் பல்வேறு பெரிய தொழிற்சாலைகள் தொடங்கப்படும். 2000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 20,000 பேருக்கு அதற்குத் தொடர்பான வேலைவாய்ப்பும் அளிக்கும் வகையில், மறைமலைநகரில் ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் கார்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஃபோர்டு மஹேந்திரா நிறுவும்.

63. இங்கிலாந்து நாட்டின் பில்கிங்டன் நிறுவனத்தின் சார்பில் 500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பும், 5000 பேருக்கு அதன் தொடர்பான வேலைவாய்ப்பும் கிடைக்கக் கூடிய உலகிலேயே தலை சிறந்த கண்ணாடி தயாரிக்கும் தொழிற்சாலையொன்று ரூ. 550 கோடி முதலீட்டில், செங்கல்பட்டுக்கு அருகில் செங்குன்றம் கிராமத்தில் அமைப்பதற்கான ஒப்பந்தம் நேற்றைய தினம் (16.7.96) என் முன்னிலையில் கையெழுத்தாயிற்று என்பதை மிக்க மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

64. திருபெரும்புதூர் அருகே மொத்தம் ரூ. 2450 கோடி செலவில் ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் கார்களைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றைக் கொரியா நாட்டின் ஹூண்டாய் மோட்டார் கம்பெனி தொடங்கும். இதன் மூலம் 3000 பேருக்கு நேரடியாகவும், 30,000 பேருக்கு




அதற்குத்தொடர்பான வேலைவாய்ப்பும் கிடைக்கும். இதற்கான ஒப்பந்தம் நாளை 18.7.96 அன்று கையெழுத்தாகிறது.

65. தாபர்டு பாண்ட் நிறுவனம் ரூ. 600 கோடி செலவில் 6.6 நைலான் நூலிழை தயாரிக்கும் திட்டத்திற்கான கட்டுமானப் பணியை, கும்மிடிப்பூண்டி ''சிப்காட்'' தொழில் வளாகத்தில் தற்போது மேற்கொண்டுள்ளது. அந்தப் பகுதி மக்களின் அச்சத்தைப் போக்க, இத்தொழிற்சாலை மாசுக் கட்டுப்பாட்டைத் தீவிரமாகக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அத்தகைய சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க வேண்டுமென்றும் அரசின் ஆணைகள் வலியுறுத்தப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

66. மொத்தம் ரூ. 168 கோடி செலவில் பொள்ளாச்சி அருகே முழுவதும் ஏற்றுமதி நோக்கிலான இறைச்சி ஏற்றுமதி நவீனக் கூடம் ஒன்றை, அபுதாபியில் உள்ள என்.கே நிறுவனங்களுடன் 'டிட்கோ' நிறுவனம் இணைத்துறையில் (Associate Sector) நிறுவும்.

67. மேலும், ரூ. 38.4 கோடி செலவில் ஒருங்கிணைந்த தேங்காய் செய்முறைப்படுத்தும் திட்டம் ஒன்றுட ராய்சுரானா நிறுவனத்துடன் இணைந்து நிறுவப்படும்.

68. மாநிலத்தில் நிலையான வர்த்தகப் பொருட்காட்சி மையம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பிற்கு நாங்கள் புத்துயிர் அளிப்போம். தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (டாசிட்) இந்திய ஏற்றுமதி அமைப்புகள் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடன், மொத்தம் ரூ. 120 கோடி செலவில், சென்னைக்கு அருகில் வர்த்தகப் பொருட்காட்சி மையம் ஒன்றை அமைக்கும்.

69. அரசின் ''டாசிட்'' நிறுவனம், திருப்பூர் ஏற்றுமதியாளர்களின் சங்கம், ''ஐ.எல்.எப்.எஸ்'', மைய அரசு ஆகியவற்றிடமிருந்து பங்கு மூலதனங்களைப் புதிய திருப்பூர் பகுதி வளர்ச்சி நிறுவனம் பெற்று, ரூ. 1313.20 கோடி செலவில், திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயலாக்கும்.

70. தொழிலதிபர்கள், அவர்களுடைய குறைகளையும், வேண்டுகோள்களையும் உயர்நிலையில் நேரடியாகத் தெரிவிக்க ஒரு முறையான அமைப்பு உருவாக்கப்படும். முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு, தொழில்வளர்ச்சி குறித்த உச்சநிலைக்குழு ஒன்று உருவாக்கப்படும். இதில் பல்வேறு வர்த்தகத் தொழில் அமைப்புகளின் நியமனதாரர்கள் 12 பேரும், அரசு நியமிக்கும் 6 முக்கிய தொழிலதிபர்களும், பல்வேறு துறைகளின் அதிகாரிகளும் உறுப்பினர்களாக இருப்பர்.

71. தொழில் வளத்துக்குத் துணை நிற்கும் தொழிலாளர்களின் துயரம் துடைப்பதிலும், உரிமைகளை மீட்பதிலும் அக்கறை கொண்டுள்ளது இந்த அரசு என்பதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாக நம் தொழிலாளர் நல அமைச்சர் முன் நின்று நடத்திய பேச்சு வார்த்தை காரணமாக பி அண்டு சி மில் தொழிலாளர்கள் பிரச்சினை சுமூகமாக முடிந்துள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

### கனிமத் தொழில்

72. தமிழ் நாட்டில் கிடைக்கும் கனிமவளத்தை முறையாகப் பயன்படுத்தி, தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கவும், அரசுக்கு வருவாயைப் பெருக்கவும் உகந்த கனிமக் கொள்கையையே கழக அரசு பின்பற்றி வந்திருக்கிறது. 1989-90-ல் கழக அரசு பொறுப்பிலிருந்தபோது கற்குடைவுக் குத்தகைகள், முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி (Sealed Tender System) முறையில் மட்டுமே கொடுக்கப்பட வேண்டுமென்றும், ஒப்பந்தப்புள்ளிதாரர் ஒப்புரிமைக் கடிதம் பெற்ற இரண்டாண்டுகளுக்குள் கிரானைட் கல்லை வெட்டி மெருகூட்டும் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டுமென்றும் வரையறுக்கப்பட்டது.

73. இந்தக் கொள்கை அடிப்படையில் 1989-90 ஆண்டுகளுக்கிடையில் இரண்டு கட்டங்களாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 262 ஹெக்டேர் நிலப்பரப்பில் கற்குடைவு செய்யத் குத்தகைகள் வழங்கப்பட்டன. அதனால் மாநில அரசுக்கு ரூ. 20 கோடி அந்த இரண்டே ஆண்டுகளில் வருமானம் வந்தது.

74. ஆனால், பிறகு வந்த அரசு இம்முறையை மாற்றும் வகையில் தமிழ்நாடு சிறுவகை கனிமங்கள் சலுகைகள் விதிகளின் விதி 39 ஐப் புதிதாக அறிமுகப்படுத்தி, ஒப்பந்தப்புள்ளி முறையை ரத்து செய்துவிட்டது. அதன் காரணமாக, 1993 முதல் 1996 வரையிலான மூன்றாண்டுகளுக்குள் 160 ஹெக்டேர் பரப்பளவுக்கு ரூ. 5.12 கோடி மட்டுமே வருவாய் கிடைத்துள்ளது. இதைவிட கழக ஆட்சியில் இரண்டே ஆண்டுகளில் அரசுக்குக் கிடைத்த வருவாய் நான்கு மடங்கு அதிகமாகும்.

75. இந்த அரசின் புதிய கனிமக் கொள்கைப்படி குத்தகைக் காலம் 10 ஆண்டுகளுக்குப் பதிலாக 20 ஆண்டுகளாக இருக்கும். கருங்கல் வெட்டி எடுத்து மெருகூட்டும் தொழிற்சாலையை மூன்றாண்டுகளுக்குள் நிறுவ வேண்டும். இந்த புதிய கொள்கையால் அரசுக்கு வரவேண்டிய வருவாய் அதிகரிப்பதுடன் தொழில் வளர்ச்சிக்கும் வழி வகுக்கும்.

### மின்விசை மேம்பாடு

76. 1989-91 ஆம் ஆண்டுகளில் இந்த அரசு ஆட்சியில் இருந்தபோது, வடிவமைத்து உருவாக்கி தொடங்கப்பட்ட, 630 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் உற்பத்தித் திட்டம் - I 120 மெகாவாட் திறன் கொண்ட பேசின் பிரிட்ஜ் எரி வாயு சுழல் தட்டு (Gas Turbine) மின் விசை உற்பத்தித் திட்டம் ஆகியவை அண்மையில்தான் இயக்கி வைக்கப்பட்டுள்ளன. 1996-97 ஆம் ஆண்டில் 7.5 மெகாவாட் திறன் கொண்ட சாத்தனூர் புனல் மின் திட்டம், 8 மெகாவாட் திறன் கொண்ட கீழ்பவானி புனல் மின் திட்டம் ஆகியவை தொடங்கி வைக்கப்படும்.

77. தமிழ்நாட்டில் மேற்கொண்டு மின் உற்பத்தியை அதிகரிப்பது, முக்கியமாக, தனியார் துறையில் மேற்கொள்ளப்படும். அடுத்த 10 ஆண்டுகளில், 10,878 மெகாவாட் அளவிற்கு மின் உற்பத்தி செய்யத் தமிழ்நாடு மின் வாரியம் 16 தனியார் தொழில் முனைவர்களைக் கண்டறிந்துள்ளது. 500 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டம் - III, பிள்ளைபெருமாநல்லூரில் 330.5 மெகாவாட் திறன் கொண்ட எரி வாயு அடிப்படையிலான மின்விசைத் திட்டம், வடசென்னை நிலை II, கடலூர் ஆகிய இடங்களில் உள்ள அனல் மின் விசைத் திட்டங்கள், பேசின்பிரிட்ஜ், சமயநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள டீசல் மின் விசைத் திட்டங்கள் ஆகியவற்றிற்கான மின்விசை கொள்முதலுக்குரிய ஒப்பந்தங்கள் பரிசீலனையில் உள்ளன.

78. புதிய மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்குத் தனியார் துறையை மட்டுமே நம்பியிருக்காமல், செய்யூரில் 2000 மெகாவாட் திறன் கொண்ட தென் சென்னை அனல் மின் நிலையத் திட்டத்தைத் தேசிய அனல் மின்விசை நிறுவனத்துடன் இணைந்து கூட்டு நிறுவன அமைப்பின் மூலம் செயல்படுத்தப்படும். உடனடியாக உள்ள மின் பற்றாக் குறையைச் சமாளிக்க, குறுகியகால நடவடிக்கையாகத் திரவ எரிபொருளை (Liquid fuel) அடிப்படையாகக்கொண்டு மின் உற்பத்தி செய்யும் நிலையங்களை அமைத்திடும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

79. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் மின் உற்பத்தித் தொழிற்பிரிவுகள் அமைக்கப்படும். நடப்பு நிதியாண்டில், ஐந்து சர்க்கரை ஆலைகளில் 83.32 மெகாவாட் கூடுதல் மின் உற்பத்தித் திறன் கொண்ட மின் உற்பத்தித் தொழிற்பிரிவுகள் ஏற்படுத்தப்படும். மேலும், 87 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட தொழிற்பிரிவும், 1997-98 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளது.

### சாலைகள்

80. ஊரகப் பகுதிகளில் சிறப்பான சாலைகள் அமைக்கப்படுவதற்கு உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்படும். அதற்கேற்ப, ஊரகச் சாலைகள் திட்டத்தின் கீழ் 1991 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 1000க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் பயன்பெறும் வகையில் கிராமச் சாலைகள் அமைக்க 1995-96 ஆம்

**ஆண்டில் இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 18.50 கோடியாயிருக்க, நடப்பு நிதியாண்டில் ரூ. 28.00 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது**. நடப்பு நிதியாண்டில் பேருந்து வழித்தடச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ. 14 கோடியாக இருக்கும் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஊரக விற்பனை மையங்களுக்குச் சாலைகள் அமைப்பதற்கான பணிகளுக்காக நடப்பு நிதியாண்டில் ரூ. 30 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. இத்துடன், புயல் மற்றும் வெள்ளத்தால் சேதமுற்ற சாலைகள், பாலங்களை மேம்படுத்த, தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

81. தமிழ்நாடு நகர்ப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் சாலைப் பணிகளுக்காக, நடப்பாண்டிற்கு ரூ. 35 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்தைச் செயற்படுத்த ரூ. 20 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### போக்குவரத்து

82. இம்மாநிலத்தில், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பல, நிதிநிலை நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றன. நடப்பாண்டில் இப்போக்குவரத்துக் கழகங்கள் அனைத்தும் சேர்ந்து மொத்தம் ரூ. 300 கோடி இழப்பை அடையக் கூடும். அண்மையில் மைய அரசால் அறிவிக்கப்பட்ட டீசல் விலை உயர்வின் காரணத்தால், இந்த இழப்பு இன்னும் அதிகமாகும். வீண் செலவைக் குறைத்து திறனை அதிகரிப்பதன் மூலம், இந்தப் போக்குவரத்துக் கழகங்களின் நிதி நிலையை மேம்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

**83. 1989-91 ஆம் ஆண்டுகளில் கழக அரசு ஆட்சியில் இருந்தபோது, எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்வதற்கான சலுகை அளிக்கப்பட்டது. இச்சலுகையைப் பத்தாம் வகுப்புவரை படிக்கும் மாணவர்களுக்கும் இந்த ஆண்டு முதல் நீட்டிக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**


### துறைமுக மேம்பாடு

84. பன்னாட்டு வணிகம், கடற்கரையோரக் கப்பல் போக்குவரத்து, கடல் மீனளம் இவை தொடர்பான பணிகளை மேம்படுத்தப் பெருமளவு வாய்ப்புள்ள மிக நீண்ட கடற்கரைப் பகுதி தமிழ்நாட்டிற்கு இயற்கை அளித்துள்ள ஓர் அரிய செல்வமாகும். இதனை நன்கு பயன்படுத்தி சிறு துறைமுகங்களை மேம்படுத்தும் பணிக்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்க முடிவு செய்துள்ளது. இந்த நோக்கத்தைச் செயலாக்கும் பொருட்டு, **கடல் சார் வாரியம் (Maritime Board) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது**. இது, துறைமுகங்களின் மேம்பாட்டிற்கான வழிவகைகளை வகுப்பதோடு, தனியார் துறையிடமிருந்தும், நிதி நிறுவனங்களிட மிருந்தும், முதலீடுகளைப் பெற முயலும். குஜராத் மாநிலத்தில் இத்தகைய வாரியத்தின் செயல்பாடுகளை நேரில் கண்டறிந்து வந்த போக்குவரத்துத்துறை அமைச்சரின் பரிந்துரைகளின் அடிப்படையில், இராமேஸ்வரம், பாம்பன், வாலிநோக்கம், குளச்சல், கன்னியாகுமரி, **எண்ணூர், புன்னக்காயல் போன்ற சிறு துறைமுகங்களை விரிவுபடுத்தக்கூடிய மற்றும் தொண்டி, கொற்கை, மாமல்லபுரம், போன்ற இடங்களில் புதிய துறைமுகங்களை உருவாக்கக் கூடிய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து ஒரு 'துறைமுக விரிவாக்கக் கொள்கை அறிக்கையை' இந்த வாரியம் தயாரிக்கும். அந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில், சிறிய துறைமுகங்கள் விரிவாக்கப் பணியும், புதிய துறைமுகங்கள் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்படும். வாலிநோக்கத்தில் கப்பல் உடைக்கும் தளத்திற்குப் புத்துயிர் அளிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்.**

### ஊரக வளர்ச்சி

85. ஜவகர்வேலைவாய்ப்புத் திட்டம், நடப்பாண்டில் ரூ. 157.05 கோடி நிதி ஒதுக்கீட்டுன் செயல்படுத்தப்படும். இதில் மாநில அரசின் பங்குத் தொகை, ரூ. 31.41 கோடியாக இருக்கும். 1972 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இலவசகான்கிரீட் வீடு கட்டும் திட்டம் இந்தியாவிலேயே முதன் முதலாகக் கழக அரசால் தொடங்கப்பட்டு, இன்று இந்திரா குடியிருப்புத் திட்டம் என்ற பெயரில் விளங்குகிறது. **இத்திட்டத்தின் கீழ், 71,597 ஒட்டுவில்லை வீடுகள் கட்டுவதற்காக ரூ. 100.24 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், மாநில அரசும் ரூ. 50.81 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து, அனைத்து வகைப் பயனீட்டாளர்களுக்கும், கான்கிரீட் தளம் போட்ட வீடுகள் இலவசமாகக் கட்டித் தரப்படும். இதில் ஆதிதிராவிடர்களுக்காக ரூ. 126 கோடி செலவில் 60,000 இலவச கான்கிரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டமும் அடங்கும். ''பத்து இலட்சம் கிணறுகள்'' திட்டத்திற்கு ரூ. 39.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.**

### வீட்டு வசதி




86. இன்றுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், அரசு அலுவலர்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் தேவைகளை மட்டுமே நிறைவு செய்யும் வகையில் செயல்பட்டு வருகிறதே தவிர, ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு வீடு கட்டுவதற்கு முயற்சி மேற்கொள்ளுவதில்லை. **இந்த நிலையை மாற்றும் நோக்கத்துடன், ஊரக வீட்டு வசதி வாரியம் ஒன்றை இந்த அரசு தொடங்க உள்ளது.**

### நகர்ப்பகுதி வளர்ச்சி

87. தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் **கணிசமான நிதி ஒதுக்கீடு இன்னும் பயன்படுத்தப்படாமல் உள்ளதால், இத்திட்டத்தை மேலும் மூன்றாண்டுகளுக்கு நீட்டிக்கக் கோரியுள்ளோம். இத்திட்டம், இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 146.25**

கோடி உட்பட, ரூ. 260.50 கோடி மொத்த ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சி நிதி என்கிற தனி அமைப்பொன்று ஏற்படுத்தப்படும். இந்த அமைப்பு மாநில அரசு மற்றும் நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற்று, நகராட்சிப் பகுதிகளில், அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு நிதியுதவி அளிக்கும்.

88. இம்மாநிலத்தில் பல்வேறு நகராட்சிகளுடன் புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க, ரூ. 9.15 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய மாநகராட்சிகளை மேம்படுத்த, ரூ. 100 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்படுமென்று, ஆளுநர் உரையில் அறிவிக்கப் பட்டுள்ளது. இதற்கேற்ப, நடப்பாண்டில் ரூ. 25 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

89. பேரூராட்சிகளில் தெருவிளக்குகள் அமைத்தல், சாலைகளை மேம்படுத்துதல், சிறந்த முறையில் துப்புரவுப் பணிபுரிதல், குடிநீர் வழங்குதல் ஆகியவை உட்பட, அடிப்படை வசதிகளுக்கு வகைசெய்ய, நடப்பாண்டில் ரூ. 25 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

90. குடிசைப் பகுதிகளின் நிலையை உயர்த்த, பத்தாவது நிதிக்குழு பரிந்துரைத்த ரூ. 60 கோடிக்கான சிறப்பு மானியத்தையும் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் பயன்படுத்திக் கொள்ளும். இதற்காக, நடப்பாண்டில் ரூ. 12 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

91. 1970 ஆம் ஆண்டு கழக அரசில் தொடங்கப்பட்ட குடிசை மாற்று வாரியத்தால் உருவாக்கப்பட்ட வீடுகள், அங்கே குடியிருப்பவர்களுக்கு, அவர்கள் விரும்பினால், எளிய தவணை முறையில் நியாயமான விலை நிர்ணயிக்கப்பட்டு அவர்களுக்கே உரிமை ஆக்கப்படும்.


### சென்னை மாநகர் மேம்பாடு

92. சென்னைப் பெருநகர்ப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்த, ரூ. 200 கோடி அளவிற்கு முதலீடு செய்யப்படும். அதற்கேற்ப நடப்பாண்டில் பெருநகர் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திற்கு ரூ. 50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையைப் பயன் படுத்தியும் நிதிநிறுவனங்களிடமிருந்து நிதியைப் பெற்றும், இந்நிறுவனம் அடிப்படை வசதி மேம்பாட்டுப் பணிகளில் முதலீடு செய்யும்.

93. புறவழி சுற்றுச் சாலை அமைப்பதற்காக நிலங்களைக் கையகப்படுத்த, ரூ. 9.80 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### சென்னைப் பிற பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கல்

94. அண்மையில் ஆந்திரப் பிரதேச முதல்வருடன் நான் பேசியதைத் தொடர்ந்து நம் பொதுப்பணித்துறை அமைச்சர் ஐதராபாத் சென்று, பேச்சு வார்த்தை நடத்தி, செய்து கொண்டுள்ள உடன்படிக்கையின்படி, சென்னை மாநகருக்கு 1983- ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கிணங்க, 12 டி.எம்.சி. தண்ணீர் வழங்கப்படும் என்பது உறுதி




செய்யப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக, 3 டி.எம்.சி. தண்ணீர் நடப்பாண்டிற்குள் சென்னைக்கு வருவதற்கு எல்லாவித ஏற்பாடுகளையும் இரு மாநில அரசுகளும் போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டுள்ளன. இரண்டாவது கட்டத்தில் 4 டி.எம்.சி தண்ணீரும் 3 வது கட்டத்தில் 5 டி.எம்.சி. தண்ணீரும் சென்னைக்கு வழங்க ஆந்திர அரசு இந்த ஒப்பந்தம் மூலம் உறுதி செய்துள்ளது. இந்தப் பணிகளையெல்லாம் விரைவுபடுத்த ஆந்திர அரசுக்கு நடப் பாண்டில் வழங்க வேண்டியதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.50 கோடியாக உயர்த்தப்பட்டு அதில் ரூ.25 கோடி வழங்கப்பட்டுவிட்டது.

95. மணலியைச்சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள கிணறுகளுக்கு நீர்வரவை ஏற்படுத்தும் பொருட்டு, பம்பு மூலம் நீரைச் சேமிக்கும் திட்டம் ஒன்று, ரூ. 26 கோடி செலவில் தொடங்கப்படவுள்ளது. நடப்பாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ. 5 கோடி நிதிஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

96. சென்னை மாநகரில் கழிவு நீரகற்று வசதிகள் இல்லாத தெருக்களுக்கு, வீட்டு உரிமையாளர்கள் புதிய இணைப்புகளுக்கான உரிய கட்டணங்களைச் செலுத்து வதற்குட்பட்டு, கழிவு நீரகற்றல் வசதிகளை விரிவுபடுத்த ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

97. சென்னை மாநகரில் ஆதி ஆந்திரக் குடியிருப்பு களுக்கு இலவசமாகக் கழிவு நீரகற்றல் வசதிகளைச் செய்து கொடுக்க, ரூ. 5, கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

98. ஊரகப் பகுதிகளில் 2770 மின்விசை நீரேற்றுத் திட்டங்களை நிலையுயர்த்துவதற்கு, நடப்பாண்டில் ரூ. 30 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 289 கூட்டுக் குடிநீர் வழங்குத் திட்டங்களை மேம்படுத்து வதற்கும், ரூ. 12.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதோடு கூட, தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்தின் மூலம் கூட்டுக் குடிநீர் வழங்குத் திட்டங்களைப் பராமரிப்பதற்கு, முதன் முறையாக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கூட்டுக் குடிநீர்த் திட்டங் களைப் பராமரிப்பதற்காக, தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியத்தில் 2,000 பேர் புதிதாகப் பணி நியமனம் செய்யப்படுவர்.

### சுற்றுச் சூழல்


99. சுற்றுச் சூழலைப் பாதுகாக்க, இந்த அரசு உயர்முன்னுரிமை அளிக்கும். தோல் பதனிடு தொழிற்சாலைகள், துணிகளுக்குச் சாயம் தோய்க்கும் தொழிற்சாலைகள், சவ்வரிசி தயாரிப்புத் தொழில் பிரிவுகள், உணவகங்கள், மருத்துவமனைகள், இரசாயனத் தொழில் பிரிவுகள். ஆகியவை உட்பட, 3130 தொழிற்சாலைகளுக்கான 57 கழிவுநீர் சுத்திகரிப்பு பொது நிலையங்களை ஏற்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. இதற்காக, மாநில அரசின் உதவித் தொகையின் பங்காக, ரூ. 2.50 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

100. காற்று மாசுபடுவதைக் கண்காணிக்கும் தொடர் ஏற்பாட்டு முறைகள் இரண்டை, ஒவ்வொன்றும் ரூ. 40 இலட்சம் செலவில் தூத்துக்குடியிலும், கடலூரிலும் அமைக்க, நடப்பாண்டில் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

101. மேலும், பல்வேறு வகைகளில் சுற்றுச் சூழல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தி, நிர்வகிக்க, விரிவான செயல்திட்டம் ஒன்றை நாம் வகுக்க உள்ளோம். இதற்காக, ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டுள்ளது.

### கால்நடை வளர்ப்பு

102. நடப்பாண்டில் கால்நடை மருந்த கங்கள் பத்து, கால் நடை மருத்துவ மனைகளாக நிலை உயர்த்தப்படும். புதிதாகப் பத்து கால் நடை மருந்தகங் களும் தொடங்கப் படும். கால்நடை மருத்துவ -அறிவியல் பல்கலைக் கழகத்தின் கீழ் வருகின்ற நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியிலும், தூத்துக்குடி மீனளங்கள் அறிவியல் கல்லூரியிலும் மாணவியர் தங்கும் விடுதிகள் கட்டடப்படும்.





### வனவளம்

103. தமிழ்நாடு விரிவாக்கக் காடு வளர்ப்புத் திட்டம் ஒன்று ரூ. 496 கோடி செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்புதல் ஜப்பான் நாட்டின் வெளிநாட்டுப் பொருளாதார ஒத்துழைப்பு நிறுவனத்திட மிருந்து இந்த ஆண்டிலேயே கிடைக்கும். இத்திட்டச் செயலாக்கத்தைத் தொடங்க, வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 1 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.


### மீனவர்களுக்கு இலவச வீடு கட்டும் திட்டமும் அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டமும்.

104. தமிழகத்திலுள்ள 442 மீன்பிடிக் கிராமங்களில் தற்போது கூரை வீடுகளிலே வாழும் மீனவர் குடும்பங்களுக்கு, மின் விளக்கு, ஒன்றுடன் கூடிய 20,000 வீடுகள் கட்டிக்கொடுக்கும் ஒரு சிறப்புத் திட்டத்தை வரும் ஐந்தாண்டுகளில் இந்த அரசு செயல்படுத்தும் என்பதை இம்மாமன்றத்தில் மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண்டொன்றுக்கு 4,000 இலவச வீடுகள் கட்டவும், தற்போது பழுதடைந்த நிலையிலிருக்கும் வீடுகளை மேம்படுத்தவும், இணைப்புச் சாலைகள், தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும், வரும் ஐந்தாண்டுகளில் செலவிடப்படும் தொகை ரூ. 75 கோடியாக இருக்கும். முதற்கட்டமாக, இத்திட்டத்திற்காக வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 6.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




### வேலை வாய்ப்பு

105. வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 1988ஆம் ஆண்டில் 26 இலட்சத்து 7 ஆயிரத்து 92 ஆக இருந்த பதிவு செய்தோரின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து 1995ஆம் ஆண்டு 34 இலட்சத்து 79 ஆயிரத்து 202-ஐ எட்டியுள்ளது. ஆனால், 1988 ஆம் ஆண்டில் 54,388 ஆக இருந்த வேலை கிடைத்தவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து 1995-ல் 16,592 அளவிற்குச் சரிந்துள்ளது. இந்த நிலையைச் சீராக்கவும், ஊரக மற்றும் நகர்ப்பகுதிகளில் உள்ள வேலை






வாய்ப்பற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டுவதைக் உறுதி செய்வதற்கும், இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும்.

*106.* இஃதன்னியில் பத்தாம் வகுப்பு வரையிலும், அதற்கு மேலும் படித்துவிட்டு வேலை வாய்ப்புக் கிட்டாமல் இருக்கும் இளைஞர்களுக்கு, மாதம் ரூ. 500 மதிப்பூதியத்தில், கிராமப்புறங்களில் முதியோர் கல்வி, தொடர் கல்வி, படிப்பகங்கள் மூலம் உலக அறிவு பரப்புதல், கிராமப் பொதுச்சொத்துக்களைப் பேணிக்காத்திடத் துணைபுரிதல், சிறு சேமிப்புத் திட்டத்திற்கு உதவுதல் போன்ற பணிகளை வழங்கி ஓர் ஊராட்சிக்கு 2 பேருக்கு ''மக்கள் நலப் பணியாளர்'' என்று மொத்தம் 25,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும். இதேபோல் நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 12-வது வகுப்பு (+2) தேர்வு பெற்ற 10,000 பேர் மக்கள் நலப் பணியாளர்களாக நியமிக்கப்படுவார்கள்.

### வேலை வாய்ப்பும் மகளிர் மேம்பாடும்

*107.* குடிப் பழக்கத்தால் ஏற்படும் தீமைகளை மக்களுக்கு எடுத்துரைக்க மகளிர் குழுக்கள் மூலம் விளம்பரங்கள் செய்யும் பணி, ஏற்கெனவே தமிழ்நாட்டில் சில தனியார் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதுபோல் அரசால் மேற்கொள்ளப்படும். 25,000 மகளிருக்கு வேலை வாய்ப்பு அளித்து இப்பணியில் ஈடுபடுத்தி, இத்திட்டத்தைச் செயற்படுத்த, ரூ. 5 கோடி நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.


*108. 1989* ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் ''தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம்'' என்னும் பெரும் திட்டத்தை கழக அரசு துவங்கியது. இத்திட்டம் தற்போது ஆறு மாவட்டங்களில் சில பகுதிகளில் மட்டும் செயல்படுத்தப்பட்டு, சுமார் 55000 ஏழைப் பெண்களுக்குப் பயனளித்து வருகிறது. கிராமப்புறங்களில் வாழும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள எல்லாப் பெண்களுக்கும், அதிக வருமானம் கிடைக்கவும், வேலைவாய்ப்பினைப் பெருக்கவும், இத்திட்டத்தினை நிதி உதவி நிறுவனங்கள், வங்கிகள் ஆகியோரின் பங்கு பெற்று, மொத்தம் ரூ. 1420 கோடி செலவில், மாநிலம் முழுவதும் நீட்டிக்க, இந்த அரசு முடிவு செய்துள்ளது. நடப்பாண்டில் 10 மாவட்டங்களில் 3 இலட்சம் மகளிர் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் செயல்பாட்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புற மகளிர் குழந்தைகளுக்கான வளர்ச்சித் திட்டம், பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், சிறப்பு உள்ளடக்கத் திட்டம், பயன்படுத்தாத நில அபிவிருத்தி நீர்ப்பிரிமுகடு வேளாண்மை போன்ற பல திட்டங்களும் ஒருங்கிணைக்கப்படும். இத்திட்டம் படிப்படியாக மற்ற மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படுவதன் மூலம், வரும் ஐந்தாண்டுகளில் 10 இலட்சம் மகளிர் பயன் பெறுவர்.

### சத்துணவு

*109.* கல்வி பயிலும் இளஞ்சிறார்க்காக முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சத்துணவுத் திட்டத்திற்கு, *1995-96* ஆம் ஆண்டில் மொத்தம் ரூ. 360 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்க, இந்நிதி ஒதுக்கம் நடப்பு நிதி ஆண்டில் ரூ. *401* கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்,
பயிற்றிப் பலகல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்.''

என்று பாடிய மகா கவி பாரதியாரின் ஆசையை முழுமையாக நிறைவு செய்திட, ஏழ்மையால் ஏற்படும் பசிக் கொடுமையை அறவே களைய பசிப்பிணி போக்கும் திட்டம் ஒன்றைப் புதிதாக இந்த அரசு செயல்படுத்தும். வறுமையை ஒழிக்கவும். மக்களில் பல்வேறு தொகுதி யினருக்குத் தேவைப்படும் சத்துணவை வழங்கவும் ஏற்கெனவே பல



திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அத்திட்டங்களின் கீழ் வராத பிரிவினர்களைக் கண்டறிந்து, அவர்களுக்கும் பயனளிக்கும் வகையில், **இந்தப்பசிப்பிணி போக்கும் திட்டம் அமையும். இதற்கான விரிவான செயலாக்கத் திட்ட அறிக்கையை டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் உதவியுடன் வெகுவிரைவில் உருவாக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலன்**

*110. ஆதிதிராவிடர் - பழங்குடியினர் நலனுக்காக,* ***1995-96 ஆம் நிதி ஆண்டில் மொத்தம் ரூ. 208.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்க, இது நடப்பு நிதி ஆண்டில் ரூ. 267.39 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.***

- ★ பட்ட மேற்படிப்பு மாணவர் விடுதி முதன் முறையாக நடப்பாண்டில் தொடங்கப்படும்.
- ★ ஆதிதிராவிட மாணவியர் விடுதிகள் அனைத்திற்குமான கட்டிடங்கள் கட்டும் மூன்றாண்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இதற்காக, நடப்பாண்டில் ரூ. 8.50 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.
- ★ ஆதிதிராவிட மாணவர்களுக்காக, புதிதாக 40 மாணவர் விடுதிகள் நடப்பாண்டில் திறக்கப்படும்.
- ★ ஆதிதிராவிடர் மேனிலைப்பள்ளிகள் அனைத்திற்கும், நடப்பாண்டில் மொத்தம் ரூ. 72 இலட்சம் செலவில் ஆய்வுக்கூடக் கட்டிடங்கள் கட்டப்படும்.
- ★ 25 உயர்நிலைப் பள்ளிகளுக்கு நடப்பாண்டில் ஆய்வுக்கூட வசதிகள் செய்து கொடுக்கப்படும். கணினி பாட வகுப்புகள் 10 ஆதி திராவிடர் நல மேனிலைப் பள்ளிகளில் தொடங்கப்படும்.
- ★ **பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்**

*111. 1969* ஆம் ஆண்டுக்கு முன் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காக ஒரு சில இலட்சங்களே நிதி ஒதுக்கிடு செய்யப்பட்டிருந்தது. 1969-ல் கழக ஆட்சியில் தான் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் துறைக்கென ஒரு தனி அமைச்சகமே அமைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் சீர்மரபினர் ஆகியோரது நலனுக்கான ஒதுக்கீடு 1995-96-ல் ரூ. 47.27 கோடியாக இருக்க, நடப்பாண்டில் ரூ. 54.31 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கல்வியிலும், வேலைவாய்ப்பிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரது நலனை மேம்படுத்துவதற்குத் **தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், பெருந்தலைவர் காமராஜரும் ஆற்றிய இடைவிடாத பணிகளைத் தொடர்ந்து, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், 69 சதவீத இடஒதுக்கீட்டின் பயன் முழுவதையும் பெறுவதை நிலைநிறுத்த, இந்த அரசு முழு அளவில் உறுதிபூண்டுள்ளது.** பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் மாணவர்களின் பயனுக்காக, புதிதாக மொத்தம் 45 மாணவர் விடுதிகள் நடப்பாண்டில் தொடங்கப்படும். நடப்பாண்டில் மொத்தம் ரூ. 58.32 இலட்சம் செலவில் மாணவர் விடுதிக்கட்டிடங்கள் ஒன்பது கட்டப்படும்.

***112. பத்தாம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இலவசமாக அனைத்துப் பாடப்புத்தகங்கள் வழங்கும் புதிய திட்டம் ஆண்டொன்றுக்கு ரூ. 45 இலட்சம் செலவில் நடப்பு நிதி ஆண்டு முதற்கொண்டு செயல்படுத்தப்படும்.***

**கைத்தறி நெசவாளர் நலன்**

*113.* இந்த அரசு இதற்கு முன் ஆட்சியில் இருந்தபோது, கைத்தறி நெசவாளர்கள் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தில், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. இருப்பினும், மிக அண்மைக் காலத்தில், இத்திட்டத்தைச் செயற்படுத்துவதில் எண்ணற்ற ஊழல்கள் நடைபெற்றன. **இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு நலன் பயக்கும் வகையில் செயல்படுத்தப்பட உறுதி கொண்டு, இதற்கென நடப்பாண்டில் ரூ. 65 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

*114. 1989-91* ஆம் ஆண்டுகளில் இலாபத்தில் இயங்கி வந்த கூட்டுறவு நூற்பாலைகள், கடந்த ஐந்தாண்டுகளில் பெரும் நட்டத்தில் இயங்கத் தொடங்கின. நிர்வாகச் சீர்கேடுகள் பல ஏற்பட்டதன் விளைவாக, 18 நூற்பாலைகளின் ஒட்டுமொத்த நட்டம் 1995-96 ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 181.43 கோடியளவிற்கு அதிகரித்துவிட்டது. இந்த ஆட்சி பொறுப்பு ஏற்பதற்கு முன்னர் தனது தேர்தல் அறிக்கையில் தமிழ்நாட்டில் மூடிக்கிடக்கின்ற பஞ்சாலைகளைத் திறப்பதற்கும், நலிவடைந்த பஞ்சாலைகளைச் **சீரமைத்துச் செயல்படுத்தித் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என வாக்குறுதி அளித்திருந்தது.** அதனடிப்படையில் தற்போது மூடிக்கிடக்கின்ற கூட்டுறவு நூற்பாலைகளையும் நலிந்த கூட்டுறவு நூற்பாலைகளையும் சீரமைத்துச் செயல்படுத்த இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.


*115.* கழக ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு 1975-76 ஆம் ஆண்டு முதல் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர் 58 வயது அடையும் முன்னர் இறக்க நேரிடில், வாரிசுதாரர்களுக்கு ஆயுள்காப்பீட்டு நிறுவனம் வழங்கும் காப்பீட்டுத் தொகை 1989-90 ஆம் ஆண்டு வரை ரூ. 3,000 ஆக இருந்தது. 1990-91 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் இத்தொகை ரூ. 3,000 லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது ஆயுள் காப்பீட்டுத் தொகை ரூ. 15000 ஆக உள்ளது. **இதனை உயர்த்தி வழங்க வேண்டுமென்று நெசவாளர் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளதற்கு இணங்க, இந்தக் காப்பீட்டுத் தொகை ரூ. 25,000 ஆக உயர்த்தப்படும். இதற்குத் தகுந்த தவணைத் தொகையை (Premium) அரசு செலுத்தும்.**

இச்சலுகையைப் பெற 58 வயதாக இருந்த உச்சவரம்பு 60 வயதாக உயர்த்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், ஒரு இலட்சத்து பத்தாயிரம் கைத்தறி நெசவாளர்கள் பயன் பெறுவர்.


**திரைப்படத் தொழிலுக்கு ஊக்குவிப்பு**

*116.* திரைப்படத் தொழிலில் உருவாகியிருந்த தயாரிப்பாளர் - தொழிலாளர் பிரச்சினையை, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் நானும் செய்தித் துறை அமைச்சரும் சுமுகமாகத் தீர்த்து வைத்ததை அனைவரும் அறிவீர்கள். திரைப்படத் தொழிலில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள தேய்வுநிலை குறித்துப் பல முறையீடுகள் அரசுக்கு வந்துள்ளன. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் சார்ந்துள்ள இத்தொழில் முடக்கப்படாமல் இருக்க, சில சலுகைகளை வழங்க அரசு முன் வந்துள்ளது.

*117.* தற்போது, மாநிலத் தொல்பொருள் துறை கட்டுப்பாட்டில் உள்ள கட்டிடங்கள், புராதனச் சின்னங்கள், அரசு நிறுவனங்கள் ஆகியவற்றில் படப்பிடிப்பு நடத்துவதற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 5000 என்றும், பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகள் கடற்கரைச் சாலைகள், நெடுஞ்சாலைகள், அணைக்கட்டுக்கள் போன்ற பொது இடங்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2500 என்றும் வசூலிக்கப்படுகிறது. **இது மிகவும் அதிகம் என்று கருதி, நாளொன்றுக்கு ரூ. 5000 என இருக்கும் கட்டணம் ரூ. 1000 ஆகவும், ரூ. 2500 என இருக்கும் கட்டணம் ரூ. 500 ஆகவும் குறைக்கப்படுகிறது.**




***118.* 25 பிரதிகளுக்குக் குறைவாக குறைந்த செலவில் எடுக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு 1989-ல், கழக அரசால் தொடங்கப்பட்ட திரைப்படமானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், தற்போது வழங்கப்படும் மானியத் தொகையான ரூ. 3 இலட்சம் ரூ. 5 இலட்சமாக உயர்த்தப்படும். அத்திரைப்படங்களுக்கு, அவை முதன்முறையாகத் திரையிடப்பட்ட நாளிலிருந்து, முதல் நான்கு வாரங்களுக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.**




**அரசு அலுவலர் நலன்**

***119.* எங்களது தேர்தல் அறிக்கையில் உள்ள வாக்குறுதியின்படி அரசு அலுவலர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதி ரூ. 60000 லிருந்து ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 3.20 கோடி கூடுதல் செலவாகும்.**

*120.* அரசுப் பணியாளர்களுக்கு உள்ளது போல, தமிழ்நாட்டில் உள்ள பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் பணியாளர்களுக்கும் நல்வாழ்வு நிதித் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இதற்காகத் தனித் தனியாக நிதி ஏற்படுத்தப்படும். இந்த நிதிக்கு அரசு தனது பங்காக ஆண்டுதோறும் ரூ. 20 இலட்சம் வழங்கும், அரசுப் பணியாளர்களிடமிருந்து பிடித்தம் செய்வது போலவே இப்பணியாளர்களிடமிருந்தும் ஆண்டொன்றுக்கு ரூ. 5 பிடித்தம் செய்யப்படும். இதன்படி சிறப்புச் சிகிச்சை மற்றும் சிறப்பு அறுவைச் சிகிச்சைக்கான செலவில் ரூ. 1 இலட்சம் அல்லது 75 விழுக்காடு இதில் எது குறைவோ அவ்வளவிற்கு உதவித் தொகை பெறுவர்.

*121.* குறைந்த ஊதிய விகிதம் பெறும் அரசு அலுவலர்கள் மிக அதிக அளவில் பயன்படுத்தும் மிதிவண்டி வாங்கத் தற்பொழுது வழங்கப்படும் முன்பணம் ரூ. 1,000 லிருந்து ரூ. 1,500 ஆக உயர்த்தி வழங்கப்படும். அதேபோல் தற்பொழுதுள்ள விலையைக் கருத்திற்கொண்டு புதிய கார் வாங்க வழங்கப்படும் முன்பணம் ரூ.1.4 இலட்சத்திலிருந்து ரூ. 2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். மோட்டார் சைக்கிள் வாங்க வழங்கப்படும் முன் பணம் ரூ. 25,000 லிருந்து ரூ. 35,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இதற்கேற்ப பழைய வாகனங்கள் வாங்க முன்பணம் உயர்த்தி வழங்கப்படும்.

*122.* தற்போது ஓர் அரசு அலுவலர் மகள் அல்லது மகனின் திருமணத்திற்காக வாங்கிய முதல் கடன், நிலுவையில் இருக்கும் பொழுது, அடுத்து இரண்டாவதாக

ஒரு கடன் திருமணத்திற்காக வாங்க இயலாது என்ற தடையை நீக்கி, மீண்டும் கடன் பெற வழிவகை செய்யப்படும். பண்டிகை முன்பணம் பெறும் பட்டியலில் தற்போது சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினம் சேர்க்கப்படவில்லை. இனி இந்த நாட்களும் இந்தப் பட்டியலில் இணைக்கப்படும்.

123. பணியிலிருந்து ஓய்வு பெறும் அலுவலர்கள் தற்பொழுது அதிகபட்சமாக 240 நாட்கள் ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து விடுப்புக்கால் சம்பளம் பெற வழிவகையுள்ளது. அரசு அலுவலர்களின் நீண்ட காலக் கோரிக்கையான தனிப்பட்ட அலுவலுக்காக வழங்கப்படும் அரைச் சம்பளத்துடன் கூடிய விடுப்பினை ஒப்படைப்பு செய்வதை இவ்வரசு ஏற்றுக் கொண்டு 90 நாட்களுக்கு மிகைப்படாமல் 50 விழுக்காடு விடுப்பினை (Half Pay Leave on Private Affairs) ஒப்படைப்பு செய்து விடுப்புக்கால முழுச் சம்பளம் வழங்க இவ்வரசு தீர்மானித்துள்ளது. மேலும் ஓய்வு பெறும் பொழுது ஒப்படைப்பு செய்யும் ஈட்டிய விடுப்பிற்கு 180 நாட்களுக்கு மேலுள்ள நாட்களுக்கு விடுப்புக்காலச் சம்பளம் வழங்கும்பொழுது, இனிமேல் வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி போன்ற இதரப்படிகளும் சேர்ந்து முழுச் சம்பளம் வழங்கப்படும். மேற்கண்ட சலுகையினால், ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்வதால் அதிகபட்சமாக 6 மாத விடுப்புக்கால முழுச்சம்பளமும், தனிப்பட்ட அலுவலுக்காக வழங்கப்படும் விடுப்பின் மூலமாக அதிகபட்சம் 3 மாத முழுச்சம்பளமும் கிடைக்கும். மாநில அரசில் பணிபுரியும் அனைத்திந்திய பணிகளைச் (All India Services) சார்ந்த அலுவலர்களுக்கும் இந்தச் சலுகை பொருந்தும். இச்சலுகையினால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 17 கோடி செலவாகும்.

124. அரசு ஊழியர்கள் தற்போதைய விதிப்படி முழு அளவு ஓய்வூதியம் பெற 33 ஆண்டுகள் பணி செய்திருக்க வேண்டும். ஆனால் தற்போது அரசுப் பணியாளர்கள் அரசுப் பணியில் நுழையும் வயது வரம்பு 28 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. எனவே 28 வயதில் ஒருவர் அரசுப் பணியில் சேர்ந்தால் அவர் முழு அளவு ஓய்வூதியத்திற்குத் தகுதி உடையவராக இல்லாமல் இருக்கும் நிலை உருவாகியுள்ளது. அரசுப் பணியாளர்கள் சங்கங்களின் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, முழு ஓய்வூதியம் பெறும் பணிக்கால வரம்பினை 33 லிருந்து 30 ஆகக் குறைக்கவும் ஓய்வூதியம் கணக்கிடும் முறையில் ஒரு சில மாற்றங்களைப் புகுத்தவும் இந்த அரசு முடிவெடுத்துள்ளது. எடுத்துக்காட்டாக, தற்போதுள்ள 10 மாத சராசரி அடிப்படை ஊதியத்தை நிர்ணயிப்பதைத் தவிர்த்து அரசு ஊழியர் ஓய்வு பெறும் நாளன்று அவர் பெறும் அடிப்படை ஊதியத்தில் 50 விழுக்காடாக அவரது ஓய்வூதியம் நிர்ணயிக்கப்படும். அதே சமயம், சில அரசுப் பணியாளர்கள் ஓய்வூதியம் பெறும் சமயத்தில் பணி இறக்கம் செய்யப்படும் நிலை சில துறைகளில் இருப்பதினால், 10 மாத சராசரியில் 50 விழுக்காடு அல்லது கடைசியாக அவர் பெற்ற ஊதியத்தின் அடிப்படைச் சம்பளத்தில் 50 விழுக்காடு, இது இரண்டில் எது அதிகமாக உள்ளதோ அந்தத் தொகையையே அந்த அரசுப் பணியாளரின் ஓய்வூதியமாக நிர்ணயிக்கலாம் என்று அரசு முடிவெடுத்திருக்கிறது. இது 1.7.96 முதல் நடைமுறைக்கு வரும்.

125. ஓய்வு பெறும் அரசு ஊழியர்களின் நலன் கருதி மேலே அறிவித்துள்ள இரண்டு ஓய்வூதியத் திட்டங்களுமே மைய அரசாலோ அல்லது வேறு எந்த மாநில அரசாலோ இதுவரை செயல்படுத்தப்படவில்லை என்பதையும், இவை இரண்டுமே இந்த அரசு அறிமுகப்படுத்தும் முன்னோடித் திட்டங்கள் என்பதையும் நான் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் குறிப்பிட விரும்புகிறேன்.

### ஓய்வூதியர் நலன்

126. ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு 1.10.95 முதல் வழங்கப்பட்ட இடைக்கால நிவாரணம் மைய அரசு ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டதைப் போல் 1.4.95 முதல் முன்தேதியிட்டு வழங்கப்படும். மேலும், ஓய்வு பெறும்போது 97 சதவீதம் அகவிலைப்படியை சம்பளத்துடன் சேர்த்துப் பணிக்காலக்கொடை கணக்கிட்டு வழங்குதல் மற்றும் பணிக்காலக்கொடையின் (Death-cum-Retirement Gratuity) உச்சவரம்பை ரூ. 2.50 இலட்சமாக உயர்த்தி வழங்குதல் போன்ற சலுகைகள் கடந்த ஆட்சியில் 1.10.1995 முதல் தான் வழங்கப்பட்டது. இவை மைய அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டதுபோல் 1.4.1995 முதல் முன்தேதியிட்டு வழங்கப்படும். அதேபோல், அரசு




அலுவலர்களுக்கு 1995 டிசம்பர் மாதம் முதல் உயர்த்தி வழங்கப்பட்ட மருத்துவப்படியை ஓய்வூதியம் மற்றும் குடும்பஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் ரூ. 50 ஆக உயர்த்தி வழங்கப்படும். இச்சலுகைகளினால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ. 7. கோடி தொடர் செலவும் ரூ. 57.50 கோடி தொடராச் செலவும் ஏற்படும்.

127. தமிழ்நாட்டில் சுமார் 2 இலட்சம் ஓய்வூதியம் பெறுவோர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பெறும் ஓய்வூதியத்திலிருந்தும் மாதந் தோறும் ரூ. 20 ஒரே சீராகப் பிடித்தம் செய்து ஒரு தனி நிதி உருவாக்கப்படும்.

இதுபோல், ஓர் ஆண்டு வரை பிடித்தம் செய்த பின்பு ஒய்வூதியம் பெறுவோர் இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு ரூ. 25,000 வழங்கும் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும். இதைப் பற்றிய விவரங்களை ஒய்வூதியம் பெறுவோர் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி இந்தத் திட்டத்திற்கு இறுதி வடிவம் அளிக்கப்படும்.

### பத்திரிகையாளர்களுக்கு ஒய்வூதியம்

128. 1989 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் பத்திரிகை யாளர்களுக்கான ஒய்வூதியம் திங்கள் ஒன்றுக்கு ரூ. 250-லிருந்து ரூ. 400 ஆக உயர்த்தப்பட்டது. 1992-ல் ரூ. 500 ஆக உயர்த்தப்பட்டது. இப்போது அவர்களின் கோரிக்கையை ஏற்று ஒய்வூதியத்தைத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 1000 என்று வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.




### முன்னாள் கிராம அதிகாரிகள் பிரச்சினை

129. முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு வேலை வாய்ப்பு அளித்ததோடல்லாமல் அவர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் திட்டமும் கழக அரசின் பரிசீலனையிலிருந்தது. அதைச்செயல்படுத்துமுன் அரசு கலைக்கப்பட்டு விட்டது. முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஒய்வூதியம் வழங்க நீதி மன்றம் (Tribunal) ஆணை பிறப்பித்தது. ஆனால் இதற்கு முந்தைய அரசு அந்த ஆணையின் மீது எவ்வித நடவடிக் கையும் எடுக்காதது மட்டுமில்லாமல் அரசின் மீது கிராம அதிகாரிகள் நீதி மன்ற அவமதிப்பு (Contempt of Court) மனுத்தாக்கல் செய்த பின்பு அதனை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் மேல் முறையீடும் செய்தது.

130. உச்ச நீதி மன்றத்தில் முந்தைய அரசு செய்த மேல் முறையீட்டைத் திரும்பப் பெற்று, முன்னாள் கிராம அதிகாரி களுக்கு ஒய்வூதியம் வழங்குவதன் மூலம், 8,500 பேர் பயன்பெறும் வகையில் தற்போது இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

### நிதி நிலைமை

131. முந்தைய அரசு இந்த அவையின் முன் வைத்த, 1996-97க்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் மொத்த வரவு ரூ. 10 ஆயிரத்து 543 கோடி என்றும், மொத்தச் செலவு ரூ. 11 ஆயிரத்து 505 கோடி என்றும் மதிப்பிடப்பட்டிருந்தது. இதனால், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூ. 962 கோடியாகும். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் மொத்த வரவுகள் ரூ. 11 ஆயிரத்து 68 கோடி என மதிப்பிடப்பட்டிருக்க, இது ரூ. 524.55 கோடி அதிகமாகும். மொத்தச்செலவு ரூ. 601.09 கோடி அதிகரித்து ரூ. 12 ஆயிரத்து 107 கோடியாக உள்ளது. இவ்வாறாக, வருவாய்ப் பற்றாக்குறை ரூ. 1038:63 கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது. இதற்கான முக்கியக் காரணங்கள், அகவிலைப்படி வழங்குவதற்கு இடைக்கால வரவு -செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்திற்கு மேல் கூடுதலாக ரூ. 90 கோடி நிதி ஒதுக்கம் செய்துள்ளதும், உணவு மானியத் தொகைக்கான நிதி ஒதுக்கம், இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டைவிட ரூ. 150 கோடி அதிகரித்துள்ளதும், புதிய பகுதி - 2 திட்டங்கள் சேர்க்கப்பட்டிருப்பதும், திட்ட ஒதுக்கீடு அதிகரித்திருப்பதும் ஆகும்.

132. 1996-97 இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், அனைத்துக் கணக்குகளின் கீழ்வரும் பற்று வரவுகளின் நிகர விளைவு (-) ரூ. 270.66 கோடி பற்றாக்குறையாக இருக்குமென மதிப்பிடப்பட்டிருந்தது. இந்த ஆண்டு ஏற்பட்ட பற்றாக்குறை, 1996-97 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ. 334.89 கோடியாக அதிகரித்துள்ளது. 1995-96 திருத்த மதிப்பீடுகளில் இறுதி இருப்பு (-) ரூ. 410.16 கோடி என மதிப்பிடப்பட்டிருக்க, 1996-97 ஆம் ஆண்டு இறுதியில் இறுதி இருப்பு (-) ரூ. 745.05 கோடி என இப்போது மதிப்பிடப்பட்டுள்ளது.

133. வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை, ஒட்டு மொத்தப் பற்றாக்குறை ஆகியவற்றின் அளவுகள், மிகவும் கவலை அளிக்கத்தக்கவையாக உள்ளன. ஆகையால், இந்தப் பற்றாக்குறை ஒரளவிற்குச் சரிகட்ட தக்க வரி விதிப்பு மற்றும் செலவு நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

### மோட்டார் வாகன வரி

134. ஒப்பந்தப் பேருந்துகளுக்கு (Omni bus) உச்ச நீதி மன்றத்தில் ஒரு காலாண்டுக்கு ஓர் இருக்கைக்கு ரூ. 1500 வரை மோட்டார் வாகன வரி விதிக்கலாம் என்று 1990-ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப ஒப்பந்தப் பேருந்துகளுக்கு இனி ஒரு காலாண்டுக்கு ஓர் இருக்கைக்கு ரூ. 1500 வரி விதிக்கப்படும்.

135. எடை குறைவான மோட்டார் வாகனங்கள் மீதான வரிகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இறக்குமதி செய்யப்பட்ட ஆடம்பர வாகனங்கள் மீது மட்டுமே உயர்த்தப்பட்ட வரி விதிக்கப்படும். இந்த விவரங்கள் பின்வருமாறு.

> வற்றாது வளங்கொழிக்கும் ஆறுகளைக் கொண்டோ, வானோங்கிய மலைகளைக் கொண்டோ ஒரு நாட்டை மதிப்பிட முடியாது; மக்களின் மனவளத்தைக் கொண்டே மதிப்பிட முடியும்.
>
> – அறிஞர் அண்ணா

| சுமையில்லாத எடை | இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் | |
|---|---|---|
| | தற்போதைய வரி | மாற்றியமைக் கப்பட்ட வரி. |
| | (ஆண்டொன்றுக்கு ரூபாய்) | |
| 700 கிலோ வரை | 1500 | 1800 |
| 701 கிலோவுக்கு மேல், 1500 கிலோ வரை | 1950 | 2350 |
| 1501 கிலோவுக்கு மேல், 2000 கிலோ வரை | 2250 | 2700 |
| 2001 கிலோவுக்கு மேல், 3000 கிலோ வரை | 2400 | 2900 |
| 3001 கிலோவிற்கு மேல் | 2700 | 3300 |

**வணிக வரிக் கொள்கை**

136. ஏற்கெனவே கழக அரசால் பெரும்பாலான பொருள்கள் மீதிருந்த பலமுனை வரியை நீக்கி ஒருமுனை வரி கொண்டுவரப்பட்டது. பின்னர் பல பொருள்களுக்குக் கடந்த ஆட்சியால் பலமுனை வரி விதிக்கப்பட்டது. இந்த அரசு வணிகச் சங்கங்களின் கோரிக்கையை ஏற்று எல்லாப் பொருள்களின் மீதும் பலமுனை வரியை அகற்றி ஒரு முனைவரியாக விதிக்க முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொலை நோக்கு வரிக் கொள்கை (Long Term Taxation Policy)**

137. தூய்மையான ஆட்சியையும் நேர்மையான நிர்வாகத்தையும் தமிழகத்திற்கு அளிப்பதே எங்களுடைய தலையாய குறிக்கோளாகும். அதனை எய்துவதற்கும் தொழில் வளர்ச்சியும், வணிகமும் தழைத்தோங்குவதற்கும் குழப்பமற்ற, நிலையான, நேயமான ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும். இத்தகைய சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு தொலைநோக்கு வரிக்கொள்கை (Long Term Taxation Policy) ஒன்றினை உங்கள் முன் வைக்கிறேன்; வணிக சமுதாயத்தினரும், தொழில் முனைவோரும் இதனைப் பெரிதும் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

138. அவ்வப்போது வரி விதிப்பில் மாற்றங்கள் கொண்டு வருவதைத் தவிர்த்து, தொலை நோக்குடைய ஒரு நிலையான வரி விதிப்புக் கொள்கையை மேற்கொள்ள இவ்வரசு முடிவு செய்துள்ளது. இதனடிப்படையில் பின்வரும் வரிச் சீரமைப்புகள் மேற்கொள்ளப்படும்.

**139. விற்பனை வரி விதிப்புக்கான குறைந்தபட்ச வரம்பு ரூ. 1 இலட்சத்திலிருந்து ரூ. 3 இலட்சமாக உயர்த்தப்படும்.**


**140. ஆண்டொன்றுக்கு ரூ. 3 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சத்திற்குள் மொத்த விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்குத் தமது விருப்பத் தேர்வின்படி (Option) பின்வரும் விகிதங்களில் வரி செலுத்தும் வகையில் இணக்க வரி விதிப்பு முறை (Compounding method) அமலாக்கப்படும்:**

| | |
|---|---|
| ரூ. 3 இலட்சத்திற்கு மேல் ரூ. 5 இலட்சத்திற்குள் | 3 சதவீதம் |
| ரூ. 5 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சத்திற்குள் | 5 சதவீதம் |

இவ்வணிகர்கள் மொத்தக் கணக்குகள் வைத்திருந்து துறைக்குக் காண்பித்தால் போதுமானது. விரிவான கணக்குள் வைக்கத்தேவையில்லை.

**சுய வரி விதிப்பு முறை (Self - Assessment)**

141. தற்போது ஆண்டொன்றுக்கு ரூ. 5 இலட்சத்திற்குள் மொத்த விற்பனைத் தொகை உள்ள



வணிகர்களுக்கு மட்டுமே சுய வரி விதிப்பு முறை பொருந்துகிறது. இது ரூ. 10 இலட்சத்திற்குள் விற்பனைத் தொகையுள்ள வணிக நிறுவனங்களுக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் பொருந்துமாறு விரிவாக்கப்படுகிறது. இந்த முறையின் கீழ் ஆண்டொன்றிற்கு 25 சதவீதத்தினரின் கணக்குகள் கணிப்பொறி மூலம் வணிகவரி ஆணையரால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தணிக்கைக்குட் படுத்தப்பட்டு, விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும். மீதமுள்ள 75 சதவீதத்தினரின் கணக்குகளை ஆய்வு செய்ய வணிகவரி அலுவலர்களுக்கு எந்தவித பிரத்யேகமான அதிகாரமும் இருக்காது. இம்முறையினால் 70 ஆயிரத்திற்கு மேற்பட்ட வணிகர்கள் பயன் பெறுவதோடு, சிறு வியாபாரிகளுக்கு இருந்துவரும் இடர்ப்பாடுகளும் நீங்கும். இந்தப்புதிய முறைக்கு வணிக சமுதாயம் தரும் ஒத்துழைப்பைப் பொறுத்து உச்சவரம்பை உயர்த்துவது பற்றி பின்னர் யோசிக்கப்படும்.

### விற்பனை வரிச் சலுகைகள்

142. விலைவாசி உயர்வுக்கு மாநில அரசு காரணம் இல்லையென்றாலும் மாநில அரசுக்குள்ள பொறுப்பையும் உணர்ந்து ரூ. 55 கோடி வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாமல் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் உணவுப் பொருள்களான பருப்பு, மிளகாய், தனியா, மஞ்சள், புளி, சீரகம், பெருங்காயம், வெல்லம், சீயக்காய் ஆகியவற்றிற்கு முழுமையான வரிவிலக்கு அளிக்க அரசு முடிவு செய் துள்ளது.

143. இதுதவிர வெள்ளியினால் ஆன மெட்டி, கொலுசு, மற்றும் அரைஞாண், கையால் செய்யப்பட்ட தீக்குச்சிகள், நெல்லுமி, நொய்யரிசி, தேங்காய்மட்டை ஆகியவற்றிற்கும் வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

144. சமையல் எரிவாயு (LPG) மீதான ஒட்டுமொத்த வரி விகிதம் 11.6 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

145. கரும்பு மீது அடிப்படை கொள்முதல் வரி 11 சதவீதம் (பிற வரிகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த வரி 14.7 சதவீதம், அமலில் உள்ளது. பிற தொழிற்சாலைகள் மூலப்பொருள்களை வாங்கும்பொழுது, பிரிவு 3(3)ல் கீழ் பயன்பெறும் சலுகை வரி, சர்க்கரைத் தொழிற் சாலை களுக்கு இல்லை. எனவே சர்க்கரைத் தொழிற் சாலைகளை ஊக்குவிக்கும் வகையில் கரும்பு மீதான வரியினைப் புதிய வரிக் கட்டமைப்பில் 8 சதவீதமாகக் குறைக்கிறோம். இதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் வரி இழப்பு ரூ. 57 கோடி இருப்பினும் இது சர்க்கரைத் தொழிற்சாலைகளை ஊக்குவிக்கும் என்ற நம்பிக்கையுடன் இச்சலுகை வழங்கப்படுகிறது.

146. முந்தைய அரசு 2 சி பட்டா மரங்களின் மீதான வரியை மிகவும் அதிக அளவிற்கு உயர்த்தியிருந்தது. இதற்கு மக்களிடையே ஏற்பட்ட எதிர்ப்பைக் கருத்தில் கொண்டு மரவரி மீண்டும் முன்பு இருந்த அதே விகிதங்களுக்கே குறைத்து விதிக்கப்படும்.

### விற்பனை வரிகள் ஒருங்கிணைப்பு

147. வரிவிதிப்பு இனங்களில் விற்பனை வரி (Sales Tax) விற்பனை வரி மீது மேல்வரி (Surcharge on Sales Tax) கூடுதல் மேல் வரி (Additional Surcharge on sales Tax) கூடுதல் விற்பனை வரி (Additional Sales Tax) எனும் நா[illegible] கை வரிகளில், மேல்வரி (Surcharge on Sales Tax) மற்றும் கூடுதல் வரி மேல்வரி (Additional Surcharge on Sales Tax) ஆகியவை மாநிலம் முழுவதும் அறவே நீக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு வரிக்கு உட்படும் விற்பனைத் தொகை ரூ. 100 கோடிக்குக் குறைவாக உள்ள நிறுவனங்களுக்குக் கூடுதல் விற்பனை வரி முற்றிலும் நீக்கப்படுகிறது. இதனால் வணிகர்களுக்குள்ள பணிப்பளு மற்றும் வரி விதிப்புப் படிவங்கள் குறைந்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பயன் அடைவார்கள்.

148. தற்போதுள்ள வரிகளை ஒருங்கிணைத்துப் பின்வரும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன:


| நடைமுறையில் உள்ள அடிப் படை வரி | மேல்வரி கூடுதல் விற்பனை வரி மற்றும் கூடுதல் மேல் வரி உள்ளிட்ட வரி விகிதத்தின் அளவு | புதியவரி விகிதங் கள் |
|---|---|---|
| | (சதவீதத்தில்) | |
| 1 | 3 | 2 |
| 3 | 5.6 | 4 |
| 5 | 8 | 8 |
| 8 | 11.6 | 12 |
| 12 | 16.4 | 16 |
| 16 | 21.2 | 20 |

149. பெட்ரோல், மதுவகைகள் ஆகிய இரண்டு இனங்களுக்கும் வரிவிதிப்பு அளவில் மாற்றமில்லை. ஆயினும் டீசல் மீதான வரியானது 19.2 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

### மூலப் பொருள்கள் மீதான மதிப்புக் கூட்டு வரி (Value Added Tax)

150. நாங்கள் ஆட்சிக்கு வந்த இரண்டு மாதங்களுக்குள்ளேயே வரிச்சீர்திருத்தங்கள் பற்றிய ஆய்வு மேற்கொண்டு மராட்டியம் போன்ற மாநிலங்களில் உள்ள கூட்டு வரி முறையைத் தமிழகத்திலே அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளோம்.

151. தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் மூன்று சதவிகிதம் சலுகை வரிக்கு உட்பட்டிருந்த போதிலும், மேல்வரி, கூடுதல் விற்பனை வரி சேர்ந்து 5.6 சதவிகிதமாக உள்ளது. முதலில் குறிப் பிட்டுள்ளவாறு எல்லா வரிகளையும் ஒருங்கிணைத்து விற்பனை வரியை ஒருமுனை வரியாக மாற்றப்படும் நிலையில் மூலப் பொருட்களின் மீது விதிக்கப்படும் வரி யாவும் மூன்று விழுக்காடு அளவுக்குக் குறைக்க முடிவு செய்துள்ளோம். இதனால் மாநிலத்தில் பொருட்களின் தயாரிப்பாளர்கள் ரூ. 200 கோடி அளவுக்கு வரி செலுத்துவது தவிர்க்கப்படும். மேலும் இவர்கள் தயாரிக்கும் பொருட் களின் விலை குறைந்து, பிற மாநிலத் தயாரிப்பாளர்




களுடன் விற்பனையில் போட்டியிட முடியாமல் இருந்த நிலை அகன்று தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்பு உருவாகும்.

**152. அரசால் அங்கீகரிக்கப்பட்ட மின் உற்பத்தித் திட்டங்கள் மாநிலத்திற்கு வாங்கும் மின் உற்பத்திக்கான முதலீட்டுப் பொருட்களுக்கு விதிக்கப்படும் வரி 12 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்கப்படும்.**

153. மூலப் பொருட்களுக்கு உள்ள மூன்று சதவிகித சலுகை வரியை அனைத்து வகை இயந்திரங்கள், மின் ஆற்றலைக் கொண்டு இயங்கும் பம்புகள், பவர் பேக்டார்ஸ் மற்றும் ஷண்ட் கெபாசிட்டர்ஸ், ஆயில் இஞ்சின்கள், உலைகள் மற்றும் கொதிகலன்கள், ஜெனரேட்டர்கள், ஜெனரேட் செட்டுகள், மற்றும் இவைகளின் பாகங்கள் மற்றும் துணைப் பொருட்களுக்கும் விரிவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு சுமார் ரூ. 55 கோடி அளவில் இருக்கும். ஆனால் தொழில் வளர்ந்து வேலை வாய்ப்பு பெருகி மாநிலப் பொருளாதாரம் வலுப்பெறும்.

154. தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி பெருகிட வகை செய்யுமுகத்தான், 100 சதவீத ஏற்றுமதிப் பொருள்கள் (100% Export oriented) தயாரித்திடும் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுக்கும் மற்றும் (MEPZ) வளாகத்தில் உள்ள நிறுவனங்களுக்கும் நமது மாநிலத்திற்குள் கொள்முதல் செய்யப்படும் மூலப் பொருட்களுக்கும் முழுவரி விலக்கு அளிக்கப்படுகிறது.

155. தொழில் வளர்ச்சியை முன்னிட்டு இத்தகைய வரிச் சலுகைகளைச் செயல்படுத்தவுள்ள இந்த அரசு மறு விற்பனையாளர்களுக்கு (Resellers) மதிப்புக் கூட்டு வரி முறையை நடைமுறைப் படுத்தவும் திட்டமிட்டுள்ளது. முதற் கட்டமாக ஆண்டொன்றிற்கு மொத்த விற்பனைத் தொகை ரூ. 75 இலட்சமும் அதற்கு மேலும் விற்பனையுள்ள மறு விற்பனையாளர்களுக்கு இது பயன் தரும். தமிழ் நாட்டிலுள்ள மொத்தம் சுமார் 3 இலட்சம் பதிவு பெற்ற வணிகர்களில் 8 ஆயிரம் வணிகர்களுக்கு மட்டுமே இந்தப் புதிய முறை பொருந்தும். இம்முறையின் கீழ் வரும் வணிகர்கள் பொதுவாகப் பொருள்கள் விற்பனை மீதுள்ள அதே வரி விகிதத்தை மதிப்புக் கூட்டு வரியாகச் செலுத்த வேண்டும். மறு விற்பனையின்போது செலுத்தப்படும் விற்பனை வரி விற்கப்படும் பொருட்களின் மீது விற்பனையாளர் நிலையில் எந்த அளவுக்கு மதிப்புக் கூடுகிறதோ அந்த அளவு மீது மட்டுமே வரி விதிப்பு அமையும். மேலும், பொருள்களின் கூடிய மதிப்புக்கு மேலாக விதிக்கப்படும் வரியில் ஏற்கெனவே அவர் முதல் விற்பனையின்போது செலுத்தியுள்ள வரியைக் கழித்துக் கொண்டு மீதமுள்ள வரியை மட்டுமே செலுத்தினால் போதுமானது.

156. 17.7.1996 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும் புதிய வீதங்களுடன் கூடிய விரிவான திருத்த விவர அட்டவணைகள் இன்று தனியாக வெளியிடப் பட்டுள்ளன. அந்த விவர அறிவிக்கைகளின் நகல்கள் அவையின்முன் வைக்கப்பட்டுள்ளன. செய்யக்கருதியுள்ள சில மாற்றங்களுக்குச் செயல் வடிவம் கொடுக்க, தற்போதுள்ள சட்டங்களில் சில திருத்தங்களையும் செய்ய வேண்டியது அவசியமாகும். இத்திருத்தங்கள். நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்படும்.

157. மேற்கூறிய பல்வேறு சீர்திருத்தங்களினால் வணிக வரி வருவாயில் கணிசமான அளவு, அதாவது ரூ. 306 கோடி அளவுக்கு இழப்பு ஏற்படுகின்ற நிலைமை உருவாகியிருந்தும் மாநிலத்தின் தொழில் மற்றும் வாணிப வளர்ச்சி இவற்றைக் கருத்தில் கொண்டு இந்தச் சீர்திருத்தங்களைச் செய்திட நாங்கள் முடிவு செய்துள்ளோம். அதே நேரத்தில் இவ்வளவு பெரிய வரி வருவாய் இழப்பு ஏற்படுவதால் மாநில அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கும், நலத்திட்டங்களுக்கும் பெருமளவில் பாதிப்பு ஏற்படும். எனவே, வரி வருவாயிழப்பை ஈடுகட்டுவதற்குக் கூடுதல் வருவாய் திரட்டுவது இன்றியமையாததாகும். மைய அரசைநாங்கள் கேட்பதெல்லாம் பல்வேறு பணிகளின் மீது பணி வரி (Service Tax) விதிக்கும் அதிகாரத்தை மாநில


அரசுக்கு வழங்கும் வகையில் உரிய சட்டத் திருத்தத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்பதுதான். மேல்நாடுகள் பலவற்றில் பணிகள் வரி (Service Tax) விதித்து இருப்பது கண்கூடு. மேல்நாடுகள் பின்பற்றி வரும் மதிப்புக் கூட்டு வரியை நாங்கள் அறிமுகப்படுத்துவதனால் ஏற்படும் வரி வருவாய் இழப்பையும் பொருட்படுத்தாமல் அதனை அமல்படுத்த முடிவு செய்துள்ள மாநிலங்களுக்குப் பணி வரி விதிக்கும் அதிகாரத்தை வழங்குவது மிகவும் அவசியமானது என்பது எங்கள் கருத்தாகும்.

*158.* அத்துடன் பற்றாக்குறையை ஓரளவு சரி செய்ய, இந்த அரசு, முந்தைய அரசு கடைபிடித்த ஆடம்பரச் செலவுகளைப் பெருமளவு குறைத்திடும் நடவடிக்கையையும் மேற்கொண்டுள்ளது. ஐந்தாண்டுக்காலத்தில் முதல்வர் கலந்து கொண்ட அரசு விழாக்களுக்கு (உலகத் தமிழ் மாநாடு மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான விழாக்களைச் சேர்க்காமல்) ரூ. *27* கோடி செலவு செய்திருப்பது போலவோ, முதல்வர் பாதுகாப்புக்கென்று அளவுக்கு அதிகமாகக் கடந்த ஐந்தாண்டு காலத்தில் ரூ. *21* கோடி செலவு செய்திருப்பது போலவோ மற்றும் விதவிதமான விளம்பரங்களுக்கு அரசுப் பணத்தைக் கோடிக் கணக்கில் வாரி இறைத்திருப்பது போலவோ இந்த அரசு ஊதாரிச் செலவு செய்யாது என்ற உறுதியை இந்த அவைக்கு அளிக்கிறேன்.

## முடிவுரை

*159. 1996-97* ஆம் ஆண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை ரூ. *745.05* கோடியாக இருக்குமென நான் என்னுடைய உரையில் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருந்தேன். கூடுதல் வரிச் விதிப்பிற்கு ஒருசில செயற்குறிப்புகளையே நான் முன்வைத்துள்ளேன். ஆனால், இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், ஏழை மற்றும் நடுத்தர மக்களின் நலனைப் பேணிக் காக்கவும் பல சலுகைகளை நான் அளித்துள்ளேன். மொத்தத்தில் இந்நடவடிக்கைகளின் காரணமாக ரூ. *306* கோடி வருவாய் இழப்பு ஏற்படும். செலவினங்களைக் கட்டுப்படுத்தப் பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம், மற்றும் வரிச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டதினால், நேர்மையாக வரி செலுத்தும் தன்மை உயர்வதன் மூலம், மொத்த வரி வருவாய் பெருகும் என்று எதிர்பார்ப்பதினால் வருவாய் இழப்பைக் கணிசமான அளவிற்கு ஈடு செய்ய முடியுமென்று நான் நம்புகிறேன். அப்படியிருந்துங்கூட, எதிர்பார்க்கப்படும் வருவாய் இழப்பை முழுவதுமாக ஈடு செய்ய இயலாது என்று நான் கருதுகிறேன். *1996-97* ஆம் ஆண்டிற்கான இறுதிப் பற்றாக்குறை ரூ. *106* கோடி அதிகரித்து, அது மேலும் ரூ. *851.05* கோடியாக உயரும் என்று நான் கருதுகிறேன்.

*160.* இதுகாறும் நான் உங்கள் முன்னால் வைத்துள்ள இந்த அறிக்கை ஏழை எளிய மக்களின் வேதனையாம் வெப்பம் குறைக்க அவர் தம் கையில் தரப்படும் பனை ஓலை விசிறி - பாட்டாளி மக்களின் வீடுகளில் ஏற்றி வைக்கப்படும் அகல் விளக்கு - விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் வியர்வை துடைக்கும் துண்டு - தொழில் வளம் பெருகினால் தான் தொழிலாளர்



நலம் பெருகும், வேலையில்லாத் திண்டாட்டச் சோகம் தீரும் என்பதற்காக வழங்கப்ப ) மூலிகை - நெசவாளர், மீனவர் என நித்தம் நித்தம் செத்துப் பிழைப்போர்க்கு ஒரு துளி நிவாரணம் - மகளிர்க்கு, மாணவர்க்கு, படித்து வேலையற்றுத் திரியும் இளைஞர் சமுதாயத்திற்கு ஒரு மின்னல் வெளிச்சம் - நம் உயிரினும்மேலான தமிழ்த் தாய்க்கு அவள் பாதங்களில் காணிக்கையாக்கும் ஒரு மலர்ச்சரம் - பொதுவாக எல்லாப் பிரிவு மக்களுக்கும் அள்ளிக் கொடுக்க முடியாமல் கிள்ளிக் கொடுக்குமளவுக்கு மட்டுமே உள்ள வெண்பொங்கல் என்பதை நானறிவேன். எனினும் என்னரும் தமிழ் மக்கள்: எங்களால் அவர்கள் தேவையின் பள்ளத்தை முழுமையாக நிரப்ப முடியவில்லையென்பதற்காகச் சினம் கொள்ளாமல் எங்கள் உள்ளத்தில் அவர்களுக்காக எதிர்காலத் திட்டங்கள் நிறைய இருக்கின்றன என்ற நம்பிக்கையைப் பெறலாம் என்பதற்கு உத்திரவாதம் அளிக்கிறேன்.


*161.* இந்த அரசு, தமிழ்மொழி காப்பதற்காகவும் - உலகில் பல பகுதிகளில் வாழும் தமிழர்களின் வாழ்வில் அமைதி நிலவுவதற்காகவும் - தமிழர்கள் பிறமொழி ஆதிக்கத்தினால் இரண்டாம்தரக் குடிமக்கள் ஆகிவிடாமல் தடுப்பதற்காகவும் - ஜனநாயகமெனும் வீட்டு விளக்கு சர்வாதிகாரமெனும் காட்டுத் தீயினால் அணைந்து விடாமல் இருப்பதற்காகவும் - சமத்துவம், சமதர்மம், சகோதரத்துவம் இவற்றுடன் சமூக நீதியை நிலைநாட்டுவதற்காகவும் - மதச் சார்பற்ற கொள்கையெனும் அரவணைப்பால் சிறுபான்மைச் சமுதாயத்தினரான இஸ்லாமியர்க்கும் கிறிஸ்தவர் களுக்கும் இன்னபிற சமயத்தினர்க்கும் கடுகளவு தீங்கும் நேராமல் காவலாக நிற்பதற்காகவும் - எண்ணற்ற தியாகங்களைச் செய்து, ஏராளமான உயிர்களைப் பலிகொடுத்து, எதிர்ப்புகளைச்சமாளித்து, துரோகங்களை வென்று, சோதனைகளை வேதனைகளைக் கடந்து, மொழியால் தமிழர் - இனத்தால் திராவிடர் - நாட்டால் இந்தியர் - உலகத்தால் மனிதர் என்ற உணர்வுடன் ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் தனித்தன்மை வாய்ந்த ஒப்பற்ற இயக்கமாம் திராவிட இயக்கத்தின் அரசியல் சமுதாயப் பாசறையான தி.மு.கழகத்தின் சேவை தமிழ்நாட்டுக்கு இன்னும் பல ஆண்டுகளுக்குத் தேவை என்பதைச் சிந்தித்துத் தெளிந்து எங்களுக்கு அறிவுரை கூறும் ஆசான்களாய் - தோளொடு தோள் நிற்கும் தோழர்களாய் - கனிவு காட்டும் தாயாய் - கண்டிப்புக் காட்டும் தந்தையாய் - இந்த அவையில் இருக்கும் நீங்களும் உங்களைத் தங்கள் பிரதிநிதிகளாக இங்கு அனுப்பிவைத்துள்ள தமிழ்த் தாயக மக்களும் விளங்கிட வேண்டுமெனக் கேட்டு.'

"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து"

எனும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, தடங்கல் நிறைந்த கரடுமுரடான பாதையில் பெரும் பாரத்தை எருது இழுத்துக் கொண்டு போவதுபோல, விடாமுயற்சியுடன் செயல்பட்டால் துன்பங்களுக்கு முடிவு ஏற்பட்டு, வெற்றிகிட்டும் என்கிற திடச்சித்தமுடன் இவ்வரசு இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு அல்லும் பகலும் என்னுடன் ஓய்வின்றி ஒத்துழைத்த நிதித்துறைச்




செயலாளர் திரு. குருமூர்த்தி அவர்களுக்கும், மற்றும் அரசுத்துறைச் செயலாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த 1996-97 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஏற்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.






**நிதி நிலை அறிக்கை மீதான விளக்கத்துக்குப் பதிலளித்து சட்டப் பேரவையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 25.7.96 அன்று 75 நிமிட நேரம் உரையாற்றினார். நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப் பட்ட 306 கோடி ரூபாய் வரிச்சலுகைகள் தவிர மேலும் 108 கோடி ரூபாய்க்கான வரிச்சலுகைகளை அப்போது அறிவித்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை முழு விவரம் வருமாறு:-**

**1996-97-**ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது இந்த அவையில் நடைபெற்றுள்ள விவாதத்தில் கலந்து கொண்டு, நல்ல அறிவுரைகளையும், ஆக்கப்பூர்வமான கருத்துக்களையும் கூறியுள்ள கட்சிகளின் தலைவர்களுக்கும், உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆக்கபூர்வமான யோசனைகள்

நேற்றும் இன்றும் கட்சிகளின் தலைவர்கள் கருத்துக்களை வழங்கியிருக்கின்றார்கள். இந்த அறிக்கையைத் தயாரித்து அவைமுன் வைத்துள்ள நான் புண்படும் படியாகவோ, அல்லது வருந்தி வேதனைப்படும் நிலையிலோ யாரும் எந்த எண்ணத்தையும் வெளிப்படுத்தாமல் ஆக்கபூர்வமான யோசனைகளை எடுத்துக் கூறி யிருக்கிறார்கள் என்பதில் கிஞ்சிற்றும் அய்யமில்லை.

பாரதீய ஜனதா கட்சியின் சார்பில் உரையாற்றிய வேலாயுதன் அவர்களானாலும், தேவேந்திரகுல வேளாளர் சார்பில் உரையாற்றிய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களானாலும், ஜனதாதளத்தின் சார்பில் உரையாற்றிய வெங்கடசாமி அவர்களானாலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உரையாற்றிய மணி அவர்களானாலும், பார்வாடு பிளாக் கட்சியின் சார்பில் உரையாற்றிய சந்தானம் அவர்களானாலும், சுயேச்சை என்ற நிலையிலே உரையாற்றிய வெங்கடாசலம் அவர்களானாலும், அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் என்ற முறையிலே உரையாற்றிய திருநாவுக்கரசு அவர்களானாலும், இந்திய தேசிய லீக் சார்பில் உரையாற்றிய அப்துல் லத்தீப் அவர்களானாலும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் உரையாற்றிய பழனிச்சாமி அவர்களானாலும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் உரையாற்றிய பேராசிரியர் தீரன் அவர்களானாலும், எனக்கு முன் உரையாற்றி அமர்ந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அவர்களானாலும் இந்த நிதிநிலை அறிக்கையிலே உள்ள பாராட்டக் கூடிய அம்சங்களையெல்லாம் பாராட்டிவிட்டு, குறைகளைச் சுட்டிக் காட்டியிருப்பது நான் நிதிநிலை அறிக்கையிலே கேட்டுக் கொண்டவாறு, அவர்களெல்லாம் இந்த அரசுக்கு ஆசானாக இருந்து, கனிவு காட்டுகின்ற தாயாக இருந்து, கண்டிப்புக் காட்டுகின்ற தந்தையாக விளங்கி, இந்த அரசின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தர முன் வந்திருக்கிறார்கள் என்பதை இது

காட்டுகின்றது.

நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் கடந்த 5,6 ஆண்டு காலத்தில் நீண்ட நேரம் தொடர்ந்து பேசி உட்கார்ந்து இருப்பது இன்றைக்குத்தான் என்று நான் கருதுகிறேன். அதற்காக என்னுடைய வாழ்த்துக்களை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகமாகப் பாராட்ட பயமாக இருக்கிறது. அவரும் அதை விரும்பமாட்டார் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். மனதிற்குள்ளே விரும்பினாலும் வெளிப்படையாக விரும்ப மாட்டார்.

உறுப்பினர் வேலாயுதன் அவர்கள், அவர்களுடைய கட்சியினுடைய கண்ணோட்டத்தில் சில கருத்துக்களை சொன்னாலும்கூட பொதுவாக இந்த அறிக்கையை வரவேற்றிருக்கிறார். அதைப்போல, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், இந்த நாட்டிலே எல்லோரும் தமிழர்கள் என்ற குறிக்கோளை நோக்கிச் செல்கிறோம் என்பதை மறந்து விடாமல், இடையில் தன்னுடைய சமுதாயத்தினைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரு வட்டமிட்டு, அவர்களுக்கு உரிய உதவிகளைச் செய்ய வேண்டும், உரிமைகளை வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார். வெங்கடசாமி அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு என்னென்ன தேவை என்பதை இங்கே விவரித்திருக்கிறார்.

## நேதாஜிக்குச் சென்னையில் சிலை

தமிழ் மணம் கமழக் கமழப் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் தீரன் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி மகிழ்ந்து இருக்கிறார்கள். ஆழ்ந்த அனுபவம் கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் அன்பிற்குரிய மணி அழுத்தம் திருத்தமாக பல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார். இந்த அரசு எப்படியெல்லாம் இன்னும் வேகமாக, திட்டவட்டமாகச் செயல்பட வேண்டும் என்பதை எடுத்துரைத்திருக்கிறார். சந்தானம் பார்வாடு பிளாக் கட்சியின் சார்பில் நிறைந்த வாழ்த்துக்களைத் தந்து, நேதாஜி அவர்களுக்கு ஒரு சிலை சென்னையிலே அமைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்திருக்கிறார். அந்த வேண்டுகோள் நிறைவேற்றப்படும் என்பதை என்னுடைய பதிலுரையின் தொடக்கத்திலேயே சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நண்பர், சுயேட்சை உறுப்பினர் வெங்கடாசலம், எடுத்துள்ள நடவடிக்கைகள் போதாது, மேலும் எடுக்கப்பட வேண்டும், அப்பொழுதுதான் எதிர்கால தமிழகம் நல்ல முறையிலே இருந்திட இயலும் என்ற எச்சரிக்கையைத் தன்னுடைய பேச்சாக நேற்று ஆற்றிக் கொண்டிருந்தார்.

திருநாவுக்கரசு அவர்கள், உண்மையிலேயே மிக ஆக்கபூர்வமான கருத்துக்களை, வரவு செலவுத் திட்டத்திலே புள்ளி விவரங்களிலுள்ள ஏற்றத் தாழ்வுகளை, இவைகளையெல்லாம் எடுத்துக்காட்டி அதிலே எனக்கு வித்தியாசமான கருத்துக்கள் இருந்தாலும் கூட நாட்டுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் - குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்கு, பழங்குடி மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு மேலும் அதிகமாக நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று அவர் பேசியதின் நோக்கம் பாராட்டுதலுக்குரியதாக இருந்தது என்பதை நான் மறக்கவில்லை.

இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர் லத்தீப் சென்னை என்ற ஒரு பெயரிலே மாத்திரம் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள மறுத்தாலும், எதிர்க்கவில்லை என்று இறுதியாக விளக்கி, இந்த அவையிலே தன்னுடைய ஆதரவை மதராஸ் என்ற சொல் தமிழாக இல்லாவிட்டாலும், பிறமொழிச் சொல்லாக இல்லாத காரணத்தால் அந்நிலைக்கு மாறி வழங்கியிருக்கிறார். வேறு சில கருத்துக்களையும் எடுத்துக் கூறி இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

பழனிச்சாமி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகப் பல கொள்கை விளக்கங்களைத் தந்து இறுதியாக என்னைத் தஞ்சைத் தொகுதியினுடைய அமைச்சர் என்ற முறையிலே, ஒரு வட்டத்திற்குள்ளே சுருக்கி, கொஞ்சம் சுயநலவாதியாகச் செயல்படு என்று கேட்டுக்கொண்டிருக்கிறார். இதை யெல்லாம் வெளிப்படையாக சொல்லிச் செய்யக்கூடாது என்பதை நண்பர் பழனிச்சாமி அவர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய பேச்சையே களை கட்டுகின்ற அளவிலே, ஒரு கதையைச் சொல்லித் தொடங்கினார். அந்தக் கதையிலே ஒரு மாற்றம் இருக்கிறது. என்னுடைய ஆருயிர் நண்பர், மறைந்துவிட்ட அன்பில் தர்மலிங்கம் அடிக்கடி இந்தப் பழமொழியைச் சொல்வார். 'இருங்கலூர் கணக்கன் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்' என்று. என்னையா அடிக்கடி இதைச் சொல்கிறாய், என்ன விஷயம்? என்று கேட்டபோது கதையைச் சொன்னார். அது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவருடைய கதைக்குச் சற்று மாறான கதை. ஒரு வேளை, எதிர்க்கட்சித் தலைவர் ஆசிரியராகப் பணியாற்றியபோது இந்தக் கதையைச் சொல்லி, நீண்டகாலத் தொய்விற்குப் பிறகு கதையை மறந்துவிட்டார் போலும். கதை என்னவென்றால், அரசியலுக்குப் பொருத்தமாக உள்ளது என்பதால் சொல்கிறேன்.

## இருந்தும் கெடுத்து செத்தும் கெடுத்த இருங்கலூர் கணக்கன்

இருங்கலூரில், ஒரு கணக்கன் இருந்தான், கொடுமைக்காரன், கொள்ளைக்காரன், மக்களைப் படாதபாடு படுத்தி வைத்தான். அவனுக்குச் சாகும் காலம் வந்தது. வயது ஏறி இறந்துவிடுவோம் என்ற

நிலை ஏற்பட்டபொழுது, அப்போதும் அவனால் சும்மா இருக்கமுடியவில்லை. ஏதாவது தீமை செய்துவிட்டுப் போகவேண்டும், செத்த பிறகும் என்ற எண்ணத்தோடு அந்த ஊர் மக்களையெல்லாம் கூட்டி வைத்து "ஊர் ஜனங்களே நான் உங்களை எல்லாம் படுத்தாத பாடு படுத்திவிட்டேன். எத்தனையோ தவறுகள் செய்துவிட்டேன். உங்கள் குடும்பங்களையெல்லாம் கெடுத்துவிட்டேன். உங்கள் சொத்துக்ளையெல்லாம் அபகரித்துவிட்டேன். உங்களை யெல்லாம் சுரண்டிக் கொழுத்துவிட்டேன். ஆனாலும் எனக்கு நீங்கள் மன்னிப்பு வழங்கவேண்டும். அந்த மன்னிப்பு என்னவென்றால், நான் இறந்த பிறகு இந்தப் பாவியினுடைய உடலை இந்த ஊர் மயானத்தில் புதைக்காமல், அடுத்த ஊர் மயானத்திலே கொண்டு போய்ப் புதையுங்கள்" என்று பக்கத்து ஊரில் புதைக்கச் சொன்னான். அவர்களும் பரிதாபப்பட்டு, போய்த் தொலைகிறான். செத்துத்தானே போகிறான். செய்யலாமே என்று உறுதி கொடுத்தார்கள். சொன்னபடி, இரண்டு நாளிலே அவன் இறந்துவிட்டான். உடனே, அந்த ஊராரெல்லாம் கூடி, அவனைத் தூக்கி அடுத்த ஊர் மயானத்திலே கொண்டு போய்ப் புதைத்தார்கள்.

உடனே, அடுத்த ஊர்க்காரர்கள் சண்டைக்கு வந்துவிட்டார்கள். 'எங்கள் ஊருக்கு எப்படியடா கொண்டு வரலாம்? உங்கள் ஊரில் மயானம் இருக்கிறபோது இங்கே எப்படி கொண்டு வரலாம்?' என்று சண்டை முற்றி, இங்கே பத்துப் பேர் செத்தார்கள். அங்கே பத்துப் பேர் செத்தார்கள். இதைத்தான் அன்பில் தர்மலிங்கம் சொல்வார். "இருங்கலூர் கணக்கன் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்" என்று. அப்படி இங்கே பத்துப் பேர், அங்கே பத்துப் பேர் சாகாமல் இருக்கக் கூடிய சூழ்நிலை வேண்டும் என்பதற்காகத்தான் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் சில நண்பர்களுக்காக அவர்கள் இங்கே இந்தக் கதையைத் தொட்டுக் காட்டிய காரணத்தால் நான் சுட்டிச் சொல்ல விரும்புகிறேன்.

இது யாருக்காகச் சொல்லப்பட்ட கதை என்பது இங்கே இருக்கின்ற சில பேர்களுக்குத் தெரியும். எனவே "இருங்கலூர் கணக்கன் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்" என்ற நிலையில் இன்றைக்கு நாடு இருக்கிறது. அதைத்தான் நம்முடைய பழனிச்சாமி பேசும்போது சொன்னார்.

இன்றைக்குக் கூட ஒரு அறிக்கை வந்திருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூலி ஆட்களைப் பிடித்து கோட்டை வாசலில் வந்து சத்தம் போடச் செய்தார்கள் என்று. கோட்டை வாசலிலே வந்து முழக்கம் இட்டவர்கள் அருமை நண்பர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய வாரிசுகள் என்று சொல்லத்தக்க ஆர்.எம். வீரப்பன் அவர்களும் மற்றவர்களும்தான். கோட்டை வாசல் வரையிலே ஊர்வலமாக வந்து என்னிடம் மனுக்கொடுத்துவிட்டுச் சென்றார்கள். அவர்கள் யாரும் கூலிக்குப் பிடிக்கப்பட்ட ஆட்கள் அல்ல. எம்.ஜி.ஆர் அவர்களுடைய வாரிசு என்று சொல்லிக் கொள்கிறவர்கள். எப்படி, தம்பி திருநாவுக்கரசு தன்னை எம்.ஜி.ஆருடைய வாரிசு என்று சொல்வது உண்மையோ அதைப்போல ஆர்.எம். வீரப்பன் தன்னை எம்.ஜி.ஆருடைய வாரிசு என்று சொல்லிக் கொள்வதும் உண்மைதான். அவர்களெல்லாம் கூலிக்குப் பிடிக்கப்பட்ட ஆட்கள் அல்ல. என்ன செய்வது? "இருங்கலூர் கணக்கன் இருந்தும் கெடுத்தான் செத்தும் கெடுக்கிறான்' என்றுதான் சொல்ல வேண்டி இருக்கிறது.

### ஏடுகள் அளித்த பாராட்டுக்கள்

இந்த நிதிநிலை அறிக்கையைப் பலரும் பாராட்டியிருக்கிறார்கள். அந்தப் பாராட்டுக்களை யெல்லாம் தொகுத்துச் சொன்னால், ஏதோ என்னை நானே புகழ்ந்து கொள்வது போலாகும் என்ற நிலை ஏற்படும் என்றாலும்கூட, இந்த வரவு செலவுத் திட்டம் எந்த நோக்கத்தோடு தயாரிக்கப்பட்டு, வெளி யிடப்பட்டது என்பதைப் பல முனைகளிலே உள்ளவர்கள் எப்படிப் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக, அவற்றில் ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 'டைம்ஸ் ஆப் இந்தியா', நியூ டெல்லியிலிருந்து வெளிவந்த பத்திரிக்கையில் **18.7.96** இல் குறிப்பிடப்பட்டுள்ள வாசகம்–

Chief Minister M. Karunanidhi on Wednesday presented a business and industrial friendly Budget for

## தமிழ்நாட்டில் மீண்டும் மேலவை

**தமிழ்நாட்டில் மீண்டும் மேலவை அமைகிறது. இதற்கான தீர்மானத்தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 26.7.96 அன்று சட்டமன்றத்தில் முன்மொழிந்தார்; எல்லாக் கட்சி உறுப்பினர்களும் இது பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளை எடுத்தியம்பினர். அதன்பின், முதல்வர் அவர்கள் பதிலளித்துப் பேசினார். பிறகு, அத்தீர்மானமானது வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு வெற்றி பெற்றது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகப் பேரவைத் தலைவர் அறிவித்தார். இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்.**

1996-97 and announced a long-term taxation policy.

18th July 1996 ...Karunanidhi pleases everyone with his Budget. Chief Minister Karunanidhi on Wednesday presented a populist, business and industry friendly Budget for 1996_97 and anounced a longterm taxation policy. The State Government staff have been given various concessions and retirement benefits. There are schemes for the Adi-dravidas, Backward classes and for generating rural employment. Infact, there appears to be something for everyone in the Budget.

'இந்து' ஏட்டில் எழுதப்பட்டிருப்பதாவது:

...The tax reforms proposed by Karunanidhi have some welcome features, though they may entail a revenue loss of Rs.*306* crores. Apart from rationalisation of sales tax, the proposal to introduce Value Added Tax VAT in the state is a bold decision indeed, as it may give a boost to the manufacturers in the State. Tamil Nadu will be one of the first among the southern States to emulate Maharashtra's example as introduction of VAT is expected to have a healthy impact on prices of manufactured goods and strengthen the competitive position of the industrial units in the state. Similarly, exemption of sales tax on raw materials bought by the export oriented units and units located in the Madras Export Processing Zone will go a long way in promoting export activity in the state. The reduction of tax on capital goods for power generation bought in the State for Government approved power generation projects from *12* percent to three percent is seen as an incentive for the industry''

பிஸினஸ் லைன் *18.7.96* ஏடு எழுதிய தலையங்கம் - 'The D.M.K. Government's Budget within two months of assuming power in Tamil Nadu looks commendable as it has lifted the Budget exercise from the vacuity of cheap populism. It has invested it with some seriousness of purpose especially in industrial development. The Budget comes across as a bold document significant especially for the sweep of reforms in sales tax it has sought to attempt''...

தினமணி தனது தலையங்கத்தில்- "ஏழை எளிய மக்களுக்கும், மத்திய தர வர்க்கத்தினருக்கும் நன்மை பயக்கும் நோக்கத்தோடு பல்வேறு வகையான உணவுப் பொருள்களுக்கு முழு அளவில் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கும் பட்ஜெட்டை முதலமைச்சர் கருணாநிதி சட்டப்பேரவையில் அளித்துள்ளார். தமிழகத்தின் தொழில், வணிகம் தழைப்பதற்கும் பல்வேறு சலுகைகள் இந்தப் பட்ஜெட்டில் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, தொழில்களில் தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் மூலப்பொருள்கள் மீதான வரிகள் யாவும் *3* சதவிகித அளவு குறைய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதையொட்டி, பொருள்களின் தயாரிப்பாளர்கள் ரூபாய் இருநூறு கோடி அளவிற்கு வரி செலுத்துவது தவிர்க்கப்படும். இதன் விளைவாக, தயாரிப்புப் பொருள்களின் விலைகள் குறைந்து, பிற மாநிலத் தயாரிப்பாளர்கள் ஆக்கபூர்வமாக போட்டியிடக்கூடிய நிலை உருவாகும்" என்று எழுதியுள்ளது.

'தினகரன்' தனது தலையங்கத்தில் "சலுகைகள் - அடுக்கடுக்காகச் சலுகைகள், அலை அலையாகச் சலுகைகள், சலுகை மழை, சலுகை வெள்ளம், சலுகைக் கடல், சலுகை மலை இப்படியாக முதலமைச்சரின் *1996-97*-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்குப் பாமாலையும், பூமாலையும் சூட்டலாம். தேர்தல் நடப்பதற்கு முந்தைய ஆண்டில், ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் நிதியமைச்சர்தான் சலுகை தோரணம் கட்டி, தம் வரவு செலவுத் திட்டத்தைப் புனைந்து காட்டுவது வாடிக்கை. ஆனால், முதல்வரோ, தேர்தல் நடந்து முடிந்த பிறகும்கூட, இப்படிச் சலுகை விவரம் அனைத்தும் காட்டியிருக்கிறார். தேர்தல் அறிக்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் மறந்துவிடாமல் தொட்டுச் சென்றிருக்கிறார். இதுதான் சேமநல அரசின் சரியான இலக்கணம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ரிசர்வ் வங்கியினுடைய கவர்னராக இருந்தவரும், மத்திய அரசின் முன்னாள் நிதித்துறைச் செயலாளராக விளங்கியவரும், ஆரம்ப காலத்தில் தமிழக அரசில் என்னுடைய நிதித்துறைச் செயலாளராக இருந்தவருமான எஸ். வெங்கட்ரமணன், இ.ஆ.ப., அவர்கள் ஆங்கிலப் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில்-

''The latest Budget represents this Govenment's initial forays into the task of speeding of the growth of Tamil Nadu. Its emphasis on social development, encouragement of industrial investment and infrastructure and agriculture is fully in keeping with the Chief Minister's vision. The simplification of sales tax collection procedures is a token of the Chief Minister's refreshing attitude which governs an impatience with the proliferation of forms and certificates.

The marked orientation of the Budget in favour of industrial growth and expansion is clear by the many concessions that it offers. No Budget of Tamil Nadu, especially those of Dr. Karunanidhi, has been complete without concessions to Government servants. Most of them are long overdue and legitimate. Particularly, the Chief Minister has done well to simplify the Pension Rules. The Budget has taken important initiatives to renovate Tamil Nadu's irrigation systems and for better exploitation of water resoures.

To conclude, it was, for me, almost a sentimental journey to go through it, another Budget deftly drafted by the Kalaignar, a Budget of promise and hope for the state. I hope this promise and vision will be translated into reality in a succession of Budget from the same able hands.''

### வணிகர் சங்கங்களின் பல்வேறு அமைப்புகள் பாராட்டு

என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த அறிக்கையைப் பற்றி Madras Chamber of Commerce, Confederation of Indian Industries, Southern India Chamber of Commerce, Guindy Industrial Estate தயாரிப்பாளர்கள் Association Indian Chamber of Commerce and Industries, Coimbatore, Coimbatore Stock Exchange போன்ற சேம்பர்கள், வணிக நிறுவனங்கள், வியாபாரிகளுடைய சங்கங்கள், ஏழை எளிய மக்களின் சார்பாக வழங்கப்பட்ட பாராட்டுக் குரல்கள், அரசு ஊழியர்கள் சார்பாகத் தெரிவிக்கப்பட்ட நன்றியுணர்வுச் செய்திகள் இத்தனையும் ஏடுகளிலே நீங்களும் கண்டிருக்கிறீர்கள். இந்த வரவு செலவு திட்டத்தில் திருநாவுக்கரசு அவர்கள் சில புள்ளி விவரங்களை நேற்றைய தினம் எடுத்துக்காட்டி, நான் இடைமறித்துச் சிலவற்றைச் சொன்னாலும்கூட, முழுமையாகச் சொல்ல இயலவில்லை. இவைகள் எல்லாம் குறைந்திருக்கிறது. பொதுவான பணிகள், சமூகப் பணி, பொருளாதாரப் பணி இதில் ஏன் இந்த வித்தியாசம் என்றெல்லாம் எடுத்துக்காட்டினார். Economical Service பொருளாதாரப் பணி என்பது மண்வளப் பாதுகாப்பு, பால் பண்ணை, காடு வளர்ப்பு, கூட்டுறவு, பாசனம், தொழில்கள், சாலைகள், பாலங்கள், நுகர்பொருள் வழங்கல், வேளாண்மை, ஊரக வளர்ச்சி இத்தனையும் அடங்கியது பொருளாதாரப் பணியிலே வருகிறது.

சமூகப்பணி என்பது குடிநீர் வழங்கல், வீட்டு வசதி, கல்வி, மக்கள் நல்வாழ்வு, நகர்ப்புற வளர்ச்சி, ஆதிதிராவிடர்கள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சமூகநலன், சத்துணவு, தொழிலாளர் நலன் இத்தனையும் சமூகப் பணியிலே வருகிறது.

பொதுவான பணிகள் என்ற தலைப்பில் அரசு ஊழியர்கள், நீதித்துறை, காவல்துறை, பொதுப்பணித் துறை, மாவட்ட நிர்வாகம், ஓய்வூதியம் பெறுவோர் இத்தனையும் பொதுவான பணிகள் என்ற தலைப்பிலே வருகிறது. அதிலேதான் அவர் குறை கண்டு சதவிகிதம் குறைவாக இருக்கிறது என்று குறிப்பிட்டார். ஆனால் உண்மை என்னவென்றால் இந்தப் பொருளாதாரப் பணியில் 1995-96-ஆம் ஆண்டில் 2,935 கோடி ரூபாய், அது அதற்கு முதலாண்டு 1994-95-லிருந்து 2,788 கோடியோடு ஒப்பிடும்போது 1.67 சதவிகிதம்தான். இப்போது 1996-97-இல் அது 3,158 கோடியாக மாறியிருக்கும்போது 11.40 சதவிகிதமாக மாறியிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். அதைப்போலவே, சமூகப் பணியில் 1995-96-இல் 14.17 சதவிகிதம் என்று இருக்கும்போது 1996-97-இல் 9.05 என்று குறைந்திருக்கிறது என்பதை சுட்டிக் காட்டினார். நான் அவருக்குத் தர விரும்புகின்ற விளக்கம் 4,392 கோடியிலிருந்து இந்த ஆண்டு, நடப்பாண்டில் 4,790 கோடி என்று உயர்ந்திருந்தாலும்கூட, வளர்ச்சி விகிதம் குறைவாக இருக்கிறது என்பதை நண்பர் திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக் காட்டியதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

ஆனால் ஏன் அந்த வேறுபாடு ஏற்பட்டது என்றால் ''National Social Assistance Scheme'' அதாவது தேசிய சமூக நல உதவித் திட்டம் இது அவர் குறிப்பிடுகிற 1995-96-இல் நேரடியாகச் செல்லாமல் மாநிலம் வழியாகச் சென்றபோது 4,392 கோடியாக இருந்தது. இப்போது மாவட்டங்களுக்கு அந்தத் திட்டத்தினுடைய தொகை நேரடியாகப் போய் விடுகிறது. எனவேதான் இந்த வித்தியாசம் ஏற்பட்டது என்பதை அவர்களுக்கு விளக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே பொதுவான பணிகளில் ரூ.3,418 கோடி ரூபாய் என்பது ரூ.3,821 கோடி ரூபாயாக இப்போது மாறியிருக்கிறது. பொதுவான பணிகளுக்கு அதிகம் செலவழிக்கக் கூடாது என்பது அவருடைய வாதம். அந்த வாதப்படி பார்த்தால் 19.31 சதவிகிதம் இப்போது 11.78 சதவிகிதமாகத்தான் மாறி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### அம்மையார் மறந்துவிடக்கூடாது

இது ஒரு பற்றாக்குறை பட்ஜெட் என்று பரவலாக விமர்சிக்கப்பட்டு இந்தப் பற்றாக்குறை பட்ஜெட்டை வைத்துக் கொண்டு முதலமைச்சர் கருணாநிதி என்ன செய்யப் போகிறார் என்று நம்முடைய கட்சிகளின் தலைவர்கள் பல பேருடைய அறிக்கைகள், இந்த நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டவுடன், கருத்துக்கள் கேட்டபோது, அதற்கு உடனடியாகச் சொல்லப்பட்ட கருத்துக்கள், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் உட்பட, பெரும் பற்றாக்குறை இருக்கிறது, எப்படி சமாளிக்கப்போகிறார் என்ற வருத்தத்தை அல்லது வியப்பைத்தான் அனைவரும் தெரிவித்தார்கள். இவர்கள் தெரிவித்தது எப்படியாவது சமாளித்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு. ஆனால் முன்னாள் முதலமைச்சர், செல்வி ஜெயலலிதா அம்மையார் தெரிவித்த கருத்தில், ரூ.12,107 கோடி செலவுக்கான பட்ஜெட்டை கருணாநிதி சமர்ப்பித்துள்ளார் - அவர் கருணாநிதி என்று தான் சொல்லுவார். ரூ.1,038 கோடி பற்றாக்குறையைச் சரிக்கட்ட என்ன வழியைக் கையாளப் போகிறார் என்று தெரியவில்லை என்று கூறியிருக்கிறார்.

### அம்மையாரைவிட சமாளிப்போம்

வருவாய்க் கணக்கில் இந்த ஆண்டு 1,038 கோடி ரூபாய் பற்றாக்குறை என்பது உண்மைதான். ஆனால் கடந்த ஆண்டுகளின் நிலைமைகளை அம்மையார்

அவர்கள் மறந்துவிடக் கூடாது. 1988-89-ஆம் ஆண்டு வருவாய்ப் பற்றாக்குறை 217.56 கோடி ரூபாய். ஒட்டு மொத்த பற்றாக்குறை 325.07 கோடி ரூபாய். 1989-90-இல் வருவாய் பற்றாக்குறை கழக ஆட்சியின்போது 288.49 கோடி ரூபாய். ஒட்டுமொத்த பற்றாக்குறை 64.77 கோடி ரூபாய். அப்போதுதான் ஆட்சி கலைக்கப்பட்டவுடன் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். கருணாநிதி 1,312 கோடி ரூபாய் பற்றாக்குறையாக வைத்துவிட்டுப் போய்விட்டார். நான் என்ன செய்வது என்று பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்தார். கூட்டங்களிலே பேசினார். ஆனால் உண்மை என்னவென்றால் 1990-91-லே வருவாய்ப் பற்றாக்குறை 416 கோடி ரூபாய்தான். ஒட்டுமொத்த பற்றாக்குறை 268.10 கோடி ரூபாய்தான். அதற்குப் பிறகு வரிசையாகப் பார்த்தால் 1993-94-இல் வருவாய்ப் பற்றாக்குறை 1,310 கோடி ரூபாய். 1,038 கோடி ரூபாய், இப்போது பற்றாக்குறை. அதிசயப் படுகிறார் அம்மையார். எப்படி சமாளிக்கப் போகிறார்? என்ன செய்யப் போகிறார். என்ன திட்டங்களைத் தீட்டப் போகிறார் என்று கேட்கின்ற அம்மையாரைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். 1993-94-இல் வருவாய் பற்றாக்குறை இன்றைக்கு 1,038 கோடி அன்றைக்கு 1,310 கோடி. அதை எப்படி நீங்கள் சமாளித்தீர்களோ அதை விட திறமையாக, ஒழுங்காக, செம்மையாக, கூடுமானவரையில் இந்த அரசு சமாளிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு தொடர்ந்து 1995-96-லே கூட பற்றாக்குறை திருத்த மதிப்பீட்டில் 1,168 கோடி ரூபாய் என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுமாத்திர மல்ல; இதே ஆண்டில் தேர்தலுக்கு முன்பு, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாருடைய அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால நிதிநிலை இப்போது நம் கையில் இருப்பதற்கு முன்புள்ள இடைக்கால நிதிநிலை நாவலர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட அந்த அறிக்கையில் வருவாய் பற்றாக்குறை 962.09 கோடி ரூபாய். ஒட்டுமொத்த பற்றாக்குறை 680 கோடி ரூபாய், எனவே 962 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறையிலிருந்து 1,038 கோடி ரூபாய் வருவாய்ப் பற்றாக்குறை என்பது ஒரு பெரிய உயர்வு அல்ல என்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இந்தப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பேசியது என் கவனத்திற்கு வருகிறது.

மாநில அரசினுடைய பற்றாக்குறையை மைய அரசினுடைய பற்றாக்குறையோடு ஒப்பிடக் கூடாது. மாநில அரசின் பற்றாக்குறை ஒரு ஆண்டிலிருந்து அடுத்த ஆண்டிற்குத் தொடர்ந்து கூடிக் கொண்டே இருக்கக் கூடியது.

அந்தப் பற்றாக்குறையை வேறுவழிகளில் சமாளித்தாலன்றியில் அது பெருகிக் கொண்டிருப்பதைக் குறைக்க முடியாது, தடுக்க முடியாது.

மைய அரசு ஒரு ஆண்டினுடைய பற்றாக்குறையை ஈடுகட்ட அதே ஆண்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் கூடுதல் கரன்சி நோட்டுக்களை அச்சடிப்பதன் மூலம்கூட சரிக்கட்டிவிடும். நாம் கரன்சி நோட்டுக்களை அச்சடிக்கின்ற அதிகாரம் பெற்றவர்கள் அல்ல; அந்த அதிகாரத்தைக் கேட்பவர்களும் அல்ல!

அதுதவிர, வேறு அதிகாரங்களைத்தான் 'மாநில சுயாட்சி' என்ற பெயரால் நாம் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். ஆனால் மாநில அரசு பற்றாக்குறையைச் சரிக்கட்ட இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து வழிவகை முன்பணம் அல்லது 'மிகைப்பற்று' Over draft ஆகியவற்றைக் கடனாகப் பெற்று அதை அடுத்த ஆண்டிலேயே திருப்பிச் செலுத்த வேண்டிய நிலை உள்ளது. எனவே மாநில அரசின் பற்றாக்குறை தொடர்ந்து கூடிக் கொண்டு போகிறது. அதைச் சமாளிக்கின்ற பொறுப்பை திறமையோடு நடத்துகின்ற அரசால்தான் நிர்வகிக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒட்டுமொத்தப் பற்றாக்குறை 881 கோடியாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளதே, இதற்குப் புதிய வரிச் சலுகைகளை வழங்கியிருக்காவிட்டால் இந்தப் பற்றாக்குறை இன்னமும்கூட குறைந்திருக்கக்கூடும். இந்த அளவுக்கு உயர்ந்திருப்பதற்குக் காரணமே, உணவு மானியத்திற்கான தொகை ஏற்கெனவே 850 கோடி என்பதில் இருந்து 1000 கோடியாக இந்த நடப்பு ஆண்டிலே உயருகிறது. ஆண்டுத் திட்ட ஒதுக்கீடு 3,550 கோடியிலிருந்து 3,700 கோடியாக உயருகிறது. Part Schemes புதிய பகுதி திட்டங்கள் 60.40 கோடி ரூபாய்க்கு இப்பொழுது சேர்க்கப்பட்டிருக்கிறது.

அரசு அலுவலாளர்களுக்கு அகவிலைப்படி வழங்க கூடுதலாக 90 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மொத்த வருவாய்ச் செலவில் வருவாய்ப் பற்றாக்குறையின் சதவிகித அளவைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் சொன்ன அந்தக் கணக்கு சரியல்ல என்பதை அவரே உணரக்கூடும்.

நடப்பு ஆண்டில் இந்தப் பற்றாக்குறை மொத்த வருவாய்ச் செலவில் 8.58 சதவிகிதம்தான். ஆனால் 1991-92-இல் இந்தப் பற்றாக்குறையின் அளவு 21.94 சதவிகிதமாக இருந்தது.

1992-93-இல் 17.87 சதவிகிதமாக இந்தப் பற்றாக்குறையின் அளவு இருந்தது. அதற்கு மாறாக இப்பொழுது 8.58 சதவிகிதமாகத்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பற்றாக்குறை சதவிகிதம் முன்பு அதிகம்

**திருநாவுக்கரசு குறுக்கீடு:** குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன். நான் சரியாகத்தான் கூறினேன். 8.58

என்பதனால் சுமார் 9 என்று சொன்னேன்.

**முதல்வர் கலைஞர்:** நான் குறிப்பிட்டது பற்றாக்குறை இதைவிட அதிகமான சதவிகிதம் முன்பு இருந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான்!

இந்த அவையில் நிதி நிலை அறிக்கையிலே உள்ள ஆழமான பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியும் அல்லது வரிவிகிதங்களைப் பற்றியோ அல்லது கொள்கை விளக்கங்களைப் பற்றியோ பல உறுப்பினர்கள் - ஆளுங்கட்சி உறுப்பினர்கள் உட்பட பல உறுப்பினர்கள் அதிக நேரம் எடுத்துக் கொள்ளாமல் ஊழலற்ற ஒரு ஆட்சி நடைபெற வேண்டும் என்பதிலே மிகுந்த அக்கறை காட்டினார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் தன்னுடைய உரையிலே அதைச் சுட்டிக்காட்டினார்கள். மற்ற கட்சித் தலைவர்களும், மற்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

எல்லா உறுப்பினர்களுடைய பெயர்களையும் சொல்லி அவர்களுடைய கருத்துக்களை எல்லாம் சொல்லவில்லை என்று யாரும் வருத்தப்படக்கூடாது.

ஏனென்றால் பலரும் தங்களுடைய தொகுதிகளைப் பற்றிச் சொன்ன அந்தக் குறைபாடுகள், கோரிக்கைகள் அனைத்தையும் நான் இந்த நோட்டுப் புத்தகத்திலே குறித்து வைத்திருக்கிறேன். திருக்குறள் வடிவிலே உள்ள நோட்டுப் புத்தகம். திருக்குறளை எப்படி மறக்கமாட்டேனோ, அதைப் போல இந்த நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்திருக்கின்ற பிரச்சினைகளையும் நண்பர் சுதர்சனம் உள்பட, அங்கே ஆரம்பித்து நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கள் முடித்த வரையிலே உள்ள அத்தனைத் தொகுதி கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை நிச்சயம் நான் மேற்கொள்வேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் அறிக்கையை இங்கே எடுத்துக்காட்டி திருநாவுக்கரசு அவர்கள் "அதை எல்லாம் எப்பொழுது செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார். தேர்தல் அறிக்கை நடப்பாண்டு காலத்திற்கு மாத்திரம் வெளியிடப்பட்டது அல்ல; எங்களுடைய 5 ஆண்டுகால ஆட்சிக்காக வெளியிடப்பட்டது தேர்தல் அறிக்கை! எனவே அவற்றை எல்லாம் ஐந்தாண்டு காலத்திலேயே நிறைவேற்றுவோம். திருநாவுக்கரசு எங்களோடு இருந்து நிறைவேற்றுவதற்கு இப்படி ஆக்கபூர்வமான யோசனைகளை எல்லாம் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஊழலை ஒழிக்க நிர்வாகச் சீர்திருத்தம் பெற ஒரு உயர்நிலைக்குழு அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருந்தேன்.

அந்த வாசகம் தமிழ்நாட்டில் அரசுத் துறைகளிலும், அரசு நிறுவனங்களிலும் ஊழல்களும் முறைகேடுகளும் நடைபெறாமல், தூய்மையான சிறந்ததொரு நிர்வாகத்தை அமல்படுத்துவதற்கும், தற்போதுள்ள நிர்வாக அமைப்பில் சில மாற்றங்களைச் செய்வதற்கான வழிமுறைகளை ஆய்வு செய்து அரசுக்குத் தேவையான சீர்திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கும் ஒரு உயர்நிலைக்குழு அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருந்தேன்.




## ஊழலை ஒழிக்க உயர்மட்டக்குழு

அந்தக் குழுவை உங்கள் முன்னால் இப்பொழுது அறிவிக்க விரும்புகிறேன்.

அதற்கேற்ப, ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ராமானுஜம் அவர்களைத் தலைவராகவும், செல்வி எம்.எம். ரமேஷ், இ.ஆ.ப. (ஓய்வு), திரு சி. தங்கராஜ், இ.ஆ.ப., (ஓய்வு), திரு சி.வி. நரசிம்மன், இ.கா.ப., (ஓய்வு), முன்னாள் துணைவேந்தர் டாக்டர் அனந்த கிருஷ்ணன், முன்னாள் மேலவை உறுப்பினரும் ஆர்க்காடு குடும்பத்தைச் சேர்ந்தவருமான திரு ஏ.ஆர். தாமோதரன், திரு கே. லெட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு), பாரதி குடும்பத்தைச் சேர்ந்தவர் - தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு உயர்நிலைக் குழு அமைக்கப்படுகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நியாய விலைக்கடைகளைப் பற்றியும் பொது விநியோகத்திலே இருக்கின்ற குறைபாடுகளைப் பற்றியும் எதிர்க்கட்சித் தலைவர் மிக விரிவாக இங்கே பேசியிருக்கிறார். மற்ற தலைவர்களும் மற்ற உறுப்பினர்களும் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். எதிர்க்கட்சிகளுக்கு சற்றும் சளைக்காமல் ஆளுங் கட்சிக்காரர்களும் பேசியிருக்கிறார்கள். இன்றைக்குக் காலையில்கூட சரமாரியான கேள்விகளைத் தம்பி டி. இராஜேந்தர் உணவு அமைச்சரிடத்திலே கேட்டதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். எனவே எல்லோரும் சேர்ந்து இந்தப் பொது விநியோக முறையிலே ஒரு நல்ல நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிட்டிருந்தேன்.

சட்டமன்ற உறுப்பினர்களும் மற்றும் அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு நம்முடைய மாநிலத்தில் நடைபெறுவதைவிட மிகச் சிறந்ததாக

இந்தப் பொதுவிநியோக முறை நடப்பதாகச் சொல்லப்படுகின்ற மாநிலங்களுக்குச் சென்று ஓரிரு மாதங்களுக்குள்ளாக அந்த நடைமுறைகளை எல்லாம் பரிந்துரை செய்யக்கூடிய அந்தப் பணியினை ஆற்றிட வேண்டும் என்பதற்காக ஒரு குழு அமைக்கப்படும் என்று நான் குறிப்பிட்டேன். கட்சித் தலைவர்களை எல்லாம் கலந்துகொண்டு அந்தந்தக் கட்சியின் சார்பாக யாரை உறுப்பினராக அந்தக் குழுவிலே அமைக்கலாம் என்ற கருத்தைக் கேட்டு சட்டமன்றத் தொடர் கூட்டம் முடிவதற்குள்ளாக அந்தக் குழு விரைவிலே அறிவிக்கப்படும் என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டங்களைப் பிரித்து நிர்வாகத்தை விரைவுபடுத்த செம்மைப்படுத்த ஒரு கருத்து இந்த அரசுக்கு இருப்பதை ஏற்கெனவே நான் வெளியிட்டு, அதன்படி -

## 1. உயர்மட்டக்குழு உறுப்பினர்கள்

மாவட்டங்களைப் பிரிப்பதற்காக அந்தந்தப் பகுதிகளிலே உள்ள பொதுமக்களின், அவர்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களை அறிந்து அரசாங்கத்திற்குத் தெரிவிப்பதற்காக ஒரு குழு பல்வேறு மாவட்டங்களுக்கும் அனுப்பப்பட்டது.

அந்தக் குழுவின் தலைவர் வருவாய்த் துறை தலைமை ஆணையர்.

குழுவின் உறுப்பினர்கள்:

1. நில நிர்வாகத் துறை ஆணையர்
2. இணை ஆணையர், வருவாய் நிர்வாகம்
3. இயக்குநர், நகராட்சி நிர்வாகத் துறை
4. இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை.

இந்தக் குழுவின் பரிந்துரைக்கேற்ப இன்று காலையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு, மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, உருவாகின்ற புதிய மாவட்டங்கள் பற்றிய விவரங்களை இங்கேதான் கூற விரும்புகின்றேன். அது பற்றிய விவரம் வருமாறு:

## மாவட்டப் பிரிவினை

1. மதுரை மாவட்டம். ஒன்றியத் தேர்தல் எல்லாம் வருகின்ற காரணத்தால் ஒன்றிய அளவிலேயே எந்தெந்த மாவட்டங்களில் எந்தெந்த ஒன்றியங்கள் இருக்கும் என்பதை மாத்திரம் எடுத்துக்காட்டுகின்றேன்.

1. திருப்பரங்குன்றம் ஒன்றியம்,
2. மதுரை கிழக்கு ஒன்றியம்,
3. மதுரை மேற்கு ஒன்றியம்,
4. மேலூர் ஒன்றியம்,
5. கொட்டாம்பட்டி ஒன்றியம்,
6. வாடிப்பட்டி ஒன்றியம்,
7. அலங்காநல்லூர் ஒன்றியம்,
8. உசிலம்பட்டி ஒன்றியம்,
9. செல்லம்பட்டி ஒன்றியம்,
10. திருமங்கலம் ஒன்றியம்,
11. கள்ளிக்குடி ஒன்றியம்,
12. டி.கல்லுப்பட்டி ஒன்றியம்,
13. சேடப்பட்டி ஒன்றியம்.

ஆகியவை மதுரை மாவட்டத்தில் அடங்கும்.

## 2. வீரன் அழகுமுத்து வைகை மாவட்டம்

வைகை மாவட்டம் என்ற பெயர் வேண்டும் என்று சிலர் விரும்பினார்கள். வீரன் அழகுமுத்து என்ற பெயர் வேண்டும் என்று சிலர் விரும்பினார்கள். என் விருப்பமும் அதுவே. எனவே இருவரையும் திருப்திப்படுத்துகின்ற வகையில் "வீரன் அழகுமுத்து வைகை மாவட்டம்" என்று பெயர் வைத்து, அதில் -

1. பெரிய குளம் ஒன்றியம்,
2. தேனி ஒன்றியம்,
3. ஆண்டிப்பட்டி ஒன்றியம்,
4. கடமலைக்குண்டு - மயிலாடும் பாறை ஒன்றியம்,
5. உத்தமபாளையம் ஒன்றியம்,
6. கம்பம் ஒன்றியம்,
7. சின்னமனூர் ஒன்றியம்,
8. போடிநாயக்கனூர் ஒன்றியம்

ஆகியவை அடங்கும்.

## 3. அண்ணா மாவட்டம்

அண்ணா பிறந்த காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு, மாவட்டம் அமைய வேண்டும் என்ற எங்களுடைய கருத்தை நிறைவு செய்து கொள்வதற்கும் அண்ணா மாவட்டம் என்று பெயரிட்ட அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயர் நிலைக்க வேண்டும் என்பதற்காகவும் செங்கற்பட்டு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதிக்கு அண்ணா மாவட்டம் என்றும் ஒரு பகுதிக்கு எம்.ஜி.ஆர். மாவட்டம் என்றும் பெயர் சூட்டப்படுகின்றது. செங்கை அண்ணா செங்கை எம்.ஜி.ஆர். என்றெல்லாம் பெயரில்லை என்ற நினைப்பில் சில பேர் பெயரை விட்டுவிட்டு செங்கையை மாத்திரம் சொல்வார்கள் என்பதற்காக அண்ணா மாவட்டத்தில்-

1. காஞ்சிபுரம் ஒன்றியம்,
2. வாலாசாபாத் ஒன்றியம்,
3. உத்தரமேரூர் ஒன்றியம்,
4. திருப்பெரும்புதூர் ஒன்றியம்,
5. குன்றத்தூர் ஒன்றியம்,
6. திருப்போரூர் ஒன்றியம்,

7. காட்டாங்குளத்தூர் ஒன்றியம்,
8. திருக்கழுக்குன்றம் ஒன்றியம்,
9. செயிண்ட்தாமஸ் மவுண்ட் ஒன்றியம்,
10. அச்சரப்பாக்கம் ஒன்றியம்,
11. மதுராந்தகம் ஒன்றியம்,
12. லத்தூர் ஒன்றியம்,
13. சித்தாமூர் ஒன்றியம்,

ஆகிய ஒன்றியங்கள் அடங்கும்.

**4. எம்.ஜி.ஆர். மாவட்டம்**

1. வில்லிவாக்கம் ஒன்றியம்,
2. புழல் ஒன்றியம்,
3. மீஞ்சூர் ஒன்றியம்,
4. சோழவரம் ஒன்றியம்,
5. கும்மிடிப்பூண்டி ஒன்றியம்,
6. திருவாலங்காடு ஒன்றியம்,
7. திருத்தணி ஒன்றியம்,
8. ஆர்.கே.பேட்டை ஒன்றியம்,
9. பள்ளிப்பட்டு ஒன்றியம்,
10. திருவள்ளூர் ஒன்றியம்,
11. பூண்டி ஒன்றியம்,
12. கடம்பத்தூர் ஒன்றியம்,
13. எல்லாபுரம் ஒன்றியம்,
14. பூவிருந்தவல்லி ஒன்றியம்,

ஆகியவை அடங்கும்.

**5. சேலம் மாவட்டம்**

1. சேலம் ஒன்றியம்,
2. வீரபாண்டி ஒன்றியம்,
3. பனமரத்துப்பட்டி ஒன்றியம்,
4. அயோத்தியாப்பட்டணம் ஒன்றியம்,
5. வாழப்பாடி ஒன்றியம்,
6. மேச்சேரி ஒன்றியம்,
7. நங்கவல்லி ஒன்றியம்,
8. கொளத்தூர் ஒன்றியம்,
9. ஓமலூர் ஒன்றியம்,
10. காடையாம்பட்டி ஒன்றியம்,
11. தாரமங்கலம் ஒன்றியம்,
12. சங்ககிரி ஒன்றியம்,
13. ம்குடஞ்சாவடி ஒன்றியம்,
14. எடப்பாடி ஒன்றியம்,
15. கொங்கனாபுரம் ஒன்றியம்,
16. ஆத்தூர் ஒன்றியம்,
17. பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம்,
18. தலைவாசல் ஒன்றியம்,
19. கெங்கவல்லி ஒன்றியம்,

ஆகியவை அடங்கும்.

**6. ராஜாஜி மாவட்டம்**

1. நாமக்கல் ஒன்றியம்,
2. எருமைப்பட்டி ஒன்றியம்,
3. மோகனூர் ஒன்றியம்,
4. சேந்தமங்கலம் ஒன்றியம்,
5. புதுச்சத்திரம் ஒன்றியம்,
6. கொல்லிமலை ஒன்றியம்,
7. ராசிபுரம் ஒன்றியம்,
8. வெண்ணந்தூர் ஒன்றியம்,
9. நாமகிரிப்பேட்டை ஒன்றியம்,
10. திருச்செங்கோடு ஒன்றியம்,
11. பள்ளிப்பாளையம் ஒன்றியம்,
12. மல்லசமுத்திரம் ஒன்றியம்,
13. எளச்சிப்பாளையம் ஒன்றியம்,
14. பரமத்தி ஒன்றியம்,
15. கபிலர் மலை ஒன்றியம்,

ஆகியவை அடங்கும் இது நாமக்கல்லை தலைநகராகக் கொண்டு விளங்குகின்ற மாவட்டம்.

**7. தஞ்சாவூர் மாவட்டம்**

1. திருவையாறு ஒன்றியம்,
2. பூதலூர் ஒன்றியம்,
3. தஞ்சாவூர் ஒன்றியம்,
4. திருவோணம் ஒன்றியம்,
5. ஒரத்தநாடு ஒன்றியம்,
6. சேதுபாவாசத்திரம் ஒன்றியம்,
7. பேராவூரணி ஒன்றியம்,
8. பட்டுக்கோட்டை ஒன்றியம்,
9. மதுக்கூர் ஒன்றியம்,
10. அம்மாபேட்டை ஒன்றியம்,
11. கும்பகோணம் ஒன்றியம்,
12. பாபநாசம் ஒன்றியம்,
13. திருப்பனந்தாள் ஒன்றியம்,
14. திருவிடை மருதூர் ஒன்றியம்,

ஆகியவை அடங்கும்.

**8. நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்**

1. நாகப்பட்டினம் ஒன்றியம்,
2. திருமருகல் ஒன்றியம்,
3. கீழ்வேலூர் ஒன்றியம்,
4. கீழையூர் ஒன்றியம்,
5. வேதாரண்யம் ஒன்றியம்,

6. தலைஞாயிறு ஒன்றியம்,

7. மயிலாடுதுறை ஒன்றியம்,

8. குத்தாலம் ஒன்றியம்,

9. செம்பனார்கோவில் ஒன்றியம்,

10. சீர்காழி ஒன்றியம்,

11. கொள்ளிடம் ஒன்றியம்,

ஆகியவை அடங்கும்.

**9. ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம்**

திருவாரூரைத் தலைநகராகக் கொண்ட மாவட்டம்

1. திருவாரூர் ஒன்றியம்,
2. நன்னிலம் ஒன்றியம்,
3. குடவாசல் ஒன்றியம்,
4. கொரடாச்சேரி ஒன்றியம்,
5. வலங்கைமான் ஒன்றியம்,
6. மன்னார்குடி ஒன்றியம்,
7. கோட்டூர் ஒன்றியம்,
8. நீடாமங்கலம் ஒன்றியம்,
9. திருத்துறைப்பூண்டி ஒன்றியம்,
10. முத்துப்பேட்டை ஒன்றியம்,

ஆகியவை அடங்கும்.

**10. திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம்**

1. திருவரம்பூர் ஒன்றியம்,
2. அந்தநல்லூர் ஒன்றியம்,
3. மணிகண்டம் ஒன்றியம்,
4. மணப்பாறை ஒன்றியம்,
5. மருங்காபுரி ஒன்றியம்,
6. வையம்பட்டி ஒன்றியம்,
7. புள்ளம்பாடி ஒன்றியம்,
8. லால்குடி ஒன்றியம்,
9. மணச்சநல்லூர் ஒன்றியம்,
10. முசிறி ஒன்றியம்,
11. தொட்டியம் ஒன்றியம்,
12. தாத்தையங்கார்பேட்டை ஒன்றியம்,
13. துறையூர் ஒன்றியம்,
14. உப்பிலியாபுரம் ஒன்றியம்,

ஆகியவை அடங்கும்.

**11. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்**

1. பெரம்பலூர் ஒன்றியம்,
2. வேப்பந்தட்டை ஒன்றியம்,
3. அரியலூர் ஒன்றியம்,
4. திருமானூர் ஒன்றியம்,
5. வேப்பூர் ஒன்றியம்,
6. ஆலத்தூர் ஒன்றியம்,
7. ஜெயங்கொண்டம் ஒன்றியம்,
8. டி.பழூர் ஒன்றியம்,
9. ஆண்டிமடம் ஒன்றியம்,
10. செந்துறை ஒன்றியம்,

ஆகியவை அடங்கும்.

**12. கரூர் தீரன் சின்னமலை மாவட்டம்**

கரூர் தீரன் சின்னமலை 'கவுண்டர்' என்பதை



மாற்றி விடுகிறோம். எல்லோருடைய விருப்பத்திற்கும் இணங்க!

1. கரூர் ஒன்றியம்,
2. தாந்தோனி ஒன்றியம்,
3. அரவாக்குறிச்சி ஒன்றியம்,
4. கே.பரமத்தி ஒன்றியம்,
5. குளித்தலை ஒன்றியம்,
6. தோகைமலை ஒன்றியம்,
7. கிருஷ்ணராயபுரம் ஒன்றியம்,
8. கடவூர் ஒன்றியம்,

ஆகியவை அடங்கும்.

### திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம்

இந்த மாவட்டங்களன்னியில் திண்டுக்கல் அண்ணா மாவட்டமாக இருந்தது, இனிமேல் திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம் என்ற பெயரில் அழைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாவட்டங்களுக்குரிய கோட்டங்கள் குறித்தும் வட்டங்கள் குறித்தும் அரசு அறிவிக்கை நாளை வெளிவரும் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

இந்த மாவட்டங்களுடைய அதிகாரிகளாக யார் யார் நியமிக்கப்படுவார்கள் என்ற விபரங்களும் அரசின் சார்பில் நாளை வெளியிடப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் மகளிர் மேம்பாடு, வேலைவாய்ப்பு, மகளிர் மதுவிலக்குப் பிரச்சாரம் என்ற ஒரு தலைப்பில் சில கருத்துக்களைக் கூறியிருந்தேன்.

இத்திட்டத்தில் சமூகத்தில் அவர்களுடைய நிலையை உயர்த்தி மகளிருக்குச் சமூக மேம்பாட்டினையும் அளிக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புறங்களில் வாழும் மகளிர், சிறாருக்கான முன்னேற்றத் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், பிரதம அமைச்சரின் வேலைவாய்ப்புத் திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டங்கள் எல்லாவற்றிலுமே மகளிருக்கும், மகளிர் குழுக்களுக்கும் வருவாய் பெருக்கத்தக்க வகையில் உதவியளிக்கும் அம்சங்கள் ஏற்கெனவே இருக்கின்றன. இத்திட்டங்கள் பல்வேறு துறையினால் செயல்படுத்தப்படுவதால் கிராமப்புறப் பெண்களின் பிரச்சினைகளுக்கு முழுவதுமாகத் தீர்வு காண முடியவில்லை.

உதாரணத்திற்குத் திட்டங்கள் பெண்களைப் பயனாளியாகப் பார்க்கின்றனவே தவிர, சமூகத்தில் அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்காகவோ, அவர்களுடைய திறனை அதிகப்படுத்துவதற்கோ, அவர்களுடைய திறனை அதிகப்படுத்துவதற்கோ திட்டங்களில் வழியில்லை. இத்திட்டங்களில் பயன்பெறும் மகளிருக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு உள்ளதா, அவர்களுடைய வருவாய் உயர்ந்துள்ளதா என்பதும் இத்திட்டங்களின் மூலம் தொடர்ந்து கவனிக்கப்படவில்லை. பெரும்பான்மையான திட்டங்கள் எண்ணிக்கை அளவிலேயே குறியாக இருக்கின்றனவே தவிர, சத்துணவு, குடும்ப நலன், சுகாதாரம் போன்ற பொதுப் பிரச்சினைகளைத் தொடுவதே இல்லை. மிகவும் முக்கியமாக 1989-ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் கழக அரசு தொடங்கிய திட்டத்தின் வெற்றிக்கு அடிப்படையாகப் பயனாளிகளுடைய பங்கேற்பு பெரும்பான்மையான திட்டங்களில் இப்போது இல்லை.

### 10 மாவட்டங்களில் 15 ஆயிரம் குழுக்கள்

நாங்கள் அறிவித்துள்ள புதுத் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் நன்மைகளைத் தொகுத்து பெண்களின் நலனுக்காகச் சமூக, மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் ஒருங்கிணையும் ஓர் திட்டமாக அமையும். அதன்படி கிராமப்புற ஏழை மகளிர் இருபது பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்படுவர். 1996-97-இல் இத்திட்டம் செயல்படுத்தப்படும். பத்து மாவட்டங்களில் இதுபோன்ற பதினைந்தாயிரம் குழுக்கள் அமைக்கப்படும். அக் குழுக்களிலிருந்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு ஊக்குவிப்புனராகப் பதினைந் தாயிரம் பெண்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவர்களுக்குக் குழுக்கள் அமைப்பதிலும் குழுக்களைச் செயல்படுத்துவதிலும் பயிற்சி அளிக்கப்படும்.

இவர்கள் குழு அங்கத்தினர்களோடு சேர்ந்து செயல்பட்டு ஒருங்கிணைந்த விழிப்புணர்வுமிக்க முழுமையாகத் திறன் படைத்த குழுக்களாக அந்தக் குழுக்களை மாற்றுவார்கள். இக் குழு உறுப்பினர் களுக்கு நிதி நிர்வாகம், வங்கியிலிருந்து கடன் பெறுதல், நிறைவேற்றப்படும் அரசுத் திட்டங்கள், சத்துணவு, சுகாதாரம், குடும்ப நலன் போன்ற பல துறைகளிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

நடப்பு ஆண்டில் தர்மபுரி, சேலம், தென்னார்க்காடு வள்ளலார், விழுப்புரம் ராமசாமி படையாட்சியார், மதுரை, ராமநாதபுரம் ஆகிய ஆறு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், கிராமப்புறத்திலே வாழும் மகளிர், சிறார்களுக்கான முன்னேற்றத் திட்டம், இந்திரா மகளிர் திட்டம், சிறப்பு உள்ளடக்கத் திட்டம் ஆகிய திட்டங்களின் பெயர்கள் இந்த மகளிர் குழுக்களின் மூலமாக ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த மாவட்டங்களில் உள்ள கிராமப்புற ஏழைப் பெண்களைச் சென்றடைய இந்தத் திட்டம் உதவும்.

மற்றும் அண்ணா, எம்.ஜி.ஆர். மாவட்டங்களில்,

கரூர் தீரன் சின்னமலை மாவட்டம், ஏ.டி.பன்னீர் செல்வம் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம் ஆகிய நான்கு மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு, தேவையான பயிற்சி அளிக்கப்படும்.


மொத்தம் மேற்கண்ட பத்து மாவட்டங்களில் மகளிரின் திறன் என்ன? எந்தப் பொருள்கள் விற்பனை ஆகும்? அவற்றின் தேவை என்ன? என்பது போன்ற தொழில் மற்றும் விற்பனை சம்பந்தமான ஆய்வை ஒரு வியாபார அறிவுரை நிறுவனம் மேற்கொள்ளும்.

இந்த ஆய்வின் அடிப்படையில் இக்குழு உறுப்பினர்களுக்குத் தொழில் பயிற்சி, உதவி, கடன், விற்பனை குறித்த உதவி வழங்கப்படும். நடப்பாண்டில் இந்தத் திட்டம் பத்து மாவட்டங்களில் மூன்று இலட்சம் பெண்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## வீராணம் திட்டத்தில் மாற்றம்

பெரும்பாலான உறுப்பினர்கள் வீராணம் திட்டத்தைப் பற்றி இங்கே பேசினார்கள். கடந்த கூட்டத் தொடரிலேயே உறுப்பினர் அழகிரி இதைப்பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து, விவசாயிகளுடைய பிரச்சினையைக் கவனத்திலே கொள்ள வேண்டும் என்று எடுத்துக் கூறினார்.

இது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்தில் தொடங்கப்பட்ட திட்டம். அப்போது இதனுடைய மொத்த மதிப்பீடே இருபது கோடி ரூபாய்தான். அந்தத் திட்டம் இப்போது ஆயிரத்து அறுநூற்று முப்பத்து எட்டு கோடி ரூபாய் அளவாக ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அண்ணா காலத்தில் இருபது கோடி ரூபாய் என்ற அளவில் ஆரம்பிக்கப்பட்ட வீராணம் திட்டம் இன்றைக்குக் காவிரிப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக ஆகிவிட்ட சூழ்நிலையில் 1638 கோடி ரூபாய்க்கு வரவேற்கப்பட வேண்டுமா என்பது ஒரு கேள்வி. அதுமாத்திரம் அல்ல, அங்குள்ள விவசாயிகளுக்கு அதனால் எவ்வளவு தொல்லைகள் ஏற்படும் என்பது மற்றொரு பிரச்சினை. வீராணம் திட்டத்தை அண்ணா அறிவித்து தொடங்கிவைத்தபோது கிருஷ்ணா நதி திட்டம் இல்லை. அதைப்பற்றிய பேச்சு இருந்தது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, பிறகு கழக ஆட்சிக் காலத்திலும் சரி; காங்கிரஸ் அரசோடு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. ஆனால் கிருஷ்ணா திட்டம் உருவாக்கப்படவில்லை. பிறகு எம்.ஜி.ஆர். காலத்திலே கிருஷ்ணா திட்டம் அறிவித்து, இடையிலே பல ஆண்டுக் காலம் தொய்வு ஏற்பட்டு, இப்போது கிருஷ்ணா திட்டத்தின் மூலமாக முதல் கட்டமாக விரைவில் மூன்று டி.எம்.சி. தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஒன்றை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த மூன்று டி.எம்.சி. பிறகு நான்கு டி.எம்.சி. இறுதியாக ஐந்து டி.எம்.சி. ஆக, இந்தப் பனிரெண்டு டி.எம்.சி. தெலுங்கு கங்கைத் திட்டத்திலே தண்ணீரைப் பெற நாம் செலவழிக்கின்ற தொகை எழுநூறிலிருந்து, எண்ணூறு கோடிதான். ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் வீராணம் தண்ணீர் நமக்குக் கிடைப்பது 2.7 டி.எம்.சி. தான். இதற்கு 1,638 கோடி ரூபாய். எழுநூறு கோடி ரூபாய்க்குப் பனிரெண்டு டி.எம்.சி. தண்ணீரைச் சென்னைக்குப் பெற முடியும். ஆனால் ஆயிரத்து அறுநூற்று முப்பத்து எட்டு கோடி ரூபாய்க்கு 2.7 டி.எம்.சி. தண்ணீரைத் தான் பெற முடியும்.




எனவேதான் நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிறோம். வீராணம் திட்டத்தை அறவே கைவிட்டுவிடாமல் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது எப்படி என்றால், விவசாயிகளுக்குப் பிரச்சினை ஏற்படாத அளவிற்குத் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள கிராமப் பகுதிகளுக்கு மாத்திரம் தண்ணீரை வழங்க வீராணம் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வது என்றும், கிருஷ்ணா நதி நீரைச் சென்னைக்குப் பயன்படுத்திக் கொள்ளுவது என்றும், அதுவே நலமாக இருக்கும் என்றும் ஒரு கருத்து இருக்கிறது. அதை இந்த அவையிலே வைப்பது என்னுடைய கடமை என்பதாலும் அந்தக் கருத்தைக் கேட்க உங்களுக்கு உரிமை உள்ளது என்பதாலும் இங்கே அதை எடுத்துச் சொன்னேன்.

## இறந்தோர் குடும்பத்திற்கு ரூ.50 ஆயிரம்!

இங்கே லத்தீப்பும், பழனிச்சாமியும் பேசியதாகக் கருதுகிறேன். இனக் கலவரங்களிலே இறப்போருக்கும், காயமடைந்தவர்களுக்கும், காவல் துறையினரில் துப்பாக்கிச் சூட்டில் காயம்பட்டு உயிரிழப் பவர்களுக்கும், பகுதிக்குப் பகுதி நிதி உதவி வழங்குவதில் வித்தியாசம் இருக்கிறது என்று பேசப்பட்டது. தாமரைக்கனிகூட வத்திராயிருப்புக்கும், ராஜபாளையத்திற்கும் ஏற்பட்ட வித்தியாசத்தை அன்றைக்குச் சுட்டிக் காட்டினார். இவைகளை யெல்லாம் கேட்ட பிறகு, இதிலே ஒரு நிலையான கொள்கையை அரசு வகுக்க வேண்டும். ஆங்காங்கே நடைபெறும் இனக் கலவரங்கள், துப்பாக்கிப்

பிரயோகங்கள், காவல் நிலையத்திலே ஏற்படுகின்ற கொலைகள் அல்லது கற்பழிப்புகள் போன்ற நிகழ்ச்சிகள் நடக்கக் கூடாது என்றாலும் கூட, நடந்தால் அந்தந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் எப்படி நிதி வழங்க வேண்டும் என்பதற்கான ஒரு முறை வகுக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது உள்ள சூழ்நிலை குடும்பத்தில் கொலை செய்யப்பட்டு இறந்த நபர் ஒருவருக்குப் பத்தாயிரம் ரூபாய். நிரந்தரமாகச் செயல்பட முடியாமல் போகிறவர்களுக்கு ரூபாய் ஐந்தாயிரம். கற்பழிப்புக்கு ஆளான பெண்ணுக்கு ரூபாய் ஐந்தாயிரம். தற்காலிகமாகச் செயல்பட முடியாமல் போனவருக்கு ரூபாய் இரண்டாயிரம். ஊனம் அடைந்தவருக்கு ஆயிரம். காங்கிரீட் வீடுகள் சேதமடைந்தால் அவற்றிற்கு இரண்டாயிரத்து ஐநூறு குடிசைகள் சேதமடைந்தால் ரூபாய் ஆயிரத்து ஐநூறு என்று இப்படியொரு முறை மாவட்டத் தலைவர்களுக்கு - அதிகாரிகளுக்குத் தரப்பட்டுள்ளது.

எனவே அதை மாற்றி ஒரு பொதுவான ஏற்பாட்டை இந்த நிதிநிலை அறிக்கையின் தொடர்பாக வெளியிட விரும்புகிறேன். இனக் கலவரங்களில் இறந்தவர்கள், காவல்துறையினரின் துன்புறுத்தலால் இறந்தவர்கள், காவல்துறை துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் ஆகியோரின் குடும்பத்திற்கும், காவல்துறையினரால் கற்பழிக்கப் பட்டோருக்கும், நிரந்தரமாகச் செயல்பட முடியாமல் போவோருக்கும் நிவாரணத் தொகை ஐம்பதாயிரம் ரூபாய் வழங்கப்படும். இதை அந்தந்த மாவட்டத்தில் உள்ள அதிகாரிகள் உடனடியாக வழங்கலாம். அதற்காக இந்தப் பொது ஆணை.

அதிகமாகக் காயம் அடைந்தோருக்கும், ஓரளவு செயல்பட முடியாமல் போனவர்களுக்கும் நிவாரணத் தொகை ரூபாய் பத்தாயிரம். சிறு காயமுற்றோருக்கு ரூபாய் ஐந்தாயிரம் என்ற அளவிலும் ஏனைய வீடுகள் மற்றும் சொத்துக்கள் சேதமடைந்தவர்களுக்கு வேறு எந்தவிதமான மாற்றங்கள் இல்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த மாற்றங்களை ஏற்கெனவே நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தால் அல்லது தீயினால் பாதிக்கப்படுகின்ற வீடுகளுக்கு, கால்நடைகளுக்கெல்லாம் என்ன உதவி என்பது அறிவிக்கப்பட்டுள்ளது.

மிக முக்கியமாக வரிக்கொள்கை மாற்றம், அதில் பல கோரிக்கைகள் நாள்தோறும் வந்துகொண்டே இருக்கின்றன. நான் இந்த ஐந்தாறு நாட்கள் இந்த அவையிலே இருக்கும் நேரம் அமைதியான நேரம் தான். இங்கிருந்து வெளியே சென்று மண்டபத்திற்குள் உட்கார்ந்தாலும், என்னுடைய அறைக்குச் சென்றாலும், வரி பற்றிய கோரிக்கைகளோடு சட்டமன்ற உறுப்பினர்கள், வணிகர்கள் அத்தனைப் பேரும் வருகிறார்கள். ரொம்பப் பாதுகாப்பான இடம் பேரவைத்தலைவர் அறைக்குப் போனால் அங்கு பேரவைத்தலைவர் மூலமாகவும் வருகிறது. அப்படிப் பட்ட ஒரு சூழ்நிலையில் எதையும் புறக்கணிக்கக் கூடாது, அலட்சியப்படுத்தக்கூடாது என்று மீண்டும் நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்கு நிதித்துறை செயலாளரோடும் மற்றும் உள்ள அதிகாரிகளோடும் இங்கே லத்தீப் பாராட்டினாரே, அதிகாரிகளெல்லாம் முதலமைச்சரைப் பாராட்டினர்கள் என்று. அதைப்போல முதலமைச்சரும் அந்த அதிகாரிகளைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார் என்ற அளவில் அறிக்கை தயாரிக்க ஒரு பதினைந்து நாள் கண் விழித்ததைப்போல வரிக் கொள்கைகளில் ஏற்பட்ட சில சிக்கல்களைத் தீர்க்க மூன்று நான்கு நாட்கள் தொடர்ந்து கண்விழித்து இரவுகூட இரண்டு மணிக் குத்தான் தூங்கத் தொடங்கி காலையிலே இந்த வரி நிவாரணங்களோடு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

வரிக் கொள்கையிலே மாற்றம் செய்திருப்பதாலும், வணிகர்களுக்கும், பொது மக்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் பயன் விளைவிக்கும் நோக்கத்துடன் மேல் வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல் விற்பனை வரி ஆகியவைகளை நீக்குகின்ற வகையிலும் விற்பனை வரி விதிப்புக்கான குறைந்தபட்ச வரம்பினை ஒரு இலட்சத்திலிருந்து மூன்று இலட்சமாக உயர்த்தியதாலும் ஆண்டு ஒன்றுக்கு வரிக்கு உட்படும் விற்பனைத் தொகை ரூபாய் நூறு கோடிக்குக் குறைவாக உள்ள நிறுவனங்களுக்குக் கூடுதல் விற்பனை வரி அறவே நீக்கப்பட்டதாலும், கரும்பு மீது அடிப்படை கொள்முதல் வரியை 14.7 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாகக் குறைத்ததாலும் மொத்தத்தில் ஏற்கெனவே 306 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்று நிதி நிலை அறிக்கையிலே சொல்லியிருந்தேன்.

அந்த அளவிற்கு வருவாய் இழப்பு ஏற்படுமென்ற நிலையிலும் அதைப் பொருட்படுத்தாமல் வணிகர்களின் வேண்டுகோளையேற்றும், பொது மக்களின் சிரமத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்காகவும் பின்வரும் ஒருசில சலுகைகளை அறிவிக்கின்றேன்.

நடைமுறையில் அடிப்படை வரி 8 சதவிகிதமாக இருந்த பொருட்களுக்கு மேல் வரி, கூடுதல் விற்பனை வரி மற்றும் கூடுதல் மேல் வரி உள்ளிட்ட வரிகள் எல்லாம் சேர்த்து 11.6 சதவிகிதம் என்றிருந்ததை 12 சதவிகிதம் என்று உயர்த்தி நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருந்தேன். நாகை சட்டமன்ற உறுப்பினர் நிஜாமுதீன்கான் சுட்டிக் காட்டியிருந்தார். 11.6 பனிரெண்டாக உயிர்ந்திருக்கிறது. இது சரியா என்றார். அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு-

இந்தச் சிறு உயர்வினால் ஏற்படும் சிரமம் குறித்து எடுத்துக் காட்டிய காரணத்தினால் 12 சதவிகிதம் என்பதை 11 சதவிகிதமாகக் குறைப்பது என்று




தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறு 1 சதவிகிதம் குறைப்பதன் மூலமாக மட்டும் 108 கோடி வருவாய் நாம் எதிர்பார்க்கும் வருமானத்தில் குறையும்.

இவ்வாறு 12 சதவிகிதம் என்பதை 11 சதவிகிதமாகக் குறைத்ததைத் தவிர, பின்வரும் பொருட்களான 1. கேஷ் ரிஜிஸ்டர், 2. எலெக்ட்ரானிக் கருவிகள், சாமான்கள், 3. கால்குலேட்டர்கள், 4. வோல்டேஜ் ஸ்டெபிலைசர்கள், 5. டி.வி.க்கான ஆண்டனாக்கள் மற்றும் 1. மரம், 2. எலெக்ட்ரிக் பம்பு, 3. செருப்பு (காலணிகள்), 4. சீவல் (பாக்கு), 5. பிரஷ்ஷர் குக்கர், 6. பேட்டரீஸ், 7. இங்க், 8. மின்விசிறி, மின்சார பல்புகள், 9. ட்யூப் லைட்டுகள், 10. குடிநீர் வழங்குவதற்குப் பயன்படும் டேப் போன்ற சாதனங்கள், 11. புகைப்படக் கருவிகள், 12. பித்தளை, செம்பு பாத்திரங்கள், 13. ஆடியோ, வீடியோ கேசட்டுகள், 14. அலுமினியப் பொருட்கள் ஆகியவற்றிற்கு 11 சதவிகிதம் என்பது 8 சதவிகிதமென்று குறைக்கப்படுகிறது.

## கம்ப்யூட்டர்களுக்கு வரி குறைப்பு

மாணவர்கள் தற்போது கம்ப்யூட்டர் கல்வி கற்பதிலே மிகுந்த ஆர்வம் காட்டி வருவதை அனைவரும் அறிவோம். குறிப்பாகத் தமிழகத்திலே கம்ப்யூட்டர் சாதனம் மிகவும் ஆர்வமாக வளர்ந்து வருகின்றது.

கம்ப்யூட்டர் தொழிலிலே ஈடுபட்டவர்கள் எல்லாம் கம்ப்யூட்டர் கருவிகளுக்கு 3 சதவிகிதமாக இருந்த வரி தற்போது 12 சதவிகிதமாக உயர்த்தப்பட்டு விட்டது என்று தங்கள் ஆதங்கத்தை வெளியிட்டார்கள்.

முக்கியமாகக் கம்ப்யூட்டர் வளர்ச்சி தடை பட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் இந்த அரசு 12 சதவிகிதமாக விதிக்கப்பட்டிருந்த வரியை நான்கு சதவிகிதமாகக் குறைப்பதென்று முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனி கம்ப்யூட்டர்களுக்கும், அதன் உதிரி பாகங்களுக்கும் 4 சதவிகிதம் மட்டும் வரி வசூலிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைப்போலவே -

ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் தற்போது நல்ல பொழுதுபோக்கும் சாதனமாக விளங்கிவரும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கும் அதன் உதிரி பாகங்களுக்கும் 12 சதவிகிதமாக விதிக்கப்பட்டிருந்த வரி, நான்கு சதவிகிதமாகக் குறைக்கப்படுகின்றது.

எழுதுகிற பேப்பர், அச்சடிக்கின்ற பேப்பர். கம்ப்யூட்டருக்கு உபயோகப்படும் பேப்பர் (Printing and Writing Paper) ஆகியவைகளுக்குத் தற்போது 8 சதவிகிதம் என்றிருக்கும் வரியை 4 சதவிகிதமாகக் குறைப்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் வரியைப் பற்றி ரங்கநாதன் ஒரு பெரிய படையையே அழைத்துக் கொண்டு வந்தார். இருந்தாலும் தமிழ்நாடு பிளாஸ்டிக் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று, பால் கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்குகளுக்கு 8 சதவிகித வரி என்றிருப்பதை 4 சதவிகிதமாகக் குறைப்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பொறி கடலைக்குத் தற்போது செய்துள்ள வரி சீர்திருத்தத்திற்குப் பிறகு 12 சதவிகிதம் வரி என்ற அளவிலே இருப்பதாக ஒரு முறையீடு கூறப்பட்டது. இந்தக் கோரிக்கையை ஏற்று இனி பொறி கடலைக்கு 12 சதவிகிதம் வரி என்பதிலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்கப்படுகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிவு செய்யப்படாத பெயருடன் கூடிய சாதாரண பிஸ்கட்டுகளுக்கு வரியை உயர்த்திவிட்டதாக அவர்களிடம் ஒரு சந்தேகம் உள்ளது. அவர்களுக்கு அந்தச் சந்தேகம் தேவையில்லை. பதிவு செய்யப்படாத பெயருடன் கூடிய சாதாரண பிஸ்கட்டுகளுக்கு நான்கு சதவிகித வரிதான் என்பதைத் தெளிவாக்கிட விரும்புகின்றேன்.

சொக்கர், சொன்ன ஒன்று. பருப்பு, மிளகாய் மற்றும் மஞ்சள் ஆகிய பொருட்களுக்கு முழு விற்பனை வரிவிலக்கு அளிக்கப்பட்டதை உறுப்பினர்கள் நன்கறிவீர்கள்.

இதனைத் தொடர்ந்து இந்தப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் மாவுக்கும் வரியைக் குறைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். இந்தக் கோரிக்கையையும் ஏற்று தற்போது நான்கு சதவிகிதம் என்று மாவுக்கு இருக்கும் வரியை, இனி இரண்டு சதவிகிதம் என்ற அளவிற்குக் குறைக்கப்படும்.

## ஆயத்த ஆடைகள் வரிகுறைப்பு

ஆயத்த ஆடைகள் "ரெடிமேட் கார்மென்ட்ஸ்" பேரவைத் தலைவர் மூலமாக வந்த கோரிக்கை - அதாவது ரெடிமேட் கார்மென்ட்ஸ்களுக்குப் புதிய வரிவிதிப்பு முறையிலே உள்ள பிரச்சினைகளை என் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு முடிந்தவரை அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது.

அந்த வகையிலே வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படும் ரெடிமேட் துணிகளுக்கு சி.பாரம் கிடைக்காத பட்சத்தில் பத்து சதவிகிதம் வரி கட்ட வேண்டியிருக்கின்றது என்று அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். வெளி மாநிலங்களுக்கு அனுப்பாமல், தமிழகத்திலேயே விற்கப்படும் துணிகளுக்கு 8 சதவிகிதமாக வரி இருக்கின்றது. இனிமேல், ரெடிமேட் ஆடைகளை நம் மாநிலத்தில் விற்றாலும் சரி, சி.பாரம் பெற்றோ, பெறாமலோ வெளி மாநிலங்களுக்கு அனுப்பி விற்றாலும் சரி, அவர்களுக்கு 4 சதவிகிதம் வரி மட்டுமே செலுத்தினால் போதும் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய், பெட்ரோலியப் பொருட்கள் சங்கத் தலைவரும், முன்னாள் மேலவை உறுப்பினருமான ஏ.ஆர். தாமோதரன் அவர்கள் கொடுத்த மனுவிலே மண்ணெண்ணெய்க்கு லிட்டர் ஒன்றுக்கு 0.9 பைசா - அதாவது ஒரு பைசாவிற்கும் குறைவாக விலை உயர்த்தப்பட்டிருப்பதாக எழுதியிருந்தார்.

எனவே இந்த ஒரு பைசா விலை உயர்வினால்




ஏழை எளிய மக்கள் பாதித்து விடக்கூடாது என்பதற்காக அந்த விலை உயர்வை அரசாங்கமே ஏற்றுக் கொண்டு பொது விநியோகத் திட்டத்தின் கீழ்

## 'தமிழரசு' ஓவியப்போட்டி

**அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி, ஓவியப் போட்டியொன்றை அறிவிப்பதில் 'தமிழரசு' பெருமை கொள்கிறது. அறிஞர் அண்ணா அவர்களின் வண்ண ஓவியம் (Water Colour or Oil Paint ) ஒன்றினைத் 'தமிழரசு' ஏட்டின் அளவில் வரைந்து அனுப்ப வேண்டும். 1.9.96 இதற்கான கடைசித் தேதி. கலைத் தொழில் கல்லூரி மாணவர்கள் (College of Arts and Crafts) தவிர, மற்ற கல்லூரி மாணவ மாணவிகள் எவரும் இதில் பங்கேற்கலாம். தமிழகத்தில் தலைசிறந்த ஓவியர் ஒருவரால், முதலாம், இரண்டாம் பரிசுக்குரிய ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்படும். முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஓவியம் அறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி வெளிவரும் 16.9.96 தமிழரசின் அட்டைப்படமாக வெளியிடப்படும் இரண்டாம் பரிசுக்குரிய ஓவியம், வேறோர் சந்தர்ப்பத்தில் வெளியிடப்படும். தேர்வு பெறும் ஓவியங்களுக்குத் தக்க பரிசு உண்டு. ஓவியம் வரைபவர் புகைப்படம், அவர் கல்லூரியில் பயில்வதற்கான சான்றிதழ் ஆகியவை படத்துடன் இணைக்கப்படவேண்டும்.**

**ஓவியங்களை அனுப்பவேண்டிய முகவரி:**
**ஆசிரியர் 'தமிழரசு' அரசினர் தோட்டம்**
**அண்ணாசாலை, சென்னை 600 002.**

மண்ணெண்ணெயை வழங்கும் போது, விலையை உயர்த்தாமல் தற்போதுள்ள விலைக்கே தரப்படுவதற்கு வழிவகை செய்வதோடு, இவ்வாறு விலை குறைத்துத் தருவதால் நியாயவிலைக் கடைகளுக்கு ஏற்படும் நட்டத்தை அரசாங்கமே மானியமாகத் தருவதென்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

### முழு வரிவிலக்கு !

உணவுப் பொருட்களான பருப்பு, மிளகாய், புளி போன்றவைகளுக்கு முழு வரிவிலக்கு செய்திருப்பதைத் தொடர்ந்து — சொக்கரின் பரிந்துரையைத் தொடர்ந்து பனங்கல்கண்டுக்கும் முழு வரிவிலக்கு செய்யப்படும்.

வரிக்கு உட்படும் விற்பனைத் தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 100 கோடிக்குக் குறைவாக உள்ள நிறுவனங்களுக்குக் கூடுதல் விற்பனை வரி முற்றிலும் நீக்கப்படுகிறது என்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன்.


இதனால் வணிகர்களுக்குள்ள பணிப்பளு மற்றும் வரி விதிப்புப் படிவங்கள் குறைந்து 70,000க்கும் மேற்பட்டவர்கள் பயனடைவார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறேன்.

எனவே நூறு கோடிக்கு மேல் ஆண்டு ஒன்றுக்கு மொத்த வியாபாரம் நடத்தும் நிறுவனங்களுக்குக் கூடுதல் விற்பனை வரி உண்டு. அதன்னியில் ஒரு நிறுவனத்தின் சார்பில் பல ஏஜெண்டுகளைக் கொண்டு நடத்தும் வியாபாரத்தில் 100 கோடிக்கு மேல் மொத்த விற்பனைக் கணக்கு வருமேயானால் அவர்களுக்குக் கூடுதல் விற்பனை வரிவிதிக்க அரசு பரிசீலித்து வருகின்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் திருப்பூர் பனியனுக்கு உள்ள பிரச்சினை பற்றி வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள். இப்பிரச்சினை குறித்து இந்த அரசாங்கம் மிகுந்த கவனத்தோடு பரிசீலித்தது.

தமிழ்நாட்டிலிருந்து மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி ஆகக்கூடிய பனியன்களும் மற்றும் பின்னல் ஆடைகளும் முழுவதும் தற்போது நான்கு சதவிகித மைய விற்பனை வரிக்கு உட்பட்டதாகும். இதனை ஒரு சதவிகிதமாகக் குறைக்க அரசாங்கம் முன்வருவதற்கு சுப்பராயன் மகிழ்வார் என்று கருதுகிறேன். மகிழ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பின்வரும் நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றது. அதாவது -

ஏற்றுமதி ஆகும் மொத்தப் பொருட்களும் பிராஞ்ச் டிரான்ஸ்பார் அல்லது கன்சைமெண்ட் விற்பனையிலே அனுப்பப்படாமல் முழுவதும் மைய விற்பனை வரிக்கு உட்படுத்தப்பட்டதாக அனுப்பப்பட வேண்டும்.




சுப்பராயன் அவர்கள் முழுமையாகக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார். முழுமையாக நிறைவேற்ற முடியாவிட்டாலும், ஒரு சதவிகிதம் அளவிற்கு வரி விதிக்கப்படலாம் என்று இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைவார்கள்.

### பிளஸ் 2 வரை இலவச பஸ் பாஸ்

மற்றொரு வேண்டுகோள் உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வைக்கப்பட்டு, பேராசிரியர் தீரன், பழனிச்சாமி, திருநாவுக்கரசு, எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோராலும் வழி மொழியப்பட்ட ஒன்று. ஆனால் பத்துக் கோடி ரூபாய் அதிகமாகும். பத்தாவது வரையிலே படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் என்று இருந்தது. அதை பிளஸ் 2 வரையில் ஆக்க வேண்டும் என்று உறுப்பினர் ஸ்டாலின் சொல்லி, எதிர்க்கட்சித் தலைவர் வரையிலே வழிமொழிந்திருக்கிற காரணத்தால் மகனுக்காக அல்ல - அவை உறுப்பினர்களுக்காகவும், மாணவர்களுக்காகவும் உங்கள் அத்தனைப் பேர்களுடைய வேண்டுகோளை ஏற்று பிளஸ் 2 வரையிலே இலவச பஸ் பாஸ் மாணவர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்து, இந்த நிதிநிலை அறிக்கை குறித்து நல்ல கருத்துக்களைக் கூறிய உங்கள் அனைவருக்கும், நல்ல ஆக்கப்பூர்வமான கருத்துக்களைச் சொன்ன உங்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# கடல் காகம்



புத்தம் புதிதாய் விடியல். அமைதியான கடலலைகளி டையே தனது பொன்னிறக் கதிர்களை விரித்து எழுகின்ற கதிரவன்.

கரையிலிருந்து ஒரு கல் தொலைவில் மீன்பிடி படகுகள் அலைகளைக் கிழித்துக் கொண்டு முன்னேறுகின்றன. இது ஆயிரக்கணக்கான கடல் காகங்கள் காலை உணவு அருந்தும் நேரம். ஒரு பரபரப் பான காலைப் பொழுது.

கடற்கரையைத் தாண்டி, சற்றுதள்ளி மிதக்கும் படகையும் கடந்து ஜோனதன் லிவிங்ஸ்டன் என்ற பேர்கொண்ட கடல்காகம் உயர உயரப் பறந்து கொண்டிருக் கிறது. நூறடி உயரத்துக்கு வானத்தை நோக்கி காற்றின் மெல்லிய ஸ்பரிசம் தனது முகத்தில் தழுவப் பறந்து கொண்டிருக்கிறது.

அதன் காலடியில் நெடுங் கடல். அது, தன்னுடைய பார் வையைக் கூராக்கிக் கொண்டு, மூச்சடக்கி ஒரு நீள் வட்ட மடித்தது. அப்போது அதன் சிறகுகள் சிலிர்த்து தட்டுத் தடுமாறி விழுந்தது.

ஜோனதன் லிவிங்ஸ்டன் கடற்காகமோ சாமானியப் பறவையல்ல.

மீண்டும் மீண்டும் வானில் எகிறி மெல்ல மெல்லத் தட்டுத் தடுமாறி வட்டமடிக்கும்.

பெரும்பாலானகடற்காகங் கள் பறக்கும் வித்தையில் உள்ள சின்னஞ்சிறிய, நுணுக்கங்களை உண்மைகளைக்கூட அறிய ஆர்வமற்றவை. அவைகளுக்கு கரையிலிருந்து புறப்பட்டுக் இரையைத் தேடித் திரும்ப மட்டும்தான் தெரியும்.

ஜோனதன் லிவிங்ஸ்டன் கடற்காகம் உணவுக்காகப் பறப் பதைவிட, பறக்கும் வித்தையில் உள்ள சிறப்பை அறிந்திடவே மிகவும் விரும்பியது. பறப்பதையே ஒரு பயிற்சியாக– சோதனையாகச் செய்வதில் ஆர்வம் காட்டியது. அப்பறவை யின் இந்தச் செயலில் அதன் பெற்றோர்களுக்குக் கூட விருப் பம் இல்லை.

''மற்ற பறவைகளைப் போல் இல்லாமல், நீ மட்டும் ஏன் இப்படி கஷ்டப்பட்டுப் பறக்க வேண்டும். நீ வரவர சரியாகக் கூட சாப்பிடுவ தில்லை. அதனால் உன் உடம்பு எலும்பும் தோலுமாக இளைத்து விட்டது'' என்று ஒரு முறை ஜோனதனின் தாய் வருத்தத் தோடு கேட்டே விட்டது.

எலும்பாய், ஒல்லி யாய் இளைத்துப் போவதைப் பற்றி நான் கவலைப்பட வில்லையம்மா. நான் காற்றில் வானவெளியில் ஓயாமல் பறக்க

**கதையைப்பற்றி...**

ஆசிரியர் ரிச்சர்டு பக் என்பவர் எழுதிய 'ஜோனதன் லிவிங்ஸ்டன் கடற்காகம்' என்ற இந்த நூலைப்பற்றி, ரே பிராட்பரி என்பவர் சொன்ன கருத்தை இங்கு நினைவு கூர்வது பொருத்தமாக இருக்கும்.

எதற்கும் அசைந்து கொடுக்காத 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அசாதரணமான ஓர் அனுபவத்தை இந்த நூல் மூலமாக பகிர்ந்து கொண் டிருக்கிறார்கள். ஆசிரியர் பக் இரண்டு வேலைகள் செய்துள்ளார். நான் பறப்பதற்கு எனக்காக ஓர் வானவூர்தியும், என்றும் மாறா இளமையும் எனக்குக் கொடுத்துள்ளார்.

வேண்டும். பறக்கும் வித்தையில் என்னென்ன புதிதாய் செய்ய முடியும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதைப் பற்றி மேலும் மேலும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற வெறி என்னுள் இருக்கிறதம்மா'' என்று ஜோனதன் கடற்காகம் பதில் சொன்னது.

அப்பறவையின் தந்தை சொன்னது. 'மகனே! குளிர் காலம் வெகுதொலைவில் இல்லை, படகுகளின்எண்ணிக்கை கூட குறைந்துவிட்டதைப்பார்த்தாயா? கொஞ்ச நாளில் நீரின் மேல் மட்டத்திலிருக்கும் மீன்கள் கூட ஆழ்கடலுக்குப் போகப் போகின்றன என்பது உனக்குத் தெரியாதா?

நீ இன்னும் படித்து தெரிந்துத் கொள்ள வேண்டுமென்று சொல்கிறாயே, நீ பறப்பதும் உயரப்பறந்து கர்ணம் அடிப்பதும் கண்ணுக்குப் பார்க்க நல்லா இருக்குமே தவிர அதெல்லாம் சாப்பாட்டுக்கு ஆகாது. நாம் பறப்பது, வயிற்றுப்பாட்டுக்கும், இரை தேடுவதற்காகவும் என்பதை மறந்துவிடாதே'' என்று அறிவுரை செய்தது.

ஜோனதன் தந்தையின் சொல்லை மதித்து, மற்ற பறவைகளைப் போலவே ஒன்றையொன்று கிறீச்சிட்டுச் சண்டை போடுவதும், இரைக்காக அடித்துக் கொள்வதும், மீனைத் தேடி அலைவதுமாகக் கொஞ்சநாள் இருந்து பார்த்தது. ஆனால் அதன் மனம் அதில் லயிக்கவில்லை.

'' அவைகளிலெல்லாம் எந்த அர்த்தமும் இல்லை; நான் என் நேரத்தை முழுக்க முழுக்கப் பறப்பதிலும், பறப்பதில் உள்ள புதுமைகளையும் கற்றுக் கொள்வேன்'' என்று மனதுக்குள் தீர்மானித்தது.

அதன்பின், இன்னும் உற்சாகத்துடன் தொலைதூரம் பறக்க ஆரம்பித்தது. பசி, புதியன கற்றுக் கொள்ளல், அதிலுள்ள ஆனந்தம், இதுதான் ஜோனதன் கடற்காகத்தின் வாழ்க்கை ஆனது.



***... இன்னும் உற் சாகத்துடன் தொலைதூரம் பறக்க ஆரம்பித்தது. பசி, புதியனகற்றுக்கொள்ளல், அதிலுள்ள ஆனந்தம், இது தான் ஜோனதன் கடற் காகத்தின் வாழ்க்கை ஆனது...***

பறக்கின்ற கலையில் மற்ற பறவைகளைவிட மிகஅதிவேகத்தில் பறந்து சாதனை செய்தது.

ஒரு நாள் காற்றிலும் கடுகிச் செல்லும் வேகத்தில் பறக்கும் போது, ஜோனதன் தடுமாறி கடலில் வந்து விழுந்தது. தோல்வியின் கனம் தண்ணீரின் அடிமட்டத்துக்கு இழுத்தது. உண்மையிலேயே அந்த தோல்வி தன் உயிரை குடித்து விடுமோ என்று கூட நினைத்தது.

ஆனால், ஒரு அசரீரியைப் போல், ஒரு குரல் அதனுள் அழுத்தமாக ஒலித்ததை அதனால் நன்றாகக் கேட்க முடிந்தது.

''நான் ஒரு கடற்காகம், நான் இயற்கையால் கட்டுப்படுத்தப்பட்டவன். பறப்பதில் அதிகமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் எனக்கு அதிக மூளைத்திறன் வேண்டும். நான் அதிவேகத்தில் பறக்க வேண்டுமென்றால் எனக்கு வல்லூறுகளைப் போன்ற சிறிய இறக்கைகள் அல்லவா இருந்திருக்க வேண்டும். மீன் உணவுக்குப் பதிலாக எலி உணவு அல்லவா சாப்பிட வேண்டும். உண்மைதான். என் தந்தை சொன்னது சரிதான். நான்தான் என் முட்டாள் தனத்தை மறந்துவிட்டேன். நான் ஒரு சாதாரண பறவையைப்போல என்னுடைய கடற்காக கூட்டத்தில் ஒன்றாக வாழவேண்டும்.

இனி எந்தச் சவாலும் இல்லை. அதனால் எந்தத் தோல்வியும் இல்லை. அது போன்ற எந்த எண்ணமும் இல்லை. அதனால் இரவில் பறப்பதும் இல்லை என்ற முடிவுக்கு வந்தது.

ஒருமுறை இறக்கைகளை உதறிக்கொண்டது. கொஞ்ச நேரம் முன் அதுபோட்ட தீர்மானம், மெதுவாகக் கலைந்துப் போனது.

இப்படிப் பறக்கக்கூடாது என்று, தான் போட்ட முந்தைய தீர்மானங்களை எல்லாம் மறந்தது. அவையெல்லாம் பாமரப் பறவைகளுக்குத்தானே தவிர எனக்கல்ல. சாதனையின்

விளிம்பைத்தொட்டவர்களுக்கு இந்தத் தீர்மானங்கள் எல்லாம் வேண்டியதில்லை. மறுபடியும் உற்சாகமாகப் பயிற்சியைத் தொடங்கிவிட்டது. ஆயிரம் அடி, இரண்டாயிரம் அடி, ஐயாயிரம் அடி உயரம், அதே போல் வேகத்தையும் மேலும் மேலும் கூட்டியது.

நம்மை நாமே அறியாமை யிலிருந்து மேலே தூக்கிக் கொள்ள முடியும். நம்மிடம் உள்ள தனித் தன்மையை நாமே உணர முடியும். நாம் சாதனை படைக்கவே படைக்கப்பட்ட வர்கள். திறமை கொண்டவர்கள் அறிவாக்கம் உள்ளவர்கள் என்பதை நாம் உணரமுடியும்.

நாம் சுதந்திரமானவர்கள்.

நம்மால் பறக்கக் கற்றுக் கொள்ள முடியும் என்று எண்ணியது.

காலம் உருண்டோடியது. ஒரு நாள் கடற்காகங்கள் தன்னு டைய கூட்டத்தின் பஞ்சாயத் தைக் கூட்டின.

''ஜோனதன் லிவிங்ஸ்டன் கடற்காக்கையே! கூட்டத்தில் நடுவே வா!" என்று ஒரு முதிய காகம் உரத்தக் குரலில் அழைத்தது. பொதுவாக இது போன்ற சம்பவங்கள் எப்போ தாவதுதான் நடக்கும். யாருக் காவது மிகப்பெரிய மரியாதை கொடுக்க இருக்கும் போது அல்லது தண்டிக்கும்போது இந்த பஞ்சாயத்து நடக்கும் என்பது கூட்டத்தின் மரபு.

''இன்று காலையில், நாம் உயரப் பறந்து சாதனை புரிந் ததை இவர்கள் பார்த்திருப் பார்கள் போலிருக்கிறது. அதைப் பாராட்டுவதற்காகத் தான் நம்மை அழைக்கிறார்கள் என்று ஜோனதன் மகிழ்ச்சி பொங்க கம்பீரமாக கூட்டத்தின் நடுவில் வந்தது.

''ஜோனதன் கடற்காக்கையே இந்தப் பஞ்சாயத்தார் முன்னால் நீ தண்டிக்கப்படுகிறாய்'' என்று கரகரப்பான முரட்டுக் குரல் ஜோனதனைப் பார்த்து உறுமியது.

இதைக் கேட்டவுடன், ஜோனதனின் கால்கள் பலவீன மாகின. நடுங்கின. நிற்ககூட



***...நம்மை நாமே அறியாமை யிலிருந்து மேலே தூக்கிக் கொள்ள முடியும். நம் மிடம் உள்ள தனித் தன்மையை நாமே உணர முடியும். நாம் சாதனை படைக்கவே படைக்கப் பட்டவர்கள்...***


முடியவில்லை. ஏதோ ஒரு படகின் மீது மோதி விட்டதைப் போல ஒரு அபாயத்தை உணர்ந்தது. "தண்டனையா எனக்கா? இவர்கள் தவறிழைக் கிறார்கள். இது நடக்கவே நடக்காது. நான் செய்த சாதனைக்கா இந்தத் தண்டனை? அவர்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை." மனசுக்குள் முனகியது.

''பொறுப்பில்லாமல் கடல்காகச் சமுதாயத்தின் மரபையும், கண்ணியத்தையும் மீறியதற்காகத்தான் இந்தத் தண்டனை'' என்று முதிய காகத்தின் குரல் கணீரென ஒலித்தது.

இப்படி அவமதிக்கப்பட்ட பறவைகள், ஜாதிக்கட்டுப்பாடு செய்யப்பட்டு விலக்கி வைக்கப் படும். அவை தொலைவில் உள்ள தனிமையான ஒரு குன்றில் வாழ வேண்டும்.

பொதுவாக, சமுதாயத்தால் அவமதிக்கப்பட்ட கடற்காகங்கள் ஒருபோதும் எதிர்த்துப் பேசுவதில்லை. ஆனால், ஜோனதன் தைரிய மாகத் தனது குரலை எதிர்த்து ஒலித்தது.

''எனது சகோதரர்களே! பொறுப்பில்லாதவன் நானா? யார் அதிகமான பொறுப்போடு இருக்கிறீர்கள். ஆயிரக்கணக் கான ஆண்டுகள் மீன் மண்டைக்காக அலைந்திருக் கிறோம். ஆனால், வாழ்க் கைக்கு ஒரு புதிய அர்த்தத்தை, ஒரு புதிய பரிமாணத்தை நாம் வாழ்வதற்கான காரணத்தை; நாம் கற்றுக்கொள்ள, தெரிந்து கொள்ள, இன்னும் சதந்திரமாக வாழ இப்போது கண்டுபிடித் திருக்கிறேன். அவைகளை உங் களுக்கும் சொல்ல வேண்டும் எனக்கு ஒரேயொரு வாய்ப்புத் தாருங்கள். என்று வேண்டியது;



கல்லாக மாறிவிட்டது அந்தக் கூட்டம். ஜோனதனின் கோரிக்கையைக் கேட்க மறுத்துவிட்டன. ''உன்னுடன் நம்முடைய உறவு இன்றோடு அறுந்துவிட்டது; நீ போகலாம்'' என்று இறுதியாகச் சொல்லி விட்டு கூட்டம் கலைந்தது.

ஜோனதன் ஒரு நிமிடம் மவுனமாக இருந்துவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றது. தொலைவில் உள்ள அந்தத் தனிமையான குன்றுக்குச் சென்றுவிட்டது. அங்கேயே ஒற்றைப் பறவையாகத் தன்னந்தனியே காலத்தைக் கழித்தது.

இப்படியே வருடங்கள் போயின.

ஒருநாள் இரண்டு கடற்காகங்கள் ஜோனதன் இருக்கும் குன்றை நோக்கிப் பறந்து வந்தன. ஜோனதன் பறவைக் கருகில் வந்தமர்ந்தன. 'நாங்கள் உங்கள் கூட்டத்திலிருந்து வந்திருக்கிறோம். உங்கள் சகோதரர்கள். உங்களை எங்களிடம் அழைத்துப் போக வந்திருக்கிறோம்' என்றன அப்பறவைகள்.

''நான் ஜாதிக்கட்டுப்பாடு செய்யப்பட்டு விலக்கப்பட்டவன். எனக்குச் சமுதாயமே இல்லை'' என்று கடுமையாகச் சொல்லி அந்தப் பறவைகளின் அழைப்பை ஏற்க மறுத்தது.

அது எங்களுக்கும் தெரியும். நீங்கள் கற்றறிந்தவர். உங்களின் படிப்பில் ஒரு கட்டம் முடிந்து விட்டது. அடுத்தது ஆரம்பிக்க நேரம் வந்துவிட்டது. அது உங்களால் தான் முடியும்'' என்றன.

ஒரு நிமிடம் மவுனமாகச் சிந்தித்தது, ஜோனதன். அவைகள் சொல்லுவது சரிதான். வீட்டிற்குப் போவதற்கு இது சரியான நேரம்தான்'' என்று யோசித்தது. ஒரு முறை பெரு மூச்சு விட்டுக் கொண்டது, மறுபடியும் பறக்கத் தொடங்கியது.

அந்த இரண்டு கடற்காகங்களுடன் தனது பழைய இடத்திற்கு வந்திறங்கியது. இப்போது நிறைய மாற்றங்கள், புதுப்புது தோற்றங்கள். புதிய சிந்தனைகள். புதுப்புது கேள்விகள் ஏன், காகங்கள் குறைவாக இருக்கின்றன. மனசுக்குள்ளே கேட்டுக் கொண்டது.



**...ஜோனதன் ஒரு நிமிடம் மவுனமாக இருந்துவிட்டு அவ்விடத்தை விட்டு அகன்றது. தொலைவில் உள்ள அந்தத் தனிமையான குன்றுக்குச் சென்றுவிட்டது. அங்கேயே ஒற்றைப் பறவையாகத் தன்னந் தனியே காலத்தைக் கழித்தது...**

தான் அங்கே இருந்த முந்தைய உலகத்தை நினைத்துப் பார்த்தது. சாப்பாட்டுக்காக ஒன்றோடொன்று சண்டைப் போட்டுக் கொத்திக் கொண்டிருந்ததையும், பறப்பதில் ஆர்வமில்லாமல் இருந்ததையும் அசைபோட்டது. பழைய நினைவு ஒன்று கண்முன்னே வந்தது.

ஒருமுறை ஜோனதனின் பயற்சியாளரான சுல்லிவனிடம் கேட்டது. ''ஏன், நாம் மட்டும் இங்கே வந்திருக்கிறோம். மற்ற பறவைகள் ஏன் வரவில்லை?''

அதற்கு சுல்லிவன் சொன்னது. ''நீ பத்து லட்சம் பறவைகளில் தனி ஒருவன் ஒவ்வொன்றையும் கற்றுக் கொள்ள பல பிறப்புகள் எடுக்க வேண்டும். ஆனால், நீயோ, ஒரு பிறப்பிலேயே எவ்வளவோ கற்றுக் கொண்டுள்ளாய். நீ ஆயிரம் பிறப்பு எடுக்க வேண்டிய அவசியம் இல்லை, பயிற்சிகள் தொடங்கின பல புது நுணுக்கங்களைக் கற்று கொண்டன.


ஒரு அந்தி மயங்கும் மாலை நேரம். ஜோனதன் ஒரு வயதான கடற்காகத்தைச் சந்தித்தது.

''இந்த உலகம் சொர்க்கம் இல்லை அல்லவா? என்று ஒருமுறை அந்த முதிய பறவையிடம் ஜோனதன் கேட்டது. கேட்டவுடன் முதிய பறவை கலகலவெனச் சிரித்தது. பிறகு முதிய காகம் மெதுவாகச் சொன்னது.

'நீ இன்னமும் படித்துக் கொண்டே இருக்கிறாய்!' என்று நிதானமாகச் சொன்னது.

இங்கே என்ன நடக்கிறது? நாமெல்லாம் எங்கே போகிறோம்? சொர்க்கம் என்றொரு இடம் இருக்கிறதா? ஜோனதன் கேள்விகளை அடுக்கியது.

''இல்லை அப்படியொரு இடம் இல்லை' சொர்க்கம் என்பது இடமோ காலமோ அல்ல, அது முழுநிறைவோடு மனநிறைவோடு இருப்பதுதான்.''



''பூர்ணத்துவம் என்பதற்கு எல்லையே இல்லையப்பா. மணிக்கு ஆயிரம், லட்சம், 10 லட்சம் மைல், ஏன் ஒளியை விட வேகமாகக் கூட பறக்கலாம். ஏனெனில் எல்லாமே ஒரு வரையறைக்குட்பட்டது. ஆனால் பூர்ணத்துவத்துக்கு மட்டும் எல்லையோ வரையறையோ இல்லை. என்று சொல்லிவிட்டுக் கண்சிமிட்டும் வேகத்தில் பறந்து தொலை தூரம் மறைந்து வந்து, மறுபடியும் மறுபடியும் பறந்து வந்து நொடிக்குள் திரும்பவந்து ஒரு ஜால வேடிக்கை காட்டியது அந்த முதிய பறவை.

ஜோனதன் உண்மையிலேயே அசந்து போனது; சொர்க்கத்தைப் பற்றி கேட்பதற்கே மறந்துவிட்டது. ''உங்களால் எப்படி இதுபோல கண்ணிமைக்கும் நேரத்துக்குள் பறக்க முடிகிறது?'' என்று கேட்க ஆரம்பித்தது.

அதற்கு முதிய பறவை அமைதியாய்,

''எங்கும் எந்நேரமும் நான் விரும்பியபடி போகமுடியும்; நான் என்ன நினைக்கிறேனோ அதைச் செய்ய முடியும்'' என்றது.

''பூர்ணத்துவத்துக்காகப் பறக்கிற பறவை எங்கும் போகமுடியும், பறக்க வேண்டுமென்பதற்காகப் பூர்ணத்துவத்தை இழப்பவர்கள் எங்கேயுமே போகமுடியாது.'' நான் அதைக் கற்றுக்கொள்ள வேண்டும். நான் அதைச் செய்து பார்க்க வேண்டும் சொல்லுங்கள்?'' ஜோனதன் ம்.வா. உன் எண்ணம் போல் நீ நினைக்கும் இடத்துக்குப் பறக்க வேண்டுமென நினைக்கிறாயோ அதை அடைந்துவிட்டதாகவே மனதில் கொள்ள வேண்டும்.''



**...பூர்ணத்துவத்துக்காகப் பறக்கிற பறவை எங்கும் போகமுடியும், பறக்க வேண்டு மென்பதற்காகப் பூர்ணத்து வத்தை இழப்பவர்கள் எங்கே யுமே போகமுடியாது...**

ஜோனதன் ஒவ்வொரு நாளும் கடுமையாக முயற்சி செய்தது. காலை உதயத்திற்கு முன் தொடங்கி நள்ளிரவுக்கு பின்வரை பயிற்சி மேற்கொண்டது.

என்ன ஆச்சரியம்!

ஜோனதன் கண்களைத் திறந்து பார்த்தது. தனியே முற்றிலும் புதியதொரு கடற்கரையில் அம்முதிய காகத்துடன் நின்றது. மரங்கள் குனிந்து தண்ணீரின் விளிம்பைத் தடவுகின்றன. தலைக்குமேலே இரண்டு மஞ்சள் குரியன்கள் தகதகத்துக் கொண்டிருந்தன! எங்கும் ஒளி வெள்ளம்!

அதிர்ச்சியிலிருந்து மீளாத ஜோனதன் முற்றிலும் புதிய குழலைக்கண்டு திகைத்தபடி கேட்டது.

''நாம் இப்போது எங்கே இருக்கிறோம்?''

நாம் வேறொரு கிரகத்தில் இருக்கிறோம். இங்கே பசுமையான வானமும், அதில் சூரியனுக்கு இரண்டு தங்க நட்சத்திரங்களும் உண்டு' என்றது முதிய பறவை.

காகங்கள் இரண்டும் பூமிக்கு திரும்பின, நன்றாக இருட்டிவிட்டது. மற்ற பறவைகள் எல்லாம் இவ்வளவு நேரம் காணாமல் போய் மீண்டும் வந்ததைக் கண்டு ஒரு பயங் கலந்த மரியாதையுடன் நடந்து கொண்டன.

இருபறவைகளும் மரியாதையை ஏற்றுக் கொண்டன.

''நான் உன்னைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன் ஜோன்'' என்றது சுல்லிவன்.''

அந்த முதிய பறவை சொன்னது, ''உனக்கு விருப்பமிருந்தால் காலத்தோடும் பயிற்சி செய்யலாம் இறந்தகாலம், எதிர்காலம் எல்லாவற்றுடனும் பயணம் செய்யலாம். அதற்குமேல் இன்னும் ஒரு கடினமான ஆனால் மிகமகிழ்ச்சியான ஒன்றையும் நீ செய்யலாம். அது தான், இரக்கம் அன்பு இவைகளின் அர்த்தம் புரிகிற வரை தொடர்ந்து பறக்கலாம்.

ஒரு மாதம் கடந்தது.

அந்த முதிய பறவை அமைதியாக ''எந்தக் காலத்திலும் நீ பறப்பதை நிறுத்திவிடக்கூடாது பூர்ணமான, கண்ணுக்குப் புலப்படாத வாழ்க்கைத் தத்துவத்தைப் புரிந்து கொள்ளும் வரை பயிற்சியை விட்டு விடக்கூடாது. கடைசியாய் ''ஜோனதன், நீ அன்பைப் பரப்பிக்கொண்டே யிருக்க வேண்டும்'' என்று சொல்லி விட்டு அந்த முதிய பறவை விர்ரென்று பறந்துவிட்டது.

காலம் கனியக் கனிய ஜோனதன் தனக்குள்ளேயே மீண்டும் மீண்டும் தான் எங்கிருந்து வந்தோம் என்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விட்டது. தான் கற்றது பத்தில், நூறில் ஒருபங்கு தானிருக்கும். ஆனால் முழுமையும் கற்பதற்கு எத்தனைப் பிறப்பெடுக்க வேண்டுமோ என்று நினைத்துப் பார்த்தது.

'உண்மையை பறவைக் கூட்டத்தின் முன்பு தைரியமாகச் சொன்னால் ஒருவேளை சமுதாயத்திலிருந்து நீங்கள் ஒதுக்கிக் கூட வைக்கப்படலாம்' ஜோனதன் கருணை, அன்பு போன்றவற்றைப் பற்றி பயிற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டது. தன்னுடைய பழைய தனிமை வாழ்க்கைக்குப் பதிலாகத் தான் கற்றதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் ஒரு ஆசிரியர் ஆக வேண்டும் என்று விரும்பியது.

தான் கண்ட உண்மையை வெளிப்படுத்த ஒரேயொரு தடவை வாய்ப்புக் கேட்ட ஒரு கடற்காகத்தின் விருப்பத்தைச் சொல்லுவதே தன்னுடைய அன்பை வெளிப்படுத்தும் வழி என்பதைத் தன்னுடைய பாதையாக்கிக் கொண்டது.

''ஜோன், நீ ஒரு சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவன்தானே? உன்னுடைய பழைய தலைமுறையைச் சேர்ந்த கடற்காகத்தில் ஏதாவதொன்று உன்வார்த்தையை இப்போது கேட்காதா? தொலைதூரத்தைக் காணும் கடற்காகமே மிக உயரத்துக்குப் பறக்கும். இது உனக்குத் தெரி



**...தன்னுடைய பழைய தனிமை வாழ்க்கைக்குப் பதிலாகத் தான் கற்றதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்லும் ஒரு ஆசிரியர் ஆக வேண்டும் என்று விரும்பியது...**

யாததல்ல. ஜோன்'' என்றது சுல்லிவன்.

''நீ எங்கேயிருந்து வந்தாயோ அங்குள்ள காகங்கள் ஒன்றையொன்று அடித்துக் கொண்டும் வக்கரித்துக் கொண்டும் தரையில் கிடக்கின்றன. அவை சொர்க்கத்திலிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. அவர்கள் எங்கே இருக்கிறார்களோ அங்கேயிருந்தே அவர்களுக்கும் சொர்க்கத்தைக் காட்டுவதாக நீ சொல்கிறாய். அவை, அவைகளின் இறக்கையின் விளிம்பைக் கூட பார்க்கமுடியாதவை. அதனால் நீ இங்கேயே தங்கி இளம் கடற்காகங்களுக்கு உதவு, பறக்கும் கலையைக் கற்றுத் தரவேண்டும். நீ சொல்லுவதைப் புரிந்துகொள்ளும் நிலையில் அவர்களும் உள்ளார்கள்.''

சுல்லிவனின் அறிவுரையை மதித்து ஜோனதன் அங்கேயே தங்கிவிட்டது. புதிய பறவைகளுக்குக் கற்றுக் கொடுத்தது.

காலம் ஓடியது. சூழ்நிலைகள் மாறின.

ஒருநாள் சுல்லிவனிடம் ''இங்குள்ளவர்கள் நன்றாகவே கற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்களே புதியவர்களுக்கு உதவுவார்கள் என் பணி முடிந்து விட்டது. நான் இங்கிருந்து போக வேண்டும்'' என்றது ஜோனதன்.

அதற்கு சுல்லிவன், ''நான் உன்னை இழந்துவிடுவேனோ என நினைக்கிறேன்'' என்றது.

''முட்டாளைப் போல் பேசாதே. நாம் தினமும் என்ன பயிற்சி செய்கிறோம்? நம்முடைய நட்பு காலத்தையும் தேசத்தையும் நம்பியிருந்தால், முடிவில் காலத்தையும் தேசத்தையும் நாம் வெற்றி கொள்ளுகிற ஒரு நிலையில் நம் நட்பும் சகோதரத்துவமும் அழிந்து விடாதா? சுல்லிவன் சிரித்துக் கொண்டே, ''ஆயிரம் மைல் தூரத்தை எப்படிப் பார்ப்பது என்பதை இங்கே எவருக்காவது காட்டமுடியும் என்றால் அது இந்த ஜோனதன் லிவிங்ஸ்டன் ஒருவனாகத்தான் இருக்க முடியும், போய்வா, எனது இனிய நண்பனே!'' என்று

விடை கொடுத்தனுப்பியது. மவுனத்தால் தள்ளாடியது.


''மீண்டும் சந்திப்போம் வருகிறேன் சுல்லி'' என்று ஜோனதன் தான் வந்த வேலை முடிந்துவிட்டது என்ற பெருமையை சுமந்தபடி பறந்தது.

ஃபிரெட்சர் லிண்ட் கடற்காகம் இளமையானது துடிப்புடையது ''எந்த ஒரு சமுதாயத்தாலும் எந்த ஒரு பறவைக்கும் ஜோனதனுக்கு இழைத்த அநீதி, அவமானத்தைப்போல் இழைக்கப்படக் கூடாது.'

தெரிந்துகொள்ள எவ்வளவோ இன்னும் இருக்கிறது. ஒரு கொசுவைப் போல ஒரு இடத்தையே சுற்றிச் சுற்றி வருவதில் என்ன இருக்கிறது. பழைமைவாதிகளின் எண்ணத்தைப்பற்றி எனக்கு கவலையில்லை' நான் நிறையக் கற்றுக் கொள்ளப் போகிறேன். நான் பறப்பது என்ன என்பதை உலகிற்குக் காட்டப் போகிறேன்' நான் மாறுபட்டவனாக இருப்பேன். அவர்கள் சொல்லுவதையே விரும்பி என்னைக் கட்டுப்படுத்திவரமுயற்சித்தால் நான் அவர்களுக்காக வருத்தப் படுகிறேன்.'' என்று ஃபிரெட்சர் லிண்ட் கடற்காகம் எண்ணியது.

''பறக்க ஆசைப்படுகிறேன். நீ பறக்க விரும்புகிறாயல்லவா, அந்தப் பறவைக் கூட்டத்தை மன்னித்துவிடு. அவைகளிடம் போ. அவர்களுக்கும் பறக்கக் கற்றுக் கொடு'' என்று ஃபிரெட்சர் லிண்ட் பறவை மனதுக்குள் முடிவு செய்தது.

ஜோனதன் இருக்கும் தனிமையைத் தேடி, நிறையப் பறவைகள் போகத் தொடங்கின. அவைகளுக்கெல்லாம் பறக்கும்





**...ஒருமுறை சொல்லித் தரும்போது, ஒரு பறவையின் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தது. 'உடம்பு என்பது உடம்பே அல்ல. அது முழுக்கமுழுக்கஎண்ணமே' என்று புதுமையானபதிலை அறிவித்தது...**

வித்தையைக் கற்றுக் கொடுத்தது. ஃபிரெட்சர் எனும் பறவைக்குப் பறக்கும் கலையை, அதன் நுணுக்கத்தைக் கற்றுக் கொடுத்து அதன் மூலம் மற்ற பறவைகளையும் கற்கவைத்தது. அப்படி ஒருமுறை சொல்லித் தரும்போது, ஒரு பறவையின் சந்தேகத்தைத் தீர்த்துவைத்தது. 'உடம்பு என்பது உடம்பே அல்ல. அது முழுக்க முழுக்க எண்ணமே' என்று புதுமையான பதிலை அறிவித்தது.

பறவைகள் புதிது புதிதாக வரத் தொடங்கி அவைகளும் பயிற்சி பெறத் தொடங்கி விட்டன. தான் எந்தச் செயலுக்காக இந்த உலகத்துக்கு வந்ததோ அது முடிந்து விட்டது; எனவே, நாம் போய்விட வேண்டும் என்று முடிவு செய்தது.

ஒருநாள் ஃபிரெட்சர் மற்றும் அதனுடன் இருந்த பறவைகளிடம் 'என் பணி முடிந்துவிட்டது. இதை நீங்கள் தொடரவேண்டும். எல்லா பறவைகளுக்கும் சொல்லித் தரவேண்டும் என்று சொன்னது.

''நான் ஒரு சாதாரண கடற்காகம்தான். என்னைக் கடவுள் என்று வதந்திகளைப் பரப்பி விடாதீர்கள். நான் கடவுள் அல்ல. நான் சாதாரண கடற்காகமே. நான் ஒரு சாமானிய ஜோனதன் பறவையாக பறக்க விரும்புகிறேன்'' என்று சொல்லிவிட்டு வெற்றிடத்தில் மறைந்தது. ஃபிரெட்சர் எனும் கடற்காகம் மற்ற இளம் காகங்களுக்கு ஜோனதன் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்தது. அது சொன்னது, ''கற்பதற்கு எல்லை ஏதுமில்லை.''

★★★★★

அரசின்சார்பில் செய்திமக்கள் தொடர்புத் துறை மூலம் மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட்டு வருகின்ற அரசுப் பொருட் காட்சிகளில் சில வகைச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரைகூறி ஆணையிட்டுள்ளார்.

அதன் விவ்ரம் வருமாறு: அரசுத் துறை அரங்குகளில் புகைப்படங்கள் பெரு மளவில் இடம் பெறுவதைத்தவிர்த்து, மக்களுக்குப் புரிகின்ற வகையில் அந்தந்தத் துறை தொடர்பான செயல் விளக்கங்கள், திட்டங்களின் மாதிரி வடிவங்கள், இயங்கும் மாதிரி வடிவங்கள் இடம் பெறும். அரசின் சாதனைகள், மக்கள் அறிய வேண்டிய திட்டங்கள், அத்திட்டங்களின் மூலம் மக்கள் பயன்பெற வேண்டித் தொடர்பு கொள்ளும் வழிமுறைகள் போன்றவை கருத்துப் படங்களாய் (கார்ட்டூன்) சித்திரிக்கப்படும். குறைந்த செலவில் அச்சிடப்பட்ட, படங்கள் நிறைந்த சிறு கையேடுகள் இலவசமாக வழங்கப்படும்.

எடுத்துக்காட்டாக வேளாண்மைத் துறையெனில், அந்தந்த மாவட்டப் பகுதி வேளாண் மக்கள் அறிய வேண்டிய அரசின் திட்டங்கள், அரசு ஆற்றிவரும் பணிகள், வேளாண் மக்களுக்கான அரசின் உதவிகள் போன்றவற்றுடன் வேளாண்மை செய்வதற்கான நவீன செயல்முறைகள் போன்றவையும் மாதிரி வடிவங்கள் மூலம் எடுத்துக்காட்டப்படும். வீடியோ படங்கள், பொம்மலாட்டம் போன்ற விருப்பமான வழிமுறைகளும் இதற்கெனப் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

போக்குவரத்துத் துறை, அரங்கு எனில், சாலைவிதிகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம், கடைப்பிடிக் காமையால் ஏற்படும் விரும்பத்த காத விளைவுகள், எளிய முதல் உதவி முறைகள் போன்றவையும், பொதுச் சொத்துக்களை நாசப்படுத்துவ தால் ஏற்படும் பாதிப்புகள், போக்குவரத்திற்குத்தடை ஏற் படுத்துவதால் ஏற்படும் இன்னல்கள் போன்ற மக்களுக்கு அறிவுறுத்த வேண்டிய கருத்துக் களும் எடுத்துக்காட்டப்படும்.

பொருட்காட்சியில் அமையும் அரசுத்துறையின் அரங்குகளிலும், பொருட்காட்சி வளாகத்திலும், கட்-அவுட், விருப்பம் மீறிய விளம்பரங்கள், ஆடம்பர அலங்காரங்கள் போன்றவை அனைத்தும் இடம்பெறாமல் தவிர்க்கப்படும்.

## பாவேந்தர் பாரதிதாசன் விருது

**1996** ஆம் ஆண்டுக்குரிய பாவேந்தர் பாரதிதாசன் விருதினை நாடறிந்த நற்றமிழ்க் கவிஞர் வைரமுத்து அவர்களுக்கு வழங்கிச் சிறப்பிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்விருதுக்கான பரிசுத் தொகையினை ரூ. 10,000/- விருந்து ரூ. 20,000/- ஆக இந்த ஆண்டிலிருந்து அரசு உயர்த்தியுள்ளது. 1978 முதல் இவ்விருது, சிறந்த தமிழ்க் கவிஞருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

# செய்திச் சாரம்

## தமிழில் பெயர்ப்பலகை

**தொ**ழிற்சாலைகள், தொழில் வணிக நிறுவனங்கள் மற்றும் உணவகங்கள் முதலியன தங்களது நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளைத் தமிழிலேயே எழுதி வைக்கவேண்டும் என்பது அரசின் விருப்பம் ஆகும். ஒவ்வொரு நிறுவனமும் பெயர்ப் பலகைகளைச் சீர்திருத்தப்பட்ட தமிழ்ச் சொற்களில்தான் வைக்க வேண்டும். பிற மொழிகள் உபயோகப்படுத்துவதானால், முதலில் பளிச்சென்று தெரிகின்ற முறையில் பெரிய எழுத்தில் தமிழில்தான் வைக்க வேண்டும். அதன்பின், ஆங்கிலம் மற்றும் பிற விருப்பப்பட்ட மொழிகள் தமிழ் எழுத்துக்களைவிட சிறிய அளவில் எழுதி வைக்கவேண்டும்.

இந்த அரசின் மேற்கூறிய கொள்கையின் முக்கியத்துவம் குறித்து அனைத்துத் தொழிலதிபர்கள் / வேலை அளிப்போர் இந்த அரசின் வேண்டு கோளை ஏற்று இது குறித்துத் தங்களது முழு ஒத்துழைப்பை ஓராண்டிற்குள் நிறைவேற்றித் தருவார்கள் என இந்த அரசு நம்புகிறது.

## நீர்வள ஆதாரம்: நிபுணர் குழு

தமிழ்நாட்டில் நீர்வள ஆதாரங்கள் தொகுப்புத் திட்டம் 1140 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலக வங்கி உதவியுடன் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பகுதிகளுக்கு ஆலோசகர்களை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாசன மேம்பாடு, பாசன இயக்கமும் பராமரிப்பும், பாசன அமைப்பு முறையை நிர்மானித்துக் கட்டுதல், சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்காவண்ணம் பாசன மேம்பாடுகளைச் செய்தல், கணிப்பொறிகளை உபயோகித்துப் பாசன வேளாண்மைத் திட்டங்களை வகுத்தல், பாசன மேம்பாட்டின் அவசியம் பற்றி விவசாயிகளுக்கு விவரம் அறியும் வண்ணம் பயிற்சி அளித்தல்.

இச்சிறப்பு அம்சங்கள் நிறைந்த இத்திட்டத்தைப் பற்றி ஆலோசனை வழங்க இசைவு உள்ளதாக அறிவித்த இஸ்ரேல் நாட்டினைச் சேர்ந்த நிபுணர் குழுவினர் திருவாளர்கள் ஹரோஸ்; அப்பாஸ் அலி பேக் மற்றும் அவர்களோடு இணைந்து செயல்பட இருக்கும் உள்நாட்டு நிபுணர்களும் (திரு. தட்டா; திரு கதிர்வேல்) மாண்புமிகு தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்களைச் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

## செய்திச் சரம்

### இலங்கை மாணவர்களுக்கு...

தமிழ் நாட்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முறையான கடவுச் சீட்டும் அயல்நாட்டின் நுழைவு அனுமதிச் சீட்டும் பெற்றுள்ள இலங்கைத் தமிழ் மாணவர்களும் மற்றும் இலங்கைத் தமிழ் அகதி மாணவர்களும் சேர்ந்து பயில்வதற்கு இடங்களை அனுமதித் துள்ளதுடன் அவர்களின் சேர்க்கை விண்ணப் பங்களைப் பெறுவதற்கான காலக்கெடுவை 15.07.1996-லிருந்து 30 நாட்கள் வரை நீட்டித்தும் அரசு ஆணை வழங்கியுள்ளது என்று கல்லூரிக் கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

### 'தமிழரசில்' சீரிய பணிகள்

'தமிழரசு' இருவார இதழ் மூலமாகத் தமிழக அரசின் திட்டங்கள் பற்றியும், செயல்பாடுகள் பற்றியும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இருவார இதழோடு மட்டுமல்லாமல் சிறந்த செயல் திட்டங்களை முழுமையாக மக்களுக்குக் கொண்டு செல்லும் நோக்கத்துடன் சிறப்பு வெளியீடுகளை ஒவ்வொரு இரு வாரமும் வெளியிடுவதற்குச் செய்தித்துறை முடிவு செய்துள்ளது. அதன் தொடக்கமாக 'வீட்டுக் காய்கறித் தோட்டம்' என்கிற சிறப்பு வெளியீடு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டது. செய்தித்துறை அமைச்சர் முல்லைவேந்தன் வழங்க, அதை முதலமைச்சர் பெற்றுக் கொண்டு வேளாண்மைத் துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்களிடம் வழங்கினார். தொழிலாளர் நலத்துறை அமைச்சர் இரகுமான்கான் அவர்கள் உடன் இருந்தார்.

அரசின் அத்தனைத் திட்டங்கள் பற்றியும், அவற்றைப் பெறுவதற்கான வழிமுறைகள் பற்றியும் விரைவில் அனைவரும் பயன் பெறத்தக்க வகையில் கையேடு ஒன்றையும் செய்தித்துறை வெளியிட ஆவன செய்து வருகிறது.

செய்தித்துறை மூலமாக வெளியிடப்படுகிற தொலைபேசிக் கையேடு 12.7.96 அன்று தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களால் வெளியிடப்பட்டது. முதன் முறையாக இக்கையேடு தமிழில் அனைத்து முக்கியத் துறைகள், துறைத் தலைவர்கள், நாளிதழ்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் தொலை பேசி எண்களைத் தாங்கி வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தக் கையேடு விரைவில் ஆங்கிலத்திலும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும். இந்தச் சிறப்பு வெளியீட்டு நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்களுடன் செய்தித்துறை இயக்குநர் வெ. இறையன்பு, துணை இயக்குநர் இரா. கார்மேகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# 1 முதல் மார்க் மந்திரம்



''ராஜா முதல் மார்க்'' என்று வகுப்பு ஆசிரியர் அறிவித்ததும் மாணவர்கள் அத்தனைப் பேரும் ''கப்சிப்'' என்று ஆகிவிட்டனர்.

கடைசி பெஞ்சில் உட்கார்ந்திருந்த ராஜா துள்ளி எழுந்து ஓடினான். ரேங்க் கார்டை ஆசிரியரிடம் அவன் வாங்கும்போது கைகள் நடுங்கின. சந்தோஷத்தில் அவன் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

பிரம்படி வாங்குவதற்காக மட்டுமே ஆசிரியரிடம் கைநீட்டிய ராஜாவின் கைகளைப் பிடித்து சந்தோஷமாகக் குலுக்கினார் வகுப்பு ஆசிரியர்.

இந்தப் பள்ளிக்கூடத்தில் இதுநாள் வரை அவனுக்கு வழங்கிய பெயர் மக்கு ராஜா.

''என்னடா மக்கு ராஜா பர்ஸ்ட் மார்க்கு வாங்கிவிட்டான்'' என்றனர் பையன்கள்.

இதுநாள் வரை தொடர்ந்து முதல் மார்க் எடுத்து வந்த வசந்தன் ஒடுங்கிப் போய் அமைதியாய் உட்கார்ந்திருந்தான்.

ரேங்க் கார்டை வாங்கிக் கொண்டு திரும்பி நடந்தபோது இறக்கை முளைத்து வானத்தில் பறப்பதைப் போல் உணர்ந்தான் ராஜா.

தாங்கள் காண்பது கனவா நனவா... என்று சில மாணவர்கள் தங்களைத் தாங்களே கிள்ளிப் பார்த்துக்கொண்டனர்.

அன்று மாலைவரை பள்ளிக்கூடத்தில் இதே பேச்சாய் இருந்தது.

மணி அடித்ததும் கையில் ரேங்க் கார்டை எடுத்துக்கொண்டு தலைதெறிக்க வீட்டுக்கு ஓடிவந்தான் ராஜா.

அப்பாவிடம் ரேங்க் கார்டைக் கொடுத்த போது அலட்சியமாக வாங்கிப் பார்த்தார். அவரால் நம்ப முடியவில்லை.

அப்பா, அம்மாவிடம் ரேங்க் கார்டைக் காட்டினார். அம்மா அவனை ஆசையாகத் தழுவி முத்தம் தந்தாள்.

''என் மகன் ராஜா என்னைப்போல் புத்திசாலி'' என்று பெருமையடித்துக் கொண்டார் அப்பா.

''நீங்க யாரை வேணும்னாலும் கேட்டுப்பாருங்க. எம்புள்ள என்னை மாதிரிதான்'' என்றாள் அம்மா.

அதைத் தொடர்ந்து ஒரு அரைமணி நேரத்திற்கு அவர்களுக்குள் ஒரு பொய்ச்சண்டை நடந்தது.

அதற்குள் ராஜா முகம், கைகால் கழுவிக் கொண்டு ரேங்க் கார்டை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

''எங்கே கிளம்பிவிட்டாய்?'' என்று அப்பா கேட்க, அவன் தன் கையிலிருந்த ஒரு வெள்ளைக் காகிதத்தை அவரிடம் கொடுத்தான்.

அவர் அந்தக் காகிதத்தை வாங்கிப் பார்த்தார். அதில் ஏதோ ஒரு முகவரி எழுதி இருந்தது.

''என்ன... இது... யார் இவர்... ?'' என்றார்.

''நான்... முதல் மார்க் எடுக்கக் காரணமே இவர்தான்... இவர் சொல்லிக் கொடுத்த மந்திரம்தான்'' என்றான்.

''விளக்கமாகச் சொல்லுகிறேன் என்னோடு வாருங்கள்'' என்று சொல்லிவிட்டு வெளியே நடந்தான் ராஜா. அப்பா அவனைத் தொடர்ந்தார்.

ராஜா கதவைத் தட்டினான். சற்று நேரத்தில் கதவு திறந்தது. கதவுக்குப் பின்னால்... அதே மந்திரவாதி.. நீளமான தாடி, சடை முடி, கழுத்தில் ருத்ராட்சக் கொட்டை, நெற்றியில் பட்டையான விபூதி, அதே சிரித்த முகம்.

ராஜா சட்டென்று அவர் கால்களில் விழுந்தான். தாடிக்கார மந்திரவாதி அவனைத் தூக்கினார். அவன் அவர் கைகளில் தனது ரேங்க் கார்டைக் கொடுத்தான்.

''சாமி... நீங்கள் சொல்லிக் கொடுத்த மாதிரியே தினமும் அந்த மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே படித்தேன்.. நான்.. முதல் மார்க் எடுத்திருக்கிறேன்..'' என்று படபடவென்று பேசினான்.

''ரொம்ப சந்தோஷம்'' என்று சொன்னபடி அவனை உள்ளே அழைத்துச் சென்றார், அவர்.

ராஜா, சாமிக்குத் தனது அப்பாவை அறிமுகப்படுத்தி வைத்தான். ராஜாவின் அப்பாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.



ராஜாவையும், அவன் அப்பாவையும் வரவேற்று உட்கார வைத்துவிட்டு - அவர்களுக்குச் சாமியே தேநீர் தயாரித்துக் கொடுத்தார்.

ராஜாவின் அப்பா அவருக்கு நன்றி சொன்னார். தாங்கள் பலமுறை முயன்றும், டியூஷன் வைத்தும் கூட அவனைச் சரியாகப் படிக்க வைக்க முடியாததை விளக்கமாகக் கூறினார் அவன் அப்பா.

''என்ன மந்திரம் சொல்லிக் கொடுத்தீர்கள் அவனுக்கு?'' என்று தயங்கியபடி கேட்டார்.

''அவனையே கேளுங்களேன்'' என்றார் சாமி.

ராஜா தயங்கியபடியே சொல்ல ஆரம்பித்தான்.

''தினமும் காலையில் எழும்போதும் - இரவில் படுக்கும்போதும் சாமி சொல்லிக் கொடுத்த மந்திரத்தை நூறு முறை சொல்லுவேன்... அந்த மந்திரத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டே படிக்க... ஆரம்பித்தேன்.. அதுதான்.. எனக்கு முதல்மார்க் வாங்கிக் கொடுத்தது....''

ராஜா தொடர்ந்து பேசினான் - ''இதுதான் அந்த மந்திரம், நான் முதல் மாணவன்.. நான் முயற்சி செய்தால் முடியாதது எதுவும் இல்லை.. முயற்சி உயர்ச்சி தரும்.. பயிற்சி பாதை காட்டும்...''

ராஜா இதைச் சொல்லி முடித்ததும், ராஜாவின் அப்பா, ''இதுவா மந்திரம்..?'' என்று நம்பிக்கை இல்லாமல் கேட்டார்.

சாமி பேச ஆரம்பித்தார்.

''உங்கள் பையனிடம் எல்லாத் திறமையும் இருந்தது... ஒழுக்கமான பையனாகவும் இருந்தான். அவனிடம் இல்லாமல் இருந்தது தன்னம்பிக்கை மட்டும்தான்...'' ராஜாவின் அப்பா சாமியின் கண்களையே பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஒருவன் எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும்... அவனிடம் தன்னம்பிக்கை இல்லாவிட்டால் அவனால் வெற்றிக்கனியைப் பறிக்க முடியாது...''

''அதுசரி.. அவனிடம் தன்னம்பிக்கை இல்லை என்று உங்களுக்கு எப்படித் தெரியும்...?''

சாமி கடகடவென்று சிரித்தபடியே ''வகுப்பு ஆசிரியனுக்கு இது கூடவா தெரியாது...? என்று கேட்டபடியே தனது தாடியையும், மீசையையும் இழுத்தார்.

ராஜாவின் வகுப்பு ஆசிரியர்!

ராஜாவுக்கும், அவன் அப்பாவுக்கும் ஆச்சரியம் தாங்க முடியாமல் விழித்தனர்.

''நீங்களா...?'' என்றார் ராஜாவின் அப்பா.

''மந்திரம் எப்படி...? என்றார் வகுப்பு ஆசிரியர்.

''சாமி சொன்ன மந்திரத்தை எப்போதும் நான் மறக்க மாட்டேன்'' என்று உணர்ச்சி வசப்பட்டு சொன்னான் ராஜா.

''முயற்சி செய்தால் முடியாதது எதுவும் இல்லை.. இந்த மந்திரம் ராஜாவுக்கு மட்டுமல்ல. எல்லா மாணவர்களுக்கும் பொருந்தும்'' என்றார் ஆசிரியர்.

**– சாம கோடங்கி சங்கரலிங்கம் எழுதிய**
**''காற்று சிரித்தது'' நூலிலிருந்து.**
**நன்றி... சிபா அறக்கட்டளை,**
**98ஏ, கூட்டுறவு நகர், திண்டுக்கல்.**



# ஒலிம்பிக் 1996

உலகத் தத்துவ மேதைகளில் ஒருவர் பிளேட்டோ, அவரது சீடர் அரிஸ்டாட்டில், கணிதமேதை பிதகோரஸ், மாவீரன் அலெக்சாண்டர் இவர்களைத் தொடர்ந்து, பல நூற்றாண்டுகளைக் கடந்து சங்கிலித் தொடராய் நாமும் மண்ணில் நடக்கும் மாபெரும் விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டிகளைக் கண்டுகொண்டிருக்கிறோம். இந்தப் பெருமையோடு, இன்னொரு தனிச்சிறப்பும் அட்லாண்டாவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டிக்கு உண்டு. ஆம் நவீன (Modern Olimpics) ஒலிம்பிக் போட்டிக்கு நூறு வயதாகிவிட்டது.

**வளர்ந்து சிறக்கும் வரலாற்று நிகழ்வுகள்**

வயது ஏற, ஏற அனுபவமும், ஆற்றலும் அதிகமாவதைப்போல, இந்தப் போட்டிகளிலும் பல சிறப்புகள், விஞ்ஞான வெளிப்பாடுகள் விளைந்து கொண்டேயிருக்கின்றன. விளையாட்டின் தொகையும், விரிந்துகொண்டே போகிறது. சான்றாக, 1896 ஆம் ஆண்டில் பாரன் பியரி டி கூபர்ட்டின் என்பார் ஏதென்ஸ் நகரில் தொடங்கியபோது பங்கு பெற்ற விளையாட்டுகள் 9 மட்டும்தான், வீரர்களோ 311 பேர் மட்டுமே. பங்கேற்ற நாடுகளோ 13 மட்டுமே. ஆனால் இன்று நடக்கும் அட்லாண்டா போட்டியில் 197 நாடுகளிலிருந்து, 10,800 வீரர், வீராங்கனைகள் 30 (26+4) வகையான விளையாட்டுப்பிரிவுகளில் பங்கேற்கின்றனர்.

அதுவும் பெண்களின் எண்ணிக்கை இதற்கு முன்னால் பார்சலோனாவில் (1992) நடந்த போட்டிகளில்கலந்துகொண்ட பெண்களைவிட 40 சதவீதம் பேர் அதிகம். அதாவது 3779 பேர்.

அட்லாண்டாவில் இன்னும் ஒரு சிறப்பும் உண்டு; மதவாத நாடான ஈரான் முதன்முதலாக ஒரு வீராங்கனையை அனுப்பியிருப்பதுதான் அது.

பெண்கள் இவ்வளவு ஆர்வத்தோடு கலந்து கொண்டு, சாதனை செய்யத் துடிக்கிறார்களே, கி.மு. 776 வாக்கில் ஏதன்ஸ் நகரிலுள்ள ஒலிம்பியாஸ் மலையில் முதன்முதலில் தொடங்கப்பட்டதாகவரலாற்றாய்வாளர்களால் கருதப்படும் ஒலிம்பிக் போட்டியில் எவ்வளவு சிறந்த அழகியாய் இருந்தாலும் பெண்களுக்குப் போட்டிகளைப் பார்க்கக்கூட அனுமதியில்லை. கலந்துகொள்வதுபற்றிக் கேட்கவே வேண்டாம்.

எவ்வளவு பெரிய, வீரனாக இருந்தாலும், அவன் அடிமையெனில் போட்டிகளில் பங்கேற்க முடியாது என்கிற நிலைமையிருந்தது. விளையாட்டுகளில் கலந்துகொள்ளும் ஆடவரனைவரும் எவ்வித ஆடையும் அணியக்கூடாது. அவர்கள்கிட்டத்தட்ட 10 மாதங்களுக்குக் குறைவின்றி பயிற்சி பெற்று, பின்னர் ஒலிம்பியாஸ் மலைக்கு வந்து ஒரு மாத காலம்தங்கி போட்டிகளில்பங்கேற்கவேண்டும் என்பது விதிமுறை. அந்தப் போட்டிகள் அனைத்தும் ஜீயஸ் என்கிற ஒரு கிரேக்கத் தேவதைக்குட்படைக்கப்பட்டவையாகத்தான். இருந்திருக்கிறது. ஒலிம்பிக் போட்டிகள் தொய்வின்றி கி.பி. 394 வரை நடந்துவந்து, பின்னர் என்ன காரணத்தாலோ நின்று போய்விட்டது.

**நூறுவயதாகும் இளமை**

அதன்பின் வரலாற்றுப்புகழ் தோய்ந்த ஏதென்ஸ் பெருநகரில், இனிமையான ஏப்ரல் மாதத்தில் ஆறாம் நாளன்று, தொடங்கிய இந்த



விளையாட்டு -கள் நான்காண்டு களுக்கு ஒரு முறை எனக் கெடுவைத்து இன்றுவரை தொடர் கின்றன. நூறு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. இளமைமாறாமல் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

முதல் உலகப்போரினால் 1916 ஆம் ஆண்டும், இரண்டாம் உலகப்போரினால் 1940- 44 ஆம் ஆண்டு களிலும் நடக்க வேண்டிய ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவில்லை.

பூமியில் நடைபெறும் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழா இது என்பதால் இப்போட்டிகளைத்தங்கள்நகரங்களில்நடத்திட வேண்டுமென்பதற்காகத் தொடக்கத்திலிருந்தே கடும் போட்டிகள் நிலவிவந்துள்ளன. சான்றாக, 26 ஆவது ஒலிம்பிக் போட்டிகளை நடத்த 1990 ஆம் ஆண்டு ஏதன்ஸ், பெல்கிரேடு, மான்செஸ்டர், மெல்போர்ன்போன்றநகரங்கள் கடுமையாக முயற்சித்தன. ஆனால், வாய்ப்பு அட்லாண்டாவிற்குக் கிடைத்தது. அதுமுதலே, அமெரிக்காவிலுள்ள அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகளை மிகச்சிறப்பாக நடத்திட திட்டமிட்டுச் செயல்பட்டது. ஏனென்றால், அமெரிக்கா நாட்டில் இதற்கு முன்னர் 1902 ஆம் ஆண்டில் செயின்ட் லூயிஸ் நகரிலும், லாஸ் ஏஞ்சல் நகரில் 1932 மற்றும் 1984 ஆண்டுகளில் இரண்டு முறையும் இப்போட்டிகள் நடந்துள்ளன. இப்போது நான்காவது முறையாக வாய்ப்பு கிடைத்ததால், உலகமே வியக்கும் வண்ணம் நடத்திட அமெரிக்கா பணிகளை மும்முரமாகச் செய்துள்ளது.

**தலைசிறந்த விளையாட்டரங்கம்**

தடகளப்போட்டிகள், கால்பந்து போட்டிகள் மற்றும் தொடக்கவிழா நிறைவு விழா நிகழ்ச்சிகள் நடத்த 85 ஆயிரம் பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய பிரம்மாண்டமான விளையாட்டரங்கம் நவீன வசதிகளுடன் கட்டப் பட்டுள்ளது. இது தவிர, வாட்டர் போலோ விளை யாட்டரங்கு, சைக் கிள்பந்தய அரங்கம், போன்றவை புதிதாகக் கட்டப்பட்டுள்ளன.





வீரர், வீராங்கனைகள், அலுவலர்கள் கிட்டத்தட்ட 16 ஆயிரம் பேர் தங்கக்கூடிய ஒலிம்பிக் கிராமம் அனைத்து நவீன வசதிகளுடன் குளிர்பதன வசதியுடன் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

இத்துடன் 21 ஏக்கர் நிலபரப்பில் அமைக் கப்பட்டுள்ள பசுமை நிலவும் ஒலிம்பிக் பூங்கா, மலர்வனம் நிறைந்த ஏதென்ஸ் நகரை நினைவுப் படுத்தும். குளிர்பதனம் செய்யப்பட்ட கூடாரங் கள், விருந்தினர்கள் மற்றும் வீரர்கள் தங்க அமைக்கப்பட்டுள்ளன.

அறுசுவை, மணங்கமழும் அட்லாண்டா சமையல்!

நிறத்தால், மொழியால், இனத்தால், நிலத்தால் வேறுபட்ட மக்கள் கூடுகிற இவ்விளையாட்டு விழாவில் கலந்து கொள் கிறவர்களுக்கு வாய்க்கு ருசியாகச் சமைத்து உணவு வழங்க, சர்வதேச உணவு வகைகளைத் தயாரிக்கும் சிறப்புப் பெற்ற 1000 சமையற் காரர்கள் 24 மணிநேரமும் கிட்டத்தட்ட 500க்கும் மேற்பட்ட உணவு வகைகளைச் சமைத்துப் பரி மாற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் 26 மிகப் பெரிய இரும்புப் பெட்டிகளிலிருந்து உணவுப் பொருள்கள் கொண்டுவரப்படுகின்றன.

**இயற்கையை விஞ்சும் செயற்கை நீரூற்றுகள்**

18 கி. மீட்டர் சுற்றளவுக்குச் சுற்றுச்சுவர்கள் அமைக்கப்பட்டு அக்கிராமத்துள் வெப்ப நிலையைச் சீர்படுத்துவதற்காகப் பார்க்கு மிடங்களெல்லாம் செயற்கை நீரூற்றுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கழிப்பிட வசதிகள், 192 மக்கள் நல மேம்பாட்டு மையங் கள், பாதுகாப்பிற்காக 35 ஆயிரம் காவலர் கள் 2000 காவல்





அலுவலர்கள் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சொகுசுப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டு, அட்லாண்டா நகரம் மண்ணில் முளைத்த மாபெரும்சொர்க்கமாகத்திகழ்கிறது.

**சோர்வின்றித் தங்க, பார்வையாளர்களுக்கு இடவசதி**

பார்வையாளர்களுக்காக 30 ஆயிரம் தனியார் வீடுகள் வாடகைக்குக் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதில் 1000 பங்களாக்களும், 1500 அடுக்குமாடி குடியிருப்புகளும் அடங்கும். 200 க்கும் மேற்பட்ட ஓட்டல் வசதிகளும் உண்டு.

நகரிலுள்ள ஓட்டல்களில் ஜப்பானியர்கள் 28.1சதவீதமும், ஜெர்மானியர்கள்22.8சதவீதமும் பிரெஞ்சுநாட்டினர்15.8சதவீதமும் ஆங்கிலேயர்கள் 14 சதவிதத்தினரும், ஏற்கெனவே ஓட்டல்களில் முன்பதிவு செய்து வைத்துள்ளதாக ஒரு கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

**தங்கத்திற்கு இணையான தண்ணீர் விலை**

அனுமதிபெற்ற தண்ணீர் விற்பனையாளரான 'கிறிஸ்டல் ஸ்பிரிங்ஸ்' எனும் நிறுவனம் 16 அவுன்ஸ் தண்ணீர்கொண்ட புட்டி ஒன்றின் விலை 95 ரூபாய் என விற்றுப் பெரும்பணம் பண்ணுகிறது.

**இருந்த இடத்திலிருந்து விளையாட்டு விருந்து**

1936 ஆம் ஆண்டு ஹிட்லர் 20 சின்னத் திரைகளை பெர்லின் நகரெங்கும் அமைத்து ஒலிம்பிக் போட்டிகளை விளையாட்டரங்குக்கு வெளியே மக்களுக்குத்திரையிட்டுக்காட்டினார். அதனைத் தொடர்ந்து செயற்கைக்கோள் துணைகொண்டு உலகெங்கும் நேரடி ஒளிபரப்புச் செய்து மக்களுக்கு விளையாட்டுக் காட்சிகளை வீடுகளுக்கு எடுத்துச் சென்றார்கள்.



அட்லாண்டா போட்டிகளை 3.5 மில்லியன் மக்கள் தொலைக்காட்சி வழியே கண்டுகளிக்கிறார்கள். இது உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் என்கிறார்கள். இதற்கான அனுமதியை என்.பி.சி நிறுவனம் 456 மில்லியன் டாலர் கொடுத்து குத்தகைக்கு எடுத்துள்ளது. வேடிக்கை என்னவெனில் 165 மணிநேரத்திலேயே 650 மில்லியன் டாலர் அளவுக்கு விளம்பரம் மூலமே சம்பாதித்துவிட முடியும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.




**அறிவியல் தொழில் நுட்பம் செறிந்த அட்லாண்டா**

அட்லாண்டா ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரை இல்லாத அளவுக்கு விஞ்ஞானத் தொழில் நுட்பம் கையாளப்பட்டுள்ளது. மராத்தான் ஓட்டத்தில் பங்கேற்கும் வீரர்களின் காலணிகள் லேஸ்களில் மைக்ரோ சிப்ஸ்' துண்டுகள் இணைக்கப்பட்டு ஓட்டத்தையும் நேரத்தையும் மிகத்துல்லியமாகக் கணக்கிடப்படுகிறது.

தடகளப்போட்டிகளில் லேசர் ஒளிக்கதிர் மூலம் வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். அதாவது ஒரு நொடிக்கு 100 புகைப்படங்கள் எடுத்துத்தள்ளும் கேமராக்கள் பயன்படுத்தப்படுகின்றன. விஞ்ஞானத்தின் முழுப்பரிமாணமும் ஒருங்கே பயன்படுத்தப்படும் உன்னதம் அட்லாண்டாவில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

உலகளவில் பேசப்படும் அதிகவேக ஓட்டக்காரர்கார்ல்லூயிஸ், மைக்கேல்ஜான்சன், ஜாக்கி ஜெயினர் ஆகியோர் கலந்து கொள்ளும் அட்லாண்டாவில் 77 பேர் அடங்கிய இந்திய அணி13விளையாட்டுகளில்கலந்து கொள்கிறது.



# ஆசிரியர் மடல்

பாக்கிய லட்சுமி, சௌபாக்கியம், மேழிச் செல்வம், இன்காம், ஆரோக்கிய மார்க்கம், மெட்ராஸ் ஹெல்த் எஜுகேஷன், சீரணி (கிராம நலம்) ஆகிய 7 பத்திரிகைகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டதுதான் உங்கள் கரங்களை அலங்கரித்திடும் 'தமிழரசு'.

1.7.1970ல் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் திங்களிருமுறை ஏடாகத் தொடங்கப்பட்டது; இப்போது 27 ஆம் ஆண்டில் நடைபோட்டுக்கொண்டிருக்கிறது. அரசின் அறிவிப்புகள், ஆக்கப் பணிகள் பற்றிய விளக்க ஏடாக மட்டுமல்ல; இலக்கிய மணம் பரப்பும் இனிய ஏடாகவும், தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடும் தரம்மிக்க ஏடாகவும் திகழ்கிறது. இப்போது, புதிய அரசு மலர்ந்தபின் 'தமிழரசு' பெற்றுள்ள சிறந்த பல மாற்றங்களை பிற ஏடுகளும் கூட பெரிதும் போற்றிப் புகழ்ந்து எழுதுகின்றன.

ஏறக்குறைய 70க்கும் மேலான வெண்பாப் போட்டிகள், விருத்தப்பாப் போட்டிகள், சிறுகதைப் போட்டிகளெல்லாம் நடத்தி வாசகர்களுக்குப் பரிசு பல வழங்கிப் பாராட்டிய பெருமை 'தமிழரசு'க்கு உண்டு. மீண்டும் அத்தகைய செயல்பாடுகளை நடைமுறைப்படுத்த எண்ணி, கவிதைப்போட்டியொன்று 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்ற தலைப்பிலே அறிவித்தோம். 15.7.96 அதற்கான கடைசித் தேதி என்றும், 16 அடிகளுக்குள் - மரபுக் கவிதையோ, புதுக்கவிதையோ எழுதலாம் என்றும் தெரிவித்தோம்.

நூற்றுக்கணக்கான கவிதைகள் வந்து குவிந்திருக்கின்றன. அதில் பெரும்பாலான தமிழன்பர்கள் - இருந்த அரசை இகழ்ந்தும், இருக்கும் அரசைப்புகழ்ந்துமே வரம்புகடந்த அளவுக்கு எழுதியுள்ளனர். அரசியல் இல்லாமல் அரசு இல்லைதான்; அதற்காக முழுக்க முழுக்க அரசியலாகவே இருந்தால் எப்படி?...

கண்மூடிப்பழக்கமெல்லாம் மண்மூடிப்போகச் செய்வதாக - சீர்திருத்தக் கருத்துக்களுக்கும் சுயமரியாதை எண்ணங்களுக்கும் நடைபாவாடை விரிப்பதாக - புரட்சிகரமான நினைவுகள் பூத்திடச் செய்வதாக - தமிழ் வளர்ச்சிக்கும், அதன் அடிப்படையில் பாடுபடும் அரசுக்கும், தக்க பல ஆலோசனைகளுக்கு வித்தூன்றுவதாக எழுத்தாளப் பெருமக்களின் எழுத்தோவியங்கள் இனியாவது மலரட்டும்!

பத்மவாசன்



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA 7556.35

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

